

கல்கி

KALKI 26-3-1972 45 காசு



My My!

My choice for the MAN

Century's *Cosy-Cot* COTTON SHIRTING with rich woollen feel

CENTURIZED
PRESHRUNK FABRIC

CENTURY for 100% cotton textiles

THE CENTURY SPG. & MFG. CO. LTD., BOMBAY 25 DD

For Fashion Fabrics choose *Century Shirtings!*

NPS-CM 15

கல்கி



பொருளடக்கம்

விரோதிக்ருது பங்குனி, 13 - மார்ச் 26, 1972

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 23-00	ரூ. 11-50
இதர நாடுகள்	ரூ. 50-00	ரூ. 25-00
இலங்கை (இலங்கை நாணயம்)	27-00	ரூ. 13-50

கல்கி
மலர் 31
இதழ் 35

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
— பாரதியார்

முன்னேற்றத்துக்கு வழியல்ல

'வருகிறேன் வருகிறேன்' என்று பயமுறுத்திய புலி வந்தேவிட்டது. இவ்வாண்டு பட்ஜெட்டில் 183 கோடி ரூபாய் வசூலிக்கப் புது வரிகள் போடப் பட்டுள்ளன. இத்துடனாவது அரசாங்கத்தின் வரவு செலவு சரிக்கட்டப்பட்டு விட்டதா என்றால் அதுவும் இல்லை. இன்னும் பற்றாக்குறை 242 கோடி ரூபாய் அளவுக்கு இருக்கிறதாம். இதை வரி போட்டு நிரப்ப வகை செய்யாமல் விட்டு வைத்திருக்கிறார்கள் காருண்ய மிக்க மத்திய சர்க்கார்.

பாகிஸ்தான் போர், அகதிகள் செலவு, பங்களா தேசத்துக்கு உதவி என்றெல்லாம் ஏற்கெனவே காரணங்கள் சொல்லி வரிச் சுமை ரொம்பவும் பளுவாகத்தான் இருக்கும் என்று மக்களை எதிர்பார்க்க வைத்திருந்ததால் இப்போது வரிகள் இவ்வளவோடு நின்றனவே என்று நிம்மதியடையத் தோன்றும். ஊன்றிக் கவனித்துப் பார்த்தால் தான் இவ்வரிகளின் விளைவுகள் எவ்வளவு பயங்கரமானவை என்பது தெரியும்.

எந்த லட்சியங்களை அடைவதற்காக வரிகள் விதிக்கப் படுகின்றன, விதித்துள்ள வரி முறைகளால் அவற்றை அடைய முடியுமா என்பதை ஆராய்தல் அவசியம்.

பட்ஜெட்டுக்குச் சில நாட்கள் முன்னதாக நாட்டின் பொருளாதார நிலைமை பற்றி ஓர் அறிக்கையை ஆண்டுதோறும் அரசாங்கம் வெளியிடுகிறது. இந்த ஆண்டு அது வெளியிட்டுள்ள அறிக்கையில் வரிகளின் லட்சியங்கள் என்னவாக இருக்கும் என்று தெளிவாகவே எடுத்துச் சொல்லியிருக்கிறது.

"நிலையான விலைவாசிகள் இல்லாவிட்டால் தொழில்களில் முதலீடு செய்யப் படுவது குறையும். ஏற்றுமதியைப் பெருக்கவும் முடியாது. மாறாக இறக்குமதி அதிகமாவதற்கே உயர்ந்த மட்டத்தில் நிலவும் உள்நாட்டு விலைகள் காரணமாகும். உள்நாட்டு விலைவாசிகள் அதிகமாக இருப்பதாலேயே தொழில்களில் முதலீடு செய்யத் தொழிலை இயக்குபவர்கள் தயங்குகின்றனர்" என்று அந்த அறிக்கை கூறுகிறது.

ஆகவே ஸ்திரமான விலைவாசிகளை நிலைநாட்டவும், தொழில் வளம் பெருகவும், ஏற்றுமதி அதிகரிக்கவும் வரிகள் சாதகமாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

நாட்டில் விலைவாசிகள் கடந்த ஓராண்டு காலமாக உயர்ந்து கொண்டே போகின்றன என்பதற்கு ரிசர்வ் பாங்கி புள்ளி விவரங்கள் கொடுத்திருக்கிறது. ஆனால் கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா? விலைவாசிகள் எவ்வளவு உயர்ந்துள்ளன என்பதை ஒவ்வொரு குடும்பமும் நாளுக்கு நாள் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறது?

வரி விதிப்பினால் விலைகள் அதிகமாக உயருகின்றனவா, பற்றாக்குறையைச் சரிக்கட்ட நோட்டுக்கள் அச்சடித்துப் புழங்க விடுவதால் அதிகமாக உயருகின்றனவா என்பது நுட்பமான ஆராய்ச்சி. இரண்டுக்கும் இடையில் ஒரு சிறிய வித்தியாசம். பற்றாக்குறை என்று நோட்டு அச்சடித்துப் புழங்க விடுவதால் நாட்டின் பொருளாதாரம் முழுவதிலும் சீர்கேடு பரவும். வரி விதிப்பினால் குறிப்பிட்ட இனங்களின் விலைகள் முதலில் உயரும். பின்னர் இது மற்ற இனங்களுக்கும் படிப்படியாகப் பரவும். எப்படியும் விளைவு என்னவோ ஒன்றுதான் — விலைவாசிகள் உயர்வது.

நிதி அமைச்சர் சாவன், பல இனங்களின் மீது இறக்குமதி சுங்க வரிகளையும் உள்நாட்டு உற்பத்தி வரிகளையும் உயர்த்தியுள்ளதன் விளைவாக விலைவாசிகள் உயரும். அந்த அளவுக்குத் தொழில் வளர்ச்சியும் உற்பத்தியும் தடைப்படும்.

நிதி அமைச்சரோ தொழில் முன்னேற்றம் மந்த கதி அடைந்துவிட்டதென்றும், உற்பத்தியில் பெருமளவு சுணக்கம் ஏற்பட்டு விட்டதென்றும், இவற்றை ஊக்குவிக்க வேண்டும் என்றும் அடிக்கடி சொல்லுகிறார். எஃகுப் பொருள்கள், அலுமினியம், ரப்பர், ரேயான் நூல்கள், செயற்கைப் பட்டுகள், மற்றும் தொழில்களுக்குத் தேவைப்படும் மூலப்பொருள்கள் மீது பரவலாக விதிக்கப்பட்டுள்ள புதிய உற்பத்தி வரிகளும், புதிய சுங்க வரிகளும் பொருளாதார முன்னேற்றத்தைத் தடை செய்யுமே தவிர, ஊக்குவிக்காது. மேலும் இறக்குமதியைக் குறைத்து

அவ்வினங்களில் உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கும் நோக்கமும் நிறைவேறாது.

சமூக நலனும், சமதர்மமும் பெருக வேண்டும் என்பது அரசாங்கத்தின் லட்சியம். வறுமை ஒழிப்புக் கோஷத்தின் மறு வாசகம் தான் இது. இதை வாய் கூசாது கூறும் அரசாங்கம்தான் கைகூசாமல் லிட்டருக்கு ஆறு காசு விதம் ஏழை மக்கள் உபயோகிக்கும் மண்ணெண்ணெய்க்கு வரி போட்டிருக்கிறது. கிராமப்புறங்களில் மண்ணெண்ணெய்தான் விளக்கு எரிக்கவும், அடுப்பு எரிக்கவும் அதிகமாக உபயோகமாகிறது. இந்த ஒரு புது வரியினால் மட்டுமே கிராமங்களில் வாழும் ஒவ்வொரு ஏழைக் குடும்பமும் நகரங்களில் வாழும் மத்தியதரக் குடும்பங்களும் முன்னைவிட அதிகமாகச் செலவழிக்க வேண்டியிருக்கும். அதாவது அரசாங்கத்துக்கு மறைமுக வரி கொடுக்க வேண்டியிருக்கும். விவசாயிகள், கூலிக்காரர்கள், கடைநிலையில் வாழ்வோர், தொழிலாளிகள் ஆகியோர் செலுத்தும் காணிக்கை இது. அரசாங்கத்தின் சமதர்மம் நடைமுறையில் செயல்படும் விதம் இதுதான்!

மற்றொரு வரி ரசாயன உரங்களின் மீது போடப்பட்டுள்ள வரி. பதினைந்து ஏக்கராவுக்குமேல் நிலம் வைத்திருப்பவர்கள்தான் இதனால் பாதிக்கப்படுவார்கள் என்று எண்ண வேண்டாம். 'ரசாயன உரம் அதிகமாகப் போட்டு விளைச்சலைப் பெருக்குக' என்று ஓயாது நடத்திய பிரசாரத்தின் விளைவாக, பசுமைப் புரட்சி ஏற்படுத்தியவர்கள் சிறு விவசாயிகளும் ஆவார்கள். இவர்கள் ரசாயன உரத்தை உபயோகித்தால் இனி இந்தப் புது வரியினால் பாதிக்கப்படுவார்கள்.

இரண்டு முறை வரிகள் இந்த ஆண்டு போடப்பட்டதின் பிறகு, இப்போது மூன்றாவது முறையாக வரிகள் போடப்பட்டுள்ளன என்பதைக் கவனத்தில் வைத்துக்கொண்டு பார்த்தால் எந்த நன்மைகளைக் கருத்தில் கொண்டு வரிகள் விதிக்கப்பட்டனவோ அந்த நோக்கங்களில் ஒன்றுகூட நிறைவேறாது என்பது விளங்கும். விலைவாசிகள் பரவலாக நிச்சயமாக உயரும். தொழில் விஸ்தரிப்பு ஏற்படுவது சந்தேகம். பொருளாதார முன்னேற்றம் உண்டாகாது.

ராஜாஜியின் கருத்துக்கள்

விலைவாசி உயர்வு

இந்தியாவின் அயல்நாட்டுக் கொள்கைகள் தற்போது எவ்வாறாக இருக்க வேண்டும் என்ற கேள்வியை ஒதுக்கி வைத்துவிட்டு, பட்ஜெட்டில் துண்டு விழும் தொகைகளை அரசினர் சரிக்கட்டும் முறை சரியானதுதானா என்று சிந்திக்க வேண்டிய கட்டம் இது. அரசினர் பட்ஜெட்டில் துண்டு விழும் தொகையை சரிக்கட்டப் புதிய வரிகளை விதித்துக் கொண்டே போகின்றனர். இதன் நிகர விளைவு என்னவெனில் நாட்டிலுள்ள ஏராளமான ஏழை, நடுத்தர வர்க்கக் குடும்பங்களின் பட்ஜெட்டுகளில் துண்டு விழுகிறது. அதாவது மத்திய அரசின் கணக்கில் துண்டு விழும் பெருந் தொகை பல பகுதிகளாகப் பிரிந்து ஏராளமான நடுத்தர, ஏழைக் குடும்பங்களின்மீது சுமத்தப்படுகிறது. வீட்டில் பற்றாக்குறை பட்ஜெட் காரணமாக அந்தக் குடும்பங்கள் வேதனை அடைந்து தவிக்கின்றன. விலைவாசி உயர்வு ஒரு குறிப்பிட்ட பொருளுக்கு மட்டும் ஏற்படுமாறு கட்டுப்படுத்துவதற்கில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஒரு பொருளின் விலை கூடினால் மார்க்கெட்டில் எல்லாப் பொருள்களின் விலைகளும் ஏறும்.

தேர்தல் வெற்றி தர்மத்தின் தோல்வி

தேசமெங்கிலும் சட்டசபைத் தேர்தல்கள் முடிந்துவிட்டன. எதிர்பார்த்ததே நடந்தது. பிரதமரும் அதிகார பீடத்திலுள்ள மற்றவர்களும் காட்டிய சபலங்களுக்கு மக்கள் ஆளானதில் வியப்பதற்கு எதுவும் இல்லை.

நாடு ஏதேச்சாதிகாரத்தை நோக்கிச் செல்வதற்குத் தொழிலதிபர்கள் உதவி செய்துவிட்டனர். அவர்கள் தங்களுக்குத் தீங்கு உண்டாகாமல் காத்துக் கொள்ளக் கருதி ரகசியமாகவும் சட்டத்துக்கு முரணாகவும் இந்திரா காங்கிரசுக்குப் பெருத்த பண உதவி தந்திருக்கிறார்கள். ஆட்சியில் உள்ளவர்களை ஆதரிக்காவிட்டால் எவ்விதத்தில் கொடுமைப்படுத்துவார்களோ என்ற பயத்தில் விவேகத்தை இழந்து உதவி செய்திருக்கிறார்கள்.

ஸ்ரீமதி இந்திரா காந்தியின் வெற்றிகளைக் குறித்து வெளியே மகிழ்ச்சி கோஷம் எழுப்புவார்கள். ஆனால் இந்தத் தேர்தல் வெற்றி தருமத்தின் வெற்றி அல்ல என்பது நன்கு தெரிந்த விஷயம். மனச்சாட்சி இல்லாமல் காரியத்தை நடத்திக் கொள்ளும் சாதுரியத்துக்கே வெற்றி கிடைத்திருக்கிறது.

பெர்மிட் லைசென்ஸ் ஏகபோக்கியம் ஆளும் காங்கிரஸின் கையில் உள்ளவரையில் எவ்வித நியாயமும் இல்லை; மாறாக அவர்கள் வெட்கம் கொள்ளவே நிறைய நியாயம் உள்ளது.

''அன்பான மக்களே, நான் கொலை செய்யப்படுகிறேன். என்னைக் காப்பாற்றுங்கள், தேசத்தைக் காப்பாற்றுங்கள்'' என்று தர்ம தேவதை கதறுகிறது. தர்மத்தைக் காப்பதொன்றே இன்று உண்மையான அரசியல். அதுவே சமூக சமநீதிக்கு உண்மையான வழி. மற்ற காரியங்களெல்லாம் வெறும் மோசடியும், ஏமாற்று வித்தையும், மயக்குத் திறனும் தாம். இவ்விஷயம் முன்பே கூறியிருக்கிறேன். ஆயினும் இது மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூற வேண்டிய விஷயம். இதனைத் தேசப்பற்றுள்ள அனைவரும் உணர வேண்டும். நிலைமையை எதிர்த்து நாம் இப்போதே உறுதி

யாக நின்று போராடாவிடில், அது வெகு விரைவில் தேச வாழ்வில் ப்ரளி ஊடுருவிவிடும்.

இந்திராவுக்கு அறிவுரை

வெற்றிக் கோஷங்களாலும், இச்சகம் பாடிப் பிழைப்பவர்களாலும் கவரப்பட்டு ஸ்ரீமதி இந்திரா காந்தி தமது இயல்பான சாமர்த்தியத்தை இழக்காதிருக்க வேண்டும் என்று 'தரிம்மத்' பத்திரிகை எச்சரிக்கிறது. நல்ல புத்திமதிதான். ஆனாலும் இந்தியாவின் மீது பகவானின் கிருபை பாய்ந்து வந்தால் ஒழிய, இந்தப் புத்திமதி ஸ்ரீமதி இந்திராவுக்கு ஏறுவது துர்லபமே. நான் அடியோடு நம்பிக்கை இழந்து விடவில்லை. ஈசுவர சங்கற்பத்தில் இந்தியா ஒரு பெரிய பணியைச் செய்தாக வேண்டும் என்றே இன்னமும் நம்புகிறேன். இந்தப் பணியை ஆற்றுவதில் ஸ்ரீமதி இந்திரா காந்தியே பகவானின் கருவியாக இருந்தாலும் இருக்கலாம்.

மதுவின் கொடுமை

சென்ற வருஷம் ஆவணி மாதம் (1929ம் ஆண்டு ஆகஸ்டு மாதம்) திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில், ''விமோசனம்'' என்கிற மாதப் பத்திரிகை என்னால் தொடங்கப்பட்டு மாதா மாதம் பிரசுரமாயிற்று. நாற்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மதுவிலக்குப் பற்றித் தீவிரப் பிரசாரம் இந்தப் பத்திரிகை நடத்தி வந்தது. கூட்டமே இல்லாமல் பிரசாரத்தின் பலத்தினாலேயே அநேக ஏலங்கள், கோருகிறவர்கள் இல்லாத காரணத்தினால் நடக்கவில்லை. மதுபானக் கடைகளிலும் வியாபாரம் நடைபெறவில்லை. அந்த மதுவிலக்குப் பிரசாரத்தில் உடுமலைப்பேட்டை வேலப்ப நாயக்கருடைய தீரச் செயல்களையும் பணியையும் நான் என்றும் மறக்கமாட்டேன். இப்பொழுது தி. மு. க. சர்க்கார் மதுபானக் கடைகளையெல்லாம் திறந்துவிட்டிருப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம். நாற்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன் ''விமோசனம்'' பத்திரிகையில் வெளியிடப்பட்ட கார்ட்டூன்களுள் சிலவற்றை எதிரே வாசகர்கள் காணலாம்.

அமெரிக்காவின் துராசை

இந்தியாவின் பெருத்த ராணுவச் செலவு குறையாமல் இருக்கச் செய்வதில் அமெரிக்க சர்க்கார்

இது சீசா அல்ல, இது மனைவி மக்களைச் சாகடிக்கும் யமன்.





ஜய பேரிகை கொட்டடா - கொட்டடா
ஜய பேரிகை கொட்டடா!
காந்தியின் ஒளியிடைக் குளித்தோம் - கள்ளின்
மாயத்தை யறிந்து கண்விழித்தோம்!
தீர்ந்தது தரித்திரம் தொலைந்தது துயரம்
தீய கள்ளரக்கனை யடித்தோம்!

(பாரதியாரின் இசை)



மூண்டிருப்பதாகக் காண்கிறது. இப்போது எஞ்சியுள்ள பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையே துவேஷ உணர்ச்சி மாறாமலே நீடிக்கச் செய்வதிலும் அமெரிக்கா முனைப்பாக இருக்கிறதென அஞ்சக் காரணம் உள்ளது. இது மகத்தான பரிதாபம்.

அநியாயத் திட்டம்

தமிழ் நாட்டு முதன் மந்திரி, தமது விவசாயக் கடன் நிவாரணத் திட்டம், முன்பு 1937ல் நான் கொண்டுவந்த திட்டத்தின் அடிப்படையில் அமைந்தது என்று எண்ணுவதாகத் தோன்றுகிறது. கடன் வாங்கியவரிடமிருந்து கடன்கொடுத்தவர் அசல் தொகையைப்போல் இரு மடங்குக்கு மேல் வட்டியாகப் பெற்றுவிட்டால், அசலையும் செலுத்தியதாகக் கருதிக் கடனை ரத்து செய்துவிட வேண்டும் என்பது புராதனமான ஹிந்து தர்மக் கொள்கை. இதற்கு 'தண்டுபட்' என்று பெயர். 1937ல் கொண்டு வந்த திட்டம் இந்தத் தர்மத்தை அடிப்படையாகக் கொண்டதே. ஆனால் இப்போது தமிழக சர்க்கார் செய்துள்ள திட்டப்படி குத்தகைதாரர் உரிமையாளருக்கு நியாயமாகச் சேர வேண்டியதையும் வேண்டுமென்றே செலுத்தாமலிருப்பதற்கு வசதி ஏற்படுகிறது. இந்தத் திட்டத்துக்கும் 1937ம் வருடத் திட்டத்துக்கும் இடையே உள்ள வித்தியாசம், நியாயத்துக்கும் அநியாயத்துக்கும் இடையே உள்ள வித்தியாசம் எவ்வளவோ அவ்வளவாகும். சிறு பண்ணைகளின் உரிமையாளர்கள் — குறிப்பாகப் பெண் உரிமையாளர்கள் — இந்தத் திட்டத்தால் துயரகரமான அநீதத்தை அநுபவிப்பார்கள். இது கொள்கையற்ற திட்டம். மனமறிந்து தவறு செய்வதற்கு ஊக்கம் தருவது இத்திட்டம்.

மாநில சுயாட்சி


மாநில சுயாட்சிக் கோஷத்தை கருத்தரங்குகளில் வெறும் சித்தாந்த ரீதியில் நிலை நாட்டி விடலாம். ஆனால் இன்றுள்ள நிலைமையில் அது காரியரீதியில் அனர்த்தமே உண்டாக்கும். வரிகளும் தீர்வைகளும் மத்திய சர்க்காரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. இத்துறையில் ராஜ்ய சர்க்காரின் அதிகார வரம்பு மிகவும் குறுகலானது. ராஜ்ய சர்க்காரானது தன் வசமுள்ள ஒரு வரி விகிதத்தை ஆலோசனையின்றி உயர்த்துமாயின் அந்த அரசாங்கம், அதை நடத்தும் தலைவர்கள் ஆகியோர் தற்கொலை செய்து கொண்டது போன்ற விளைவே உண்டாகும். ராஜ்ய சர்க்கார் விதிக்கும் வரி உயர்விலும் மக்களின் கஷ்டம் பெருகி, அரசாங்கத்திடம் அவர்களது விசுவாசம் குன்றிவிடும்.

பெர்மிட் — லைசென்ஸ் விநியோகப் பொறுப்பு மத்திய சர்க்காரின் வசத்திலும் இல்லாமற் செய்தாலே நாட்டில் தூய்மை உண்டாகுமேயன்றி, 'மாநில சுயாட்சி' என்கிற பெயரில் ராஜ்ய சர்க்கார்களும் இப்பொறுப்பில் பங்கு பெற்றால் ஊழல் மேலும் ஓங்கும். தேசியப் பொருளாதாரம் ஆரோக்கியம் பெற்று, நிர்வாகத்தில் தூய்மை ஏற்படவேண்டுமாயின் பெர்மிட் — லைசென்ஸ் ராஜ்யம் அடியோடு ஒழிய வேண்டும். ரண சிகிச்சையே தேவை; விக்ஸாம் அமிர்தாஞ்சனமும் தேய்த்தால் போதாது!

சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு

அர்ச்சகர்கள் போட்ட ரிட் விண்ணப்பங்களை சுப்ரீம் கோர்ட்டார் தள்ளிவிட்டார்கள் என்று சுருக்கமான செய்தியைப் பத்திரிகைகளில் வாசகர்கள் படித்திருக்கலாம். பரம்பரை பாத்தியதை பற்றி சுப்ரீம் கோர்ட்டாருடைய அபிப்பிராயம் இது என்ற அளவில் இந்தச் செய்தி சரியானதே. ஆனால் ஹிந்து பத்திரிகை (15—3—72) 10ம் பக்கத்திலும், இந்தியன் எக்ஸ்பிரஸ் (16-3-72) 10ம் பக்கத்திலும் சுப்ரீம் கோர்ட்டாருடைய முழு தீர்ப்பும்வெளியாகியிருக்கிறது. இதைப் படித்தால் தான் சுப்ரீம் கோர்ட்டார் தீர்மானத்தின் முக்கியமான விஷயங்களை அறிய முடியும்.

எந்தக் கோயிலிலும் சம்பிரதாயத்துக்கு விரோதமாக அர்ச்சனையோ வேறு பூஜை சடங்கோ செய்வதற்கு இடமில்லை. அப்படிச் செய்யும்படி தமிழ் நாட்டுச் சர்க்கார் ஏதாவது விதிகள் ஏற்படுத்தியிருந்தால் அவை செல்லாது என்று தெளிவாக சுப்ரீம் கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். அந்தந்தக் கோயிலின் சம்பிரதாயத்துக்கு எந்த விதத்திலும் மாறுதல் செய்து உத்தரவுகள் பிறப்பிக்கச் சர்க்காருக்கு அதிகாரம் இல்லை என்று சுப்ரீம் கோர்ட்டார் தீர்ப்பில் தெளிவாக எழுதியிருக்கிறார்கள்.



அறம்-பொருள்-இன்பம்-வீடு



ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

தர்ம — அர்த்த — காம — மோக்ஷங்களுக்கு ஸாதனமாக இருப்பது மதம். இந்த நான்கையும் புருஷார்த்தங்கள் என்பார்கள்.

அர்த்தம் என்பதைத் தமிழில் பொருள் என்று சொல்லுவார்கள். 'காமம்', 'மோக்ஷம்' என்பவைகளை 'இன்பம்', 'வீடு' என்பார்கள். புருஷார்த்தம் என்பதில் 'அர்த்தம்' என்னும் வார்த்தை இருக்கிறது. முன்பு சொன்ன நான்கிலும் ஓர் அர்த்தம் இருக்கிறது. 'அர்த்தித்தல்' என்றால் 'வேண்டுமென்று நினைத்தல்'. புருஷன், அதாவது பிராணிகளாகப் பிறந்தவர்கள், தனக்கு வேண்டுமென்று எவைகளை நினைக்கிறார்களோ அவைகள்தாம் புருஷார்த்தங்கள். எதை மனிதன் வேண்டுமென்று நினைக்கிறான்? குறைவில்லாமல் சந்தோஷமாக இருக்க வேண்டுமென்று அவன் நினைக்கிறான். அந்த சந்தோஷம் இரண்டு விதம். கொஞ்ச நாழிகை இருப்பது ஒரு விதம்; எப்பொழுதும் குறையாமல் இருப்பது மற்றொரு வகை. கொஞ்ச நாழிகை சந்தோஷம் உண்டாவது தான் இன்பம் அல்லது காமம். காமம் என்பது எல்லாவித உலக ஆசைகளையும் குறிக்கும். ஒருமுறை வந்துவிட்டால் எந்தக் காலத்திலும் போகாத பேரின்பம் மோக்ஷம் — வீடு. அந்தப் பேரின்பத்தின் பெருமை தெரியாததால்தான் காம இன்பம் வேண்டுமென்று மனிதர்கள் நினைக்கிறார்கள்.

ஆகவே, நாம் உண்மையில் வேண்டுமென்று நினைக்க வேண்டியது நான்காவதாகிய வீடு. இப்பொழுது நடைமுறையில் வேண்டுமென்பதோ மூன்றாவதாகிய இன்பம். நாம் சாப்பிடுவதனால் ஆனந்தம் உண்டாகிறது. அது ஓர் இன்பம். ஹைகோர்ட் ஜட்ஜாக இருந்தால் அதுவும் ஒருவகை இன்பம். நல் வரவு பத்திரம் வாசித்துக் கொடுத்தால் ஓர் ஆனந்தம்; அதுவும் இன்பந்தான். இந்த இன்பங்கள் சாசுவதமல்ல. இந்தச் சில்லறை இன்பத்தை எதனால் சம்பாதிக்கிறோமோ அது பொருள். அது தானியமாக இருக்கலாம், பணமாக இருக்கலாம், வீடாக இருக்கலாம், மனிதர்களாக இருக்கலாம். பொருளே இன்பத்துக்குச் சாதனம். இந்த இன்பத்தைச் சிறிது பொழுதில் அநுபவித்துத் தீர்த்து விடுகிறோம். மறுபடி இன்பம் வேண்டும் என்ற தவிப்புத் தொடங்குகிறது.

இதற்கு மேல் ஒன்று வேண்டும் என்று தோன்றச் செய்யாத நிலைத்த பேரின்பமே மோக்ஷம். அதுதான் வீடு. நாம் எல்லாம் சுற்றுகிறோம். அலைந்து கஷ்டப்படுகிறோம். நாம் வந்து அடைய வேண்டியது சொந்த வீடு. ஜெயிலில் ஒருவன் இருக்கிறான். அதிலிருந்து அவன் வந்தால் வீட்டுக்குப் போகிறான். 'வீடு' என்பதற்கே விடுதலை என்று அர்த்தம். இப்பொழுது மாம்ஸமாகிய ஜெயிலுக்குள் இருக்கிறோம். இந்த உடம்பில் தான் நாம் இருக்கிறதாக எண்ணியிருக்கிறோம். நாம் நம்முடைய சொந்த இடத்தில் இருக்க வேண்டும். அதாவது வீட்டில் இருக்க வேண்டும். அந்த வீடுதான் எல்லையற்ற இன்பம். உலகிலே காலம், தேசம், வஸ்து இந்த மூன்றிலும் குறையாமல் நிறைந்து இருப்பது பேரின்பம்.

புருஷார்த்தங்களில் முதலாவதான 'தர்மம்' என்பதைப் பற்றிக் கடைசியில் சொல்கிறேன். எந்தக் காரியம் செய்தால் நல்லதோ அது தர்மம். தமிழில் 'அறம்' என்பார்கள். முன் ஜன்மத்தில் நாம் அர்த்தத்தை (பொருளை) மற்றவருக்குக் கொடுத்து தர்மம் செய்தால் அது மறு ஜன்மத்தில் நமக்குக் கிடைக்கும். தர்மத்தினுடைய பிரயோஜனமே பொருள். இன்பத்துக்குப் பொருள் சாதனமாக இருப்பது போல் பொருளுக்குத் தர்மம் சாதனமாக இருக்கிறது.

நாம் செய்யும் தர்மத்தை 'இதனால் எனக்குப் பொருள் — அர்த்தம் — வேண்டாம்; ஈசுவரன் நினைத்ததைக் கொடுக்கட்டும்' என்று பலனை எதிர்பாராமல், அர்ப்பணம் பண்ணி விட்டால் நம்மிடத்தில் உள்ள அழுக்கு போய்ப் பேரின்பம் கிடைக்கும். பொருளைத் தரும் தர்மமே அப்பொழுது மோக்ஷமாகிற வீட்டுக்கு ஸாதனமாய்விடும். இப்படி தர்மமானது பொருளுக்கு ஸாதனமாகவும், அதன் மூலம் இன்பத்துக்கு ஸாதனமாகவும், பற்றின்றி நிஷ்காம்யமாகச் செய்யப்பட்டால் வீட்டுக்கு ஸாதனமாகவும் ஆகின்றது. தர்மம் செய்தால் பிரதியாகப் பொருள் கிடைக்கிறது. அந்தப் பொருளைக் கொண்டே மறுபடி தர்மம் செய்யலாம். இப்போது அர்த்தமே தர்மம் செய்ய ஸாதனமாக இருக்கிறது. இன்பம் ஒன்றுதான் தன்னாலும் நிறைவு படுவதில்லை; பிறவற்றுக்கும் சாதனமாக இருப்பதில்லை. கொதிக்கிற மணலில் விட்ட ஜலம் உடனே வற்றிப் போவதுபோல் 'இன்பம்' என்பது, தன்னாலும் நிறைவின்றி, வேறெதுக்கும் சாதனமாகவும் இன்றி நசித்துப் போகிறது.

அம்மா

ரா. கணபதி



24. உடலில் உழைப்பு; உள்ளத்தில் உவப்பு

தனக்குரிய காரியம் யாது எனக் கண்டு கொண்டவன் பாக்யசாலி; அவன் வேறெந்த பாக்யத்தையும் கோராதிருப்பானாக!

- கார்லைல்: "அன்றும் இன்றும்"

ராமன் கிஷ்கிந்தையில் இருந்தான்; எட்டாத் தொலைவில் இலங்கையில் சிறைப்பட்டிருந்தாள் சீதை. ராமனையே எண்ணி உள்ளம் குமைந்தாள்.

சிவபெருமான் கயிலையில் இருந்தான்; தேவி காமாக்ஷி காஞ்சியில் கம்பைக் கரையில் இருந்தாள். சிவத்துக்காகத் தவமிருந்து தவித்தாள்.

கண்ணன் துவாரகையில் இருந்தான்; பல காதம் தள்ளித் திரு ஆய்ப்பாடியில் வாழ்ந்தாள் ராதை. கண்ணனையே நினைந்து உருகினாள்.

ராமகிருஷ்ணரும் சாரதாமணியும் எழுபத்தைந்தே அடித் தொலைவில்தான் இருந்தனர். ஆனால் அவரைக் காணாமலே அவள் துடித்த நாட்கள் பலப்பல.

ஜானகியை ராவணன் சிறைப்படுத்தி வைத்தது போல் சாரதையை யாரும் சிறை வைக்கவில்லை. அவளாகவே தவத்துக்குள் சிறைப்பட்டுக் கொண்டாள். ‘நிறை காக்கும் காப்பு’க்காக, ‘சிறை காத்து’க் கொண்டாள்.

தேவி காமாக்ஷி நாயகனின் சாபத்தினால் காஞ்சியில் வந்திருந்துத் தவமிருந்தாள். சாரதையின் நாயகருக்கோ சபிக்கவே தெரியாது. வரம் தரத்தான் தெரியும். அவர் அவளுக்கு ‘அடக்கம்’ என்ற வரத்தைத் தந்திருந்தார். அந்த வரத்தினாலேயே அவள் அவரைப் பிரிந்து தனித்திருந்தாள்.

வெளிச் சூழலின் நிர்ப்பந்தம் கண்ணனை ராதையிடமிருந்து பிரித்தது. தேவி சாரதைக்கு அப்படிப்பட்ட நிர்ப்பந்தமில்லை. உள்ளுக்குள்ளேயே ஒரு பந்தம் அல்லது கட்டுப்பாடுதான் அவளை அவரிடமிருந்து பிரித்தது.

அவரிடம் வைத்த அன்புக்குக் குறைவின்றி, அவரது அடியாரிடமும் அவள் அன்பு வைத்திருந்தாள். இந்த அன்பே அவரிடமிருந்து பிரித்து வைத்தது. அவரது பெண்ணடியார்களில் ஒருத்திக்குச் சாரதை மட்டுமே அவருக்கு உணவு படைப்பது பொறுக்கவில்லை.

துளிக்கூடக் கூச்சமின்றி சாரதா தேவியிடமே வந்து, ''நீங்க எதுக்காக டாகூர் கிட்ட போறேள்?'' என்று கேட்டாள். பெண்ணடியார்கள் ராமகிருஷ்ணரை நாடிவந்து நீண்ட நேரம் உரையாடுவதைப் பற்றி அவரது கைப்பிடித்த நம் அம்மா ஒருபோதும் வித்தியாசமாக எண்ணியதில்லை. அவர்களைப் போல் அவரிடம் பேசிக் கொண்டிருக்க அவளுக்கு அநுமதியில்லை. அப்படியிருந்தும் அந்தப் பெண்களுக்காகவும் இவள் உழைத்தாள். மனோதத்துவ இயல் கூறுகிற இயல்பான அசூயை உந்தல்கள் சிறிதும் இல்லாமல், சுபாவமாகவே அவள் அப்படி வாழ்ந்ததுதான் அவளை வெறும் மானுடப் பிறவியாக அன்றித் தெய்வத்துள் வைத்திருக்கிறது. இப்படிப்பட்டவளிடம் — ராமகிருஷ்ணரின் சாக்ஷாத் பத்தினியிடம் — ஒருத்தி, 'உங்களுக்கு அவரிடம் என்ன வேலை?' என்று கேட்டுவிட்டாள்.

அம்மா சிறிதும் ஆத்திரம் கொள்ளவில்லை. இப்படிக் கேட்டவளுக்கும் அவள் அம்மாவாகவே இருந்தாள். 'நாம் ஏகாந்தத்தில் அவருக்கு உணவு படைப்பதால் இவர்களுக்கெல்லாம் மன வருத்தம் போலிருக்கிறது. அந்த வருத்தத்துக்கு நாம் ஏன் காரணமாக இருக்க வேண்டும்?' என்று எண்ணியது அவளது எளிய நெஞ்சு. அந்த எளிமை செய்த தியாகத்தை நம்மால் எண்ணிப் பார்க்கவே இயலவில்லை.

''ஏனம்மா! டாகூருக்குப் பரிசாரகம் பண்ணணும்னு உங்களுக்கு ஆசையா இருந்தா நீங்களே பண்ணுங்களேன்'' என்றாள் துடுக்குக்காரியிடம்.





அவரைக் கண்டு பேசத் தனக்குக் கிடைத்திருந்த ஒரே ஒரு வாய்ப்பையும் தியாகம் செய்தாள். அதன் பின் பல நாட்கள் அம்மா அவருக்கு உணவு எடுத்துச் செல்லவில்லை.

ராமகிருஷ்ணரும் விளையாட்டுப் பார்த்தார். ஆனால் உணவு கொள்ளும் சமயங்களில் அவருக்குப் பரவச நிலை ஏற்படாமல் பேச்சை வளைத்துப் போகிற சாதுரியம், அல்லது மாதுரியம் சாரதைக்கே இருந்தது.

ஒருகால் கோலாப்—மா தம்மைச் 'சரிக்கட்ட'க்கூடும் என்று எண்ணினார் ராமகிருஷ்ணர். அவருக்காகப் பார்த்துப் பார்த்துச் சமைத்த அம்மா அவரைப் பார்க்கவும் முடியாதபோதிலும் மன வேற்றுமையே இன்றி உணவை கோலாப் மூலம் அனுப்பிக் கொண்டிருந்தாள்.

ராமகிருஷ்ணரின் அறையில் பாட்டும் பேச்சும் கும்மாளியுமாக இருக்கும். மற்றவர்கள் யாவரும் அந்த ஆனந்தத்தில் திளைத்துக் கிடக்க அம்மா மட்டும் நஹவத்தில் இளைத்துக் கிடப்பாள். 'அந்த திவ்விய மூர்த்தியைப் பார்க்காமலே ஒவ்வொரு நாளாகப் போகிறதே' என்ற தவிப்பு அவ்வப்போது பீறிளெழும். அவளை வருமாறு அவர் ஒரு வார்த்தைகூடச் சொல்லாதபோதிலும் அவளுக்கு அவர் மீது தாபமே உண்டாகாது. 'இத்தனை நாட்கள் அவருக்கு அருகிருந்து பணிவிடை செய்தேனே. அதற்கு எத்தனை பாக்கியம் செய்திருக்கவேண்டும்! இன்னமும் பாக்கியம் வேண்டும் என்று கேட்க எனக்கேது தகுதி?' என்றெண்ணுவாள்.

மாலை மங்குகையில் நஹவத் கதவிடுக்கின் வழியாக வெளியே பார்வையைச்

செலுத்தித் துழாவுவாள். காலடி ஓசை கேட்கும். அவளது இதயம் அடித்துக் கொள்ளும். '**அவர்**தான். வழக்கம் போல் தோப்புக்குப் போகிறார்!' இடுக்கு வழியே செல்லும் பார்வையைக் கூராக்கிக் கொள்வாள். அரையிருளில் பொற்பொடி மூட்டம் போல அவரது திவ்விய ரூபம் தெரியும். ஒருசில விநாடிகள் தான். சாரதையின் நெஞ்சு நிரம்பிப் போகும். இரவுச் சமையலுக்காக மாவு பிசையத் தொடங்கி விடுவாள்.

அங்கே ராமகிருஷ்ணரின் அறையில் பக்தர்கள் பூரித்துக் கொண்டிருப்பார்கள். இங்கே நஹபத்தில் பூரிகள் குண்டு குண்டாக வெந்து கொண்டிருக்கும். 'நரேனுக்குப் பிடிக்கும்' என்று எண்ணி அம்மாவும் பூரிப்பாள்!

ராமகிருஷ்ணர் ஒருவர்தான் பூரிக்காதவர் போலும்! வெளிப் பார்வைக்கு அவர் கும்மாளமிட்டுக் கொண்டுதான் இருந்தார். அம்மாவிடம் அவர் நிர்தாட்சிண்யமாக இருந்ததாகக்கூடச் சிலருக்குத் தோன்றலாம். ஆனால் படித்தறியா அவள் மூலம் உலகமெலாம் படிப்பும் பெறவே அவர் இப்படிக் 'கொடுமை' செய்தார். உள்ளூற அவர் பூரிக்கவில்லை என்பது அவ்வப்போது அவர் நெகிழ்ந்து கூறும் வார்த்தைகளிலிருந்து தெரியும்.

காளி கோயில் பிரசாதம் அவர் முன் கொண்டு வந்து வைக்கப்படும். அருகே உள்ள அடியார்களுக்குப் பகிர்ந்து தருவார். தாலத்தில் மீதம் இருக்கும்.

''ராமலாலா! கூட்டிலே கிளி இருக்கே! அதுக்குப் பருப்பும் பழமும் கொடுத்துட்டு வா'' என்பார்.

ராமலால் தாலத்தை எடுத்துக் கொண்டு வெளியேறுவார்.

ராமகிருஷ்ணர் கிளி வளர்க்கிறார் என்றுதான் விஷயம் தெரியாதவர்கள் எண்ணினார்கள். அவர் குறிப்பிட்ட கூட்டுக் கிளி நஹபத் அம்மாதான்.

'கிளி' என்ற வார்த்தையில் எத்துணை வாஞ்சை சொட்டுகிறது! 'சுகபாணி' என்று வாணியைச் சொல்வார்கள். இங்கோ சுகமாகவே இருந்தாள்!

''ஜோடிக் கிளி கூண்டிலே இருக்கு'' என்று அவர் அடிக்கடி சொல்வார். அவ்வப்போது அவரது தமையன் மகள் லக்ஷ்மியும் சாரதையோடு இருந்ததால் 'ஜோடிக் கிளி' என்பார்.

அவரது அறையிலிருந்து பரவச நாதங்கள் எழும்பி அவற்றின் மெல்லிழைகள் நஹபத்துக்குள்ளும் ஊடுருவும். கண்ணன் குழல் கேட்டுப் பொறி புலன் அனைத்தையும் அதிலேயே பறிகொடுத்த மீராவைப் போல் சாரதை கரைந்துருகிப் போவாள். வேலைகளை விருவிருவென முடித்துக் கொண்டு மூங்கில் தட்டியண்டை வந்து நின்றுவிடுவாள்.

நின்றுகொண்டே யிருப்பாள்! மணிக் கணக்காக நின்றாள்! இப்படி நாட்கணக்கில் நின்றாள்!

கங்கையிலிருந்து ஓதம் நிறைந்த காற்று வீசும். உடல் நடுங்கும். மனம் நடுங்காது. நின்று கொண்டே யிருப்பாள். உடலால் அந்தப் பனி வாடைக்கு ஈடு கொடுக்க முடியவில்லை. சாரதையின் பொன் வண்ணம் உதிரலாயிற்று. சதை கருங்கிக் கருமை கொள்ளலாயிற்று. ஆனால் அவள் அழகையா பொருட்படுத்தினாள்! எலும்புக்குள்ளும் பனி வாடை புகுந்தது. சாரதைக்கு மூட்டு வலி, கீல்வாதம் இவை நீங்காத ரோகங்களாக வந்து சேர்ந்தன. ஏற்கனவே அவள் மலேரியா நோயாளி. வசதியற்ற நஹபத்தில் தனது விசர்ஜனங்களைக்கூடக் கட்டுப்படுத்திக் கொண்டு (ஆகா, வெளியில் சொல்லிக் கொள்ள முடியாதபடி நம் அம்மா அநுபவித்த அவஸ்தைகள் தாம் எத்தனை!) அவளாக வயிற்றுக் கோளாற்றை உண்டாக்கிக் கொண்டாள். இப்போது வாதப் பிடிப்பும் சேர்ந்து கொண்டது!

பொறுத்துக் கொண்டாள். உள்ளத்தில் உவகை பூத்துக் கொண்டு, உடலால் உழைத்துக் கொட்டினாள்.

25. "அம்மா என்று அழைத்து விட்டால்..."

நாயிற் கடையாய் கிடந்த அடியேற்கு
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
- திருவாசகம்

ஆனால் ராமகிருஷ்ணரால் அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை. மீண்டும் சாரதையைத் தமக்கு உணவு கொண்டு வருமாறு பணித்து விட்டார்!

சாதம் படைக்கவும் செய்திடுவோம்-அமுதச்
சாதி படைக்கவும் செய்திடுவோம்

என்று பாரதியார் பாடினார். விவேகானந்தர், பிரம்மானந்தர், சாரதானந்தர் முதலிய அமுதச் சாதியினர் அம்மாவின் சாதத்தால் உருவானவர்களே!

அவள் பூரணத்துவம் பெற்ற ஸ்தானம் அன்னபூரணியாகத்தான். இங்கே ராமகிருஷ்ணர் கூட அவளுக்கு இரண்டாம் பட்சம்தான். ஆம், அவள் பதிவிரதைமட்டுமல்ல; அதைவிடப் பெரிய புத்திரவிரதை. உலகில் அவளைப் போல் பதிவிரதம் காத்த உத்தமிகள் பலர் இருக்கலாம். ஆனால் தன் வயிறு திறவாமலே அவள் அம்மாவாகி, 'புத்திர

விரதம்' என்ற [ஒன்றை அநுஷ்டித்தாளே. அதில் அவளுக்கு ஈடுமில்லை, இணையுமில்லை. புத்திர விரதம் என்று வரும்போது பதியையே மீறுவாள், அடக்கத்தின் உருவான நம் அம்மா.

பிரம்மசாரிச் சீடர்களுக்கு மிதமாகவே உணவளிக்க வேண்டும் என்பது ராமகிருஷ்ணரின் உத்தரவு. இந்த உத்தரவுக்கு அம்மா அடங்கி நடக்கவில்லை. அவர்களுக்கு வயிறார அன்னமிடுவாள். ராகாலுக்கு ஆறு சப்பாத்திகளும், லாடுவுக்கு ஐந்தும், பாபு ராமுக்கு நாலும் வழங்க வேண்டும் என்பது அவரது உத்தரவு. 'பசங்களை'ப் பார்க்கும்போது அவரது உத்தரவை 'நஹவத் யஜமானி' நிறைவேற்றவில்லை என்று அவருக்குத் தெரிந்து விட்டது. பாபுராமிடம் அவர் கேட்டபோது, அவன் ஒளிவின்றி, ''அம்மா எனக்கு ஆறு சப்பாத்திகூடப் போடறதுண்டு'' என்றான்.

ராமகிருஷ்ணருக்குக் கன கோபம் வந்து விட்டது. நேரே நஹவத்துக்குப் போனார். ''நீ பாபுராமுக்கு ஆறு சப்பாத்தி போடறயாமே!'' என்றார்.

''ஆமாம், போடறேன்'' என்றாள் அம்மா சர்வ நிதானமாக.

''பசங்க நாக்கைக் கட்டுப்படுத்த வொட்டாமே அவாளைக் கெடுக்கிறே! நீ மூளையில்லாமப் பிரியம் காட்டி அவாளோடே ஆத்மிகத்துக்கு எத்தனை ஹானி பண்ணிண்டிருக்கே தெரியுமா?''

அவள் துளிக்கூடக் கலங்கவில்லை. ''ஏதோ இரண்டு சப்பாத்தி அதிகமாப் போட்டுட்டேன்னு நீங்க ஏதுக்கு இப்படிக் கலங்கறேள்? **அவாளோட எதிர்காலத்தை நான் பார்த்துக்கறேன்.** 'வயிறு முட்டத் தின்னறேளா?'ன்னு அந்தக் குழந்தைகளை வையாதேயுங்கோ. ஆமாம், சொல்லிட்டேன்'' என்றாள்.

ராமகிருஷ்ணர் விக்கித்து நின்றார். அது ஆனந்த விக்கல். எல்லோரையும் ஜகன் மாதாவாகப் பார்ப்பது போல் சாரதையையும் ஜகன் மாதாவாகப் பார்த்த அவர், அவள் இப்போது வாஸ்தவமாகவே தன் ஜகன்மாதருத்துவத்தை உணர்ந்து கூறிய உன்னத மொழிகளைக் கேட்டு விக்கித்து நின்றார். இவர் அந்தப் பிள்ளைகளுக்கு உபதேசம் தந்தார் — வாசகங்களாக, அநுஷ்டானங்களாக. அவளும் உபதேசம் தந்தாள்— சப்பாத்தியாக, பயத்தம் பருப்புக் கூட்டாக, ஜுஸியாக, கிச்சடியாக. சமைப்பவரின் மனப்பான்மையும், பரிமாறுபவரின் மனப்பான்மையும் உண்பவரின் உள்ளே புகும் என்று நம் சாஸ்திரங்கள் சொல்கின்றன. அதனால்தான் போஜனத்துக்கு மிகுந்த நியதிகளை விதித்திருக்கின்றன எதிர்கால விவேகா

பெண்ணுக்கு அழகு எது?

பெண்மணிகளே! நீங்கள் ஒவ்வொருவரும் மகாராணிகளாகத் திகழ வேண்டும் என்பதே என் விருப்பம். 'மகாராணிகள்' என்றால் எவ்விதத்தில்? நம் நாட்டில் பூர்வத்தில் மகாராணிகள் எல்லாம் அறிந்தவர்களாகவும், கற்பரசிகளாகவும் இருந்தார்கள். அவர்களுக்கு நாட்டு நடப்புகள் நன்கு தெரியும். ஆயினும் அவர்கள் எப்படி வசித்தார்கள்? பிறர் காணாமல் சாளரம் வழியாகவே வெளியுலகைப் பார்த்தார்கள். சாத்திரங்களில் விதிக்கப்பட்டுள்ள பெண் தர்மங்களில் மிக உயர்ந்த நிலை இதுவே. அந்த மகாராணிகளைப் போலவே நீங்கள் வாழ வேண்டும். பிறர் உங்களை வெறித்து நோக்கும்படியாகவும், உங்களைப் பற்றிப் பலர் பேசும்படியாகவும் வெளியே திரிவது உங்களுக்கு அழகல்ல. உடல் அழகைப் பராமரிப்பதை விட, அழகிய பண்பாடுகளை வளர்த்துக்கொள்வதே உங்கள் தர்மம்.

ஸ்ரீ ஸத்ய ஸாயி பாபா

நந்த — பிரம்மாநந்த — பிரேமாநந்த (பாபு ராம்தான் பிறகு பிரேமாநந்தரானவர்) குழாத்தின் சத்தியம், தியாகம், பிரமச்சரியம் இவற்றில் ராமகிருஷ்ணரின் உபதேசத்துக்கு எவ்வளவு பங்கு, சாரதை படைத்த உணவுக்கு எவ்வளவு பங்கு என்று யாரே கணக்கிட்டுச் சொல்ல முடியும்? அந்த உணவை அதிகமாக உண்ண உண்ண ஆத்ம குணங்களும் அதிகமாகுமேயன்றி, ஆத்ம அபிவிருத்திக்கு ஹானியா உண்டாகும்? அம்மாவானவுடன் தன் சக்தியின் முழுமையை அவளே உணர்ந்து அமர வாசகங்களை அவரிடம் சொல்லிவிட்டாள்!

ராமகிருஷ்ணர் மானசிகமாக அவளை நமஸ்கரித்தார். இளநகையுடன் விடைகொண்டார்.

புத்திர விரதத்தில் புத்திரி விரதமும் அடக்கம். ராமகிருஷ்ணரைத் தேடி வந்த பெண்களிடம் — அவரிடமிருந்து அவர்களைவிட ஒதுங்கியிருந்த அவரது சகதர்மிணியான அவள் காட்டிய எல்லையற்ற அன்பை என்னென்பது?

அரக்கி போல் ஒருத்தி வந்தாள்.— கையில் திரிசூலமும், தலையில் ஜடாமுடியுமாக. அவள் வரப் போகிறாள் என்று முன்பே சொல்லியிருந்தார் ராமகிருஷ்ணர். அவள் அரக்கி அல்ல; பைரவ உபாசகி. உலகிலுள்ள கொடூரங்களும் இறைவனிடமிருந்து வந்தவையே என்ற அடிப்படையை மனத்தில் கொண்டு, கொடூரங்களைக் கைக்கொள்ளும் பைரவி அவள்.

''பைரவி ஒருத்தி வருவா. அவளுக்காக ஒரு வஸ்திரம் சாயம் தோய்த்து வை. கொடுக்கலாம்'' என்றார் ராமகிருஷ்ணர் சாரதையிடம். அவர் கூறிய

மாதர் மகிமை

மாதரசே! மதுர மாதரசே!
மனிதனை மாற்றி மென்மை செய்யவே
மாதா இறைவன், மாதுனைப் படைத்தனள்!
மங்கை நீ இன்றி மானுடர் யாவரும்
மாக்களாய் வாழ்ந்து மாய்ந்திருப்போமே!
ஆட்லே: ''வெளியில் பிழைத்தது''

வண்ணமே செய்தாள் சாரதை. அவர். சொன்ன வண்ணமே பைரவி வந்தாள்.

மகா கோபக்காரியான அவள் ராமகிருஷ்ணரிடம் மட்டும் நீண்ட நேரம் அளவளாவுவாள். சாரதையைக் கூசாமல் மிரட்டுவாள். சாரதை அவளிடம் அச்சம்கொண்டாளேயொழியக் கோபமோ, துவேஷமோ கொண்டதில்லை.

''ஏ சாரு, ராத்திரி சாதத்திலே தண்ணி கொட்டி வை. காலம்பற எனக்குப் பழையது வேணும். தவறினையோ, சூலத்தாலேயே உன்னைக் குத்திக் கொலை பண்ணிடுவேன்'' என்பாள்.

இப்படிப் பட்டவளுக்கும் மனம் கோணாமல் பணி செய்தாள் அம்மா.

சாரதை பைரவியிடம் அஞ்சுவது கண்ட ராமகிருஷ்ணர், அவளுக்கு அந்த அச்சமும் உதவாது எனக் கருதினார்: ''பயப்படாதேயம்மா. அவள் உண்மையான பைரவ சம்பிரதாயக்காரி. அதனாலே அவளுக்கு முன்கோபம் கொஞ்சம் ஜாஸ்தியா யிருக்கு'' என்றார்.

கொடூரத்தைக் கூடச் சகித்துக் கொள்ளலாம். ஒழுக்கக் குறைவை எப்படிச் சகித்துக் கொள்வது? பனிக்கட்டியை விடப் பரிசுத்தமான சாரதை நடத்தை கெட்ட பெண்களிடமும் காட்டிய பரிவு இதிகாசம் கண்டிராத அற்புதம்!

ராமகிருஷ்ணர் ஒரொரு சமயங்களில் தமது சமபாவத்தைப் பரிசோதித்துக் கொள்வதற்காகப் பரத்தையர் வீட்டுப் படிகளையும் தமது முடியால் துடைத்திருப்பது உண்மை. கிரீஷ்கோஷ் போன்ற பதிதர்களையும் அன்புடன் அரவணைத்து அவர் உயர்த்தி யிருக்கிறார் என்பதும் உண்மை. என்றாலும்கூட, அவரும் தம் சீடர் குழாத்தில் சிலம் உள்ளவர்களுக்குச் சிறப்பிடம் தந்தார். சிலரை ஒதுக்கி வைத்தார்.

அம்மா ஒதுக்கி வைத்த குழந்தை ஒன்றுகூடக் கிடையாது. சேற்றில் விழுந்த குழந்தைகளுக்குத்தான் தனது தேவை அதிகம் என்று அவற்றிடமே அதிகப் பரிவுடன் ஓடினாள் அவள்.

மிகவும் அவப் பெயர் எடுத்த ஓர் ஆடல் மகள், அவளது யௌவனம் கழிந்தபின், நம் அம்மாவிடம் வந்தாள். ''தெறிகெட்டு வாழ்ந்துட்டேன். என்னை சன்மார்க்கத்திலே இருப்புங்கோ!'' என்று கேட்டுக் கொண்டாள்.

அம்மாவின் அன்பு வழக்கத்துக்கும் அதிகமாகவே பாய்ந்தது. வழக்கத்துக்கும் அதிகமாகவே அவளோடு பேசிக் கொண்டிருந்தாள் தேவி. சர்வ பாபங்களையும் அபஹரிக்கும் ஹரியைப் பற்றித்தான் பேசினாள்.

விலைமாது ஒருத்தியுடன் சாரதை இப்படிப் பேசுவது ராமகிருஷ்ணருக்கு அருவருப்பாக இருந்தது.

அந்த ஸ்திரீ போன பின் ''அவளை ஏன் இங்கே சேர்த்துண்டே?'' என்று சாரதையிடம் கேட்டார்.

''ஏன், அதிலே என்ன தப்பு? ஹரியைப் பத்தித்தான் அவள் கேட்டிண்டிருந்தா'' என்றாள் தேவி.

''பெருங்காயம் வைச்ச பாண்டம் மாதிரி, பழைய வாசனை நெடுநாள் இருந்துண்டேதான் இருக்கும். நீ பண்ணறது வெட்கக் கேடு. ஊர் சிரிச்ச ஒரு சிறுக்கிக்கிட்டே பிரசங்கம் பண்ணிட்டு அதுக்குச் சமாதானம் வேறே சொல்றயே, தூ, தூ'' என்று காரமாகப் பேசி விட்டுத் திரும்பினார் ராமகிருஷ்ணர்.

மறுநாளும் அந்த மாது வந்தாள். அன்றும் முதல் நாள் போலவே சாரதை அவளுடன் உரையாடினாள்.

அதற்கடுத்த நாளும் வந்தாள். அன்றும் அப்படியே நடந்தது.

ராமகிருஷ்ணரிடம் அம்மா எதிர்த்துச் சண்டை போடவே யில்லை. அவரே சண்டை போட்டுவிட்டுக் கடைசியில் அவராகவே சமாதானமும் அடைந்தார்.

இன்னும் ஓர் உதாரணம். அம்மாவின் அம்மாத் தன்மையைச் சிகரத்தில் ஏற்றிக் காட்டும் உதாரணம்.

ஒரு நாள் இரவு அம்மா ராமகிருஷ்ணருக்கு உணவெடுத்துச் சென்றாள். அவரது அறைக்கு முன் உள்ள வராந்தா. அங்கே இதற்கெனவே காத்திருந்தது போல் ஓர் உருவம் வெளிப்பட்டுச் சாரதையின் முன் நின்றது.

சாரதை அந்த உருவத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே ஒழுக்கம் கெட்ட ஒருத்தி எனப் புரிந்து கொண்டாள்.

அவள் சாரதையிடம், ''அம்மா, தட்டை என்கிட்டே கொடுங்கோ. டாகூருக்கு இன்னிக்கு ஒரு வேளை நான் சாதம் வைக்கிறேன்'' என்றாள்.

சாரதை சற்றும் தயங்காமல் உணவுத் தட்டை அவளிடம் கொடுத்தாள்.

அந்தணர்கள், அதிலும் ஒழுக்கமானவர்கள், சமைத்துப் பரிமாறும் உணவைத்தான் ராமகிருஷ்ணர் உண்பார் என்பது சாரதைக்கு மிக நன்றாகத் தெரி

யும். ஒவ்வொரு வேளையும் அவரைத் தாஜா செய்து சாப்பிட வைப்பதில் அவள் கொண்டிருந்த ஈடுபாடோ அசாமானியமானது ! இருந்த போதிலும் பதிதையிடம் உணவுத் தாலத்தைத் தந்துவிட்டு, பதியின் அறைக்கு வெளியே நின்றாள்.

அந்தப் பெண் தட்டத்தை ராமகிருஷ்ணரின் முன் வைத்தாள். பிறகு என்ன தோன்றியதோ, வெளியே ஓடியே விட்டாள்.

ராமகிருஷ்ணர் கற்சிலையாகச் சமைந்துவிட்டார்.

அம்மா அவர் பக்கத்தில் போய் அமர்ந்தாள்.

''என்ன காரியம் செஞ்சுட்டே !'' என்றார் ராமகிருஷ்ணர் சாரதையைப் பார்த்து. ''அவ நடத்தை கெட்டவள்னு உனக்குத் தெரியாது? அவளோடே ஸ்பரிசம் பட்டு அசுத்தமாகிவிட்ட இந்தச் சாப்பாட்டை நான் தீண்டுவேனு?'' என்றார்.

சாரதை தெளிவுடனும் பணிவுடனும் சொன்னாள்: ''உங்களோட ஆகார நியமம் எனக்குத் தெரியும். அந்தப் பெண்ணைப் பற்றியும் தெரியும். ஆனாலும் என்னவோ இப்படிப் பண்ணிட்டேன். தயவு செஞ்சு இந்த ஒரு வேளை இதைச் சாப்பிட்டுடுங்கோ.''

''ஒருகாலும் முடியாது.''

''தயவுசெஞ்சுன்னு......'' மன்றாடினாள் தேவி.

அவர் பேசவும் இல்லை. உணவைத் தொடவுமில்லை. பொய்க் கோபமோ, மெய்க் கோபமோ, உர்ரென்று அமர்ந்திருந்தார்.

''ஏன்னு, உங்களைத்தானே?'' என்று ஈனஸ்வரத்தில் இழுத்தாள் சாரதை. அழுகை தொண்டையில் முட்டியது.

'வழிக்கு வருகிறாள்' என்று எண்ணினார் ராமகிருஷ்ணர். இருந்தாலும் வீராப்பை விடக்கூடாது என்று அடம் செய்ய நினைத்தது அந்தக் குழந்தை. பிகு தளராமலே அமர்ந்திருந்தார். அவருக்கு எதிரே உணவுத் தாலம். அவர் அதைத் தொடவொண்ணாதபடி செய்து விட்டாள் அவள்.

கலத்திலே சோற்றையிட்டுக் கரத்தைப் பிடித்திருக்கும் மாபாதகத்தைச் செய்து விட்டோமே என்று வேதனை கொண்டாள் அன்னபூரணியாகவே வாழ்ந்து வந்த அன்னை.

''இந்தாங்கோன்னு.....'' நெஞ்சுநோக அவரை மெல்ல அழைத்தாள்.

ராமகிருஷ்ணர் அசைந்து கொடுத்தார். ஆனாலும் அவளிடம் பூரணமாகத் தோற்க அவர் விரும்பவில்லை.

''சரி. அப்போ எனக்கு ஒரு சத்தியம் பண்ணித் தா ! இனிமேலே இந்த மாதிரி கண்டவாகிட்டே என் சாப்பாட்டைத் தரதில்லேன்னு வாக்குத் தா. சாப்பிடறேன்'' என்றார்.

உடனுக்குடனே சாரதை தன் கையைக் குவித்து அஞ்சலி செய்து, அழுகைப் பசை அற்ற கணீரென்ற குரலில், ''பிரபு! அந்த மாதிரி வாக்குத் தர என்னால் ஒருகாலும் முடியாது. உங்களுக்காக நானே சமைப்பேன், நானே அதை எடுத்துண்டு வந்து பரிமாறவும் செய்வேன். நானுக வேறே யார்கிட்டேயும் இந்த வேலைகளைக் கொடுக்க மாட்டேன். ஆனாலும் என்னை யாராவது 'அம்மா'ன்னு கூப்பிட்டு, அந்தச் சாப்பாட்டைத் தன்கிட்டே தரச் சொன்னு அப்புறம் என்னலே என்னையே கட்டுப்படுத்திக்க முடியாது'' என்றாள்.

''அம்மான்னு கூப்பிட்டுட்டா அப்புறம் என்னைக் கட்டுப்படுத்திக்க முடியாது.'' — அந்த வாசகங்கள், ஆதியில் தோதாபுரி உபதேசித்த வேத மகாவாக்கியங்களைவிடப் பெரிதாக ராமகிருஷ்ணரின் அகத்துள் பாய்ந்தன. கட்டுப்பாடே உருவான அவளை அம்மாவாகப் பார்த்துவிட்டால் அவள் எதற்கும் கட்டுப்படாத பராசக்தியாகி, அன்பர்களின் கட்டுக்களை எல்லாம் அறுத்தெறிந்து விடுவாள். பதிவிரதத்தை விடப் பெரிதான அப்பேர்ப்பட்ட புத்திர விரத மகிமை அவளுடையது!

அவரது மகிமையையும் உணர்த்தும் மதுர வாசகங்களை மிருதுவாகச் சொன்னாள் மாதா: ''ஏன்னு! நீங்க நான் தொட்டதை மட்டுமே சாப்பிடுவேன் என்கிறேளே. நீங்க எனக்கு மட்டும் தான் ஸ்வாமியா ? இல்லேன்னு! நீங்க எல்லாருக்கும் ஸ்வாமியாச்சே !''

அவருக்கே சமத்துவ குருவாகிவிட்டாள் அம்மா ! அவரைத் தன்னோடு எல்லோரும் சமமாக அநுபவிக்க வேண்டும், தனக்கு விசேஷப் பங்கு கூடாது என்று எண்ணினாள் தியாகி!

ராமகிருஷ்ணர் கசிந்து போனார்.

கடகடவென்று சமர்த்துப் பிள்ளையாக உண்டுவிட்டுக் கலகல என நகைத்தார் பகவான்.

பகவதியும் நகைத்தாள் கலகலவென.


பாக்கியம் செய்த தக்ஷிணேசுவரக் காற்று பகவானும் பகவதியும் சிரித்த புண்ணியச் சிரிப்பை ஏந்திச் சென்று கங்கையில் விட்டது.

கங்கா மாதா கலகலவென ஓடினாள்!

(தொடரும்)

புதிய

ரெம்கோ ஜுகல்பந்தி



க்ராஸ்
ஓவர்
சவுண்ட்

வேறு எந்த ரேடியோவும் ஈடு செய்ய முடியாத அம்சங்களுடன்!

மிக உயர்ந்த வெளிப்படுதிறன்: 10 வாட்
மிகக் குறைந்த தொனிச்சிதைவு: 75%
வெளிப்படுதிறனில் சிதைவு 1%.
3 ஸ்பீக்கர்களுடன் "க்ராஸ்-ஓவர் ஸிஸ்டம்"

5 பாண்ட், 7 வால்வுகள், ஃபைன்
ட்யூனிங்குடன். விலை ரூ. 975/- (வரிகள் தனி).

ரெம்கோ REMCO

ரேடியோ & எலெக்ட்ரிகல்ஸ்
மேன்யுஃபேக்சரிங் கோ. லிட்.,
மைசூர் ரோடு, பெங்களூர்-26.

மைசூர், கோவா, தமிழ்நாடு, காரைக்கால்
மற்றும் பாண்டிச்சேரிக்கு விநியோகஸ்தர்கள்!

ஹெகடே அண்ட் கோ.,
குப்தா மார்க்கெட், கெம்பகவுடா ரோடு,
பெங்களூர்-9 மற்றும் 11, அகர்சந்த்
மேன்ஷன், 35, மவுண்ட் ரோடு, சென்னை-2.

SISTA'S-RR 306 TAM

○ மார்ச் 23உ. ஸ்ரீராம நவமி

கலையில் கலந்த ராமன்

வி.கோபாலன்



ராமன் என்றாலே அழகன் என்று பொருள். அழகுக் கலைகள் அழகின் நாயகனை — அழகுத் தெய்வத்தை வரித்துக் கொண்டதில் வியப்பில்லை அல்லவா? தென்னகத்துக் கலை உலகில் தான், வடக்கே அயோத்திமாநகரில் தோன்றிய சக்கரவர்த்தித் திருமகனுக்கு எத்தனை வடிவங்கள்; வண்ணங்கள்! கங்கைக்கரை காகுத்தனுக்குக் காவிரிக் கரையில் தான் எத்தனை ஆலயங்கள்; அடியார்கள்!

ராமன் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகப் பாரத மக்களின் நெஞ்சிலே வாழும் தெய்வம். ராமாயணம் எழுதப்படுவதற்கு முன்னரே மக்கள் ராமனை வழிபட்டனர் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உண்டு. தமிழகத்திலும் பன்னெடுங் காலமாக ராம வழிபாடு சிறந்தோங்கி யிருந்தது என்பதற்கு மகாபலிபுரத்துக் கல்வெட்டு ஒன்று சான்றாக விளங்குகிறது.

"மத்ஸ்ய கூர்ம வராஹஸ்ச
நாரஸிம்ஹஸ்ச வாமன
ராமோ ராமஸ்ச ராமஸ்ச
பௌத்த: கல்கி ஏதே தசா"

என்று திருமாலின் தசாவதாரங்களை வகைப்படுத்திக் கூறும் அக்கல்வெட்டு தசரதகுமார ராமன், பலராமன், பரசுராமன் ஆகிய மூன்று ராமர்களையும் குறிப்பிடுகிறது.

ராமாயணத்தால் கவரப்படாத இந்திய மொழிகள் எதுவுமில்லை. கம்பனின் இராம காதை இலக்கிய உலகில் ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறது. ராமனின் சரிதம் கம்பனுக்கு முற்பட்ட தமிழ்க் கவிஞர்கள் பலரையும் கவர்ந்து அவர்தம் காவியப் படைப்புக்களிலும் கூட ஆங்காங்கே இடம் பெற்றிருப்பதைக் காணலாம். மிகப் பழைமையான இத்தமிழ் இலக்கியக் குறிப்புக்கள் தமிழகத்தில் ராம வழிபாட்டின் பெருமையையும் பழைமையையும் பறை சாற்றுகின்றன.

"கடுந்தேர் இராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை அரக்கன் வௌவிய ஞான்றை
நிலம்சேர் மதரணி கண்ட குரங்கின்
செம்முகம் பெரும் கிளை"

என்ற புறநானூற்றுப் பாடல், செருப்பாழி பொறிந்த இளம்பெருஞ்சென்னி என்ற சோழ இளவரசன் 'ஊன் பொதி பசுங்குடையார்' என்ற புலவருக்கு அளித்த பரிசில்களை அவரது சுற்றத்தார் எடுத்துக் கொண்டது, இராவணன் தூக்கிச் செல்கையில் சீதை கழற்றி வீசிய அணிகலன்





மேலே: ராமன், சீதை, லட்சுமணன் - பருத்தியூர் படிமங்கள்.
கீழே: ராமனும், சீதையும் - வடக்குப் பனையூர் படிமங்கள்.

களை வானரங்கள் பொறுக்கிக் கொண்டது போல் இருந்தது என்று விவரிக்கிறது. ராமாயண நிகழ்ச்சி புறநானூற்றுப் பாடலிலேயே இடம் பெற்றிருப்பது, அக்காலத்துத் தமிழகத்தில் ராம சரிதம் பிரபலமாக விளங்கியதைப் பிரதிபலிக்கின்றது.

அகநானூற்றிலும்,

"வெல்வேல் கவுரியர் தொன்முதுகோடி
முழங்கு இரும்பௌவம் இரங்கும் முன்றுறை
வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த
பல்வீழ் ஆலம்"

என்று ராமனின் வரலாறு இடம் பெற்றிருக்கிறது.

சிலப்பதிகாரத்திலும் சக்கரவர்த்தித் திருமகனின் சரித்திரம் மணக்கிறது. ஆய்ச்சியர் குரவையில் கிருஷ்ணாவதாரத்தோடு ராமாவதாரமும் இணைத்துக் கூறப்பட்டிருக்கிறது. வாமனனாய் மூவுலகமும் இருள் திரை விழ நடந்த திருவடிகளே ராமாவதாரத்தில் காடு களை மிதித்துச் சிவந்தன எனச் சிலம்பு சித்திரிக்கின்றது.

கோவலனும் கண்ணகியும் காவிரிப்பூம் பட்டணத்தை விட்டுச் சென்றதும் அந்நகர் ராமனும் பிராட்டியும் விட்டுச்சென்ற அயோத்தியைப் போல் பொலிவிழந்து போனதை

'அரசே தஞ்சமென் றருங்கா னடைந்த
அருந்திறல் பிரிந்த அயோத்தி போல'

என்றும் தமிழ்ப் பெருங் காப்பியம் வருணிக்கிறது.

மணிமேகலையில் வானரங்கள் ராமனுக்காகப் பாலம் அமைத்த செய்தியையும், கயசந்திகை பற்றிய குறிப்பையும் காண்கிறோம்.

ஆலயங்கள்தோறும் அருள் தலங்கள் தோறும் பாமாலை பாடித் தெய்வத் தமிழ் வளர்த்த ஆழ்வார்களும், நாயன்மார்களும் சத்திய வடிவினனான ராமனைப் பாடிப் பரவியிருப்பதில் என்ன வியப்பு?

நாடாண்ட மன்னர்கள் ராமனுக்காக ஆலயங்கள் பல அமைத்திருக்கின்றனர். கலையில் தெய்வ எழிலைச் சித்திரிக்க எண்ணிய சிற்ப, படிமக் கலைஞர்களுக்கு ராமனின் திவ்விய வடிவம் ஒரு வரப்பிரசாதமாகவே அமைந்திருக்கிறது. வடார்க்காடு மாவட்டத்திலுள்ள பராந்தக சோழனின் (கி. பி. 907–955) கல்வெட்டொன்று ராமனுக்காகக் கோயில் எடுக்கப்பட்டதைத் தெரிவிக்கிறது. ராமனுக்காக ஆலயம் அமைக்கப்பட்ட அவ்வூர் திருவயோத்திபுரம் எனப்பட்டது. ராமன் இருக்குமிடம் அயோத்தியல்லவா? தமிழக மெங்கும் ராமனுக்கான சிறப்புத் தலங்கள் பல உள்ளன. குடந்தை, புஞ்சை நல்துணை ஈசுவரன் ஆலயம், புள்ளமங்கை ஸ்ரீ பிரும்ம புரீசுவரர் ஆலயம் ஆகியவற்றில் ராம சரிதம் கண்கவர் சிற்பங்களில் சிறப்பாகச் சித்திரிக்கப்பட்டுக் காண்கிறது.

சோழர் வடித்த ராமன் படிமங்கள் பல. அவை காவியநாயகன் மீது அவர்கள் கொண்டிருந்த பக்திக்கும், ராமன் வடிவத்தை உருவாக்குவதில் சோழக் கலைஞர்கள் கொண்டிருந்த ஈடுபாட்டுக்கும் சான்றாக விளங்குகின்றன.

ராமன் கவிஞர்களையும், கலைஞர்களையும் தன் வசமாக்கிக் கொண்டவன். எத்தனை மொழிகளில் எத்தனை கவிஞர்கள்தான் அவன் சரிதத்தைப் பாடியிருக்கின்றனர்! அக்காவிய நாயகன் கலைஞர்களையும் கவர்ந்து கலை உலகிலும் சக்கரவர்த்தித் திருமகனாக விளங்குவதில் வியப்பென்ன?


அட்டைப் படம்: ராமபிரானின் அருளைக் கண்கொண்டு தரிசிக்க வண்ணப் படமாக எடுத்து வழங்கியிருக்கிறார் திரு ஹரலிங்கம்.

இருப்புப்பாதை அமைக்கும் ரயில்!

தானியங்கு முறையில் பழைய இரும்புப் பாதையை அகற்றிவிட்டுப் புதிய இரும்புப் பாதை களைப் போடுகிறது ஒரு ரயில்.

மேற்கு ஜெர்மனியில் உருவாகியுள்ள இந்த ரயிலின் முன் பக்கம் பழைய இரும்புப் பாதை மேலாகச் செல்கிறது. பின் பகுதி புதிதாய் அமைக்கப்பட்ட இரும்புப் பாதை மேல் ஓடுகிறது. ஒரு மணி நேரத்தில் ஓராயிரத்து நூற்றி நாற்பத்தெட்டு அடி நீளமுள்ள புதிய இரும்புப் பாதையை அமைக்கிறது; புதிய ஸ்லீப்பர் கட்டைகளையும் பொருத்துகிறது இந்த அதிசய ரயில்!

-ஸ்கைலா



என்ன பேரோ?



ஒருவன் தன் வீட்டு வாசலுக்கு வந்து நின்று 'உள்ளே நோக்கி 'உஷா உஷாஆ!' என்று கத்தினான். யாரும் வரவில்லை. பதிலும் கிடைக்கவில்லை.

சிறிது நேரம் ஆயிற்று. "கலா.... கலாஆ!" என்று கத்தினான். ஊஹூம்! இந்தத் தடவையும் பதில் இல்லை.

மூன்றாவது முறையாக 'நளினி.... நளினீ.... நளினீச.....' என்று கூப்பிட்டான். எவருமே பதில் அளிக்கவில்லை..... வேறு வீட்டு வாசலில் நின்று இதைக் கவனித்த இன்னொருவனுக்கு ஆவல் குறுகுறுப்பை அடக்கிக் கொள்ள முடியவில்லை. அருகில் போய், "மாறிமாறிப் பெண்கள் பெயரைச் சொல்லி அழைக்கிறீர்களே, என்ன விஷயம்?" என்று கேட்ட போது அவன் சொன்னான் :

"அடடா! வித்தியாசமாக எதுவும் நினைத்து விடாதீர்கள். மூன்று ஆண் குழந்தைகளுக்குப் பிறகு அருமையாக ஒரு பெண் குழந்தையை சன்றெடுத்திருக்கிறாள் என் மனைவி. அவளுக்கு எந்தப் பெயர் வைத்துக் கூப்பிட்டால் காதுக்கு இனிமையாக இருக்கும் என்று கூப்பிட்டுப் பார்த்தேன். அவ்வளவே!" என்றான்.

-- "லயா"



20. அம்மாஞ்சி அறிமுகம்

சிரிப்பின் ஒலியைக் கேட்டதினால் அடைந்த திகைப்பு நீங்கியதும் சூரியா தன்னுடைய தவற்றை உணர்ந்தான். ஓடையில் விழுந்திருந்த பெண்ணைத் தான் கரை சேர்க்க எண்ணியது எவ்வளவு பைத்தியக்காரத்தனம் என்பதை அறிந்தான். அவள், ''முழுகப் போகிறேன்'' என்று கத்தியது வெறும் விளையாட்டுத்தான் என்பதும் தெளிவாயிற்று. ஓடையில் முழங்கால் அளவு தண்ணீருக்கு மேல் இல்லையாகையால் அந்தப் பெண்ணுக்கு அபாயம் ஒன்றும் ஏற்படக் காரணம் கிடையாது.

* * *

சாலைக்கு மண் போடுவதற்காகச் சாலையின் ஓரத்தில் மண் எடுத்து எடுத்துப் பள்ளமாகியிருந்தது. நாளடைவில் அப்பள்ளத்தில் தண்ணீர் தேங்கிச் சாலைக்கும் நன்செய் நிலத்துக்கும் இடையே நீண்ட நீர் ஓடையாக மாறியிருந்தது. நீர் ஓடையின் அகலம் சுமார் பதினைந்து அடிதான். ஆழமோ எந்த இடத்திலும் மூன்று அடிகளுக்கு மேல் இராது. மழைக் காலத்தில் பெய்யும் 'மழையும் வயல்களிலிருந்து வடிந்த தண்ணீருமாகச் சேர்ந்து நீரோடையில் வருஷத்தில் பத்து மாதத்துக்குக் குறையாமல் தண்ணீர் நிற்கும். நீண்ட காலம் இப்படித் தண்ணீர் நின்ற காரணத்தினால் அல்லிக்கொடிகளும் செங்கழுநீர்க் கொடிகளும் மண்டிப் படர்ந்து கொழு கொழுவென்று இலைகளோடும் அழகிய மலர்களோடும் விளங்கின. மாலைவேளையானதால் அம்மலர்கள் நன்கு இதழ் விரிந்திருக்கவுமில்லை; அடியோடு கூம்பவும் இல்லை. அரைவாசி விரிந்திருந்த அல்லி, செங்கழுநீர்ப் புஷ்பம் ஒவ்வொன்றும் ஓர் அழகிய வர்ணப் பளிங்குக் கிண்ணத்தைப்போல் காட்சியளித்தது.

ஓடையின் மேலாகச் சாலை ஓரத்து ஆலமரக் கிளைகள் தழைத்திருந்தன. அஸ்தமன சூரியன் பொற்கிரணங்கள் அந்தப் பசுங் கிளைகளின் வழியாக நுழைந்து வந்து நீலநிற ஓடை நீரில் லீலை புரிந்தன.

சற்றுத் தூரத்தில் பொன்னிற நெற்கதிர்களைத் தாங்க முடியாமல் வயலில் சாய்ந்திருந்த நெற் பயிர்களும் இன்னும் அப்பால் மரகதப் பசுமை வாய்ந்த அடர்ந்த தென்னந் தோப்புகளும் காணப்பட்டன.

இந்த இயற்கை வர்ணக் காட்சிகளை எல்லாம் சூரியாவினுடைய கண்கள் பார்த்துப் புகைப்படக் கருவி படம் பிடிப்பது போலப் பிடித்து, அவனது உள் மனத்தில் பதியச் செய்தன. அவ்வளவு இயற்கை எழில்களும் அந்த நீலநிற ஓடையில் விழுந்த ஜல கன்னிகையின் முகத்தின் அழகைச் சிறப்பித்துக் காட்டுவதற்காக ஏற்பட்ட செயற்கைச் சித்திரங்களாகச் சூரியாவுக்குத் தோன்றின. தன்னுடைய வாழ்நாள் உள்ளளவும், தன் உடம்பில் உயிர் இருக்குமளவும் தன் மனத்துக்கு நினைக்கும் சக்தி இருக்குமளவும் இந்த நிமிஷத்திலே தான் பார்க்கும் காட்சியைத் தன்னால் மறக்க முடியாது என்று சூரியாவின் உள் மனத்தில் ஒரு பகுதி எண்ணமிட்டுக் கொண்டிருந்தது.

ஜல கன்னிகை சிரிப்பை நிறுத்தி, ''பெரியம்மா! இந்தப் பிள்ளை யார்?'' என்று கேட்டவுடனே, சூரியா கனவு லோகத்திலிருந்து இந்தப் 'பூவுலகத்துக்கு வந்தான்.

''இவன்தான் உன் அம்மாஞ்சி சூரியா! பார்த்தால் தெரியவில்லையா, சீதா? கிடக்கட்டும். நீ கரை ஏறு!''

''ஓகோ! லலிதாவின் அண்ணாவா, பெரியம்மா?''

''ஆமாண்டி, பெண்ணே! லலிதாவின் தமையன்தான்! நீ சீக்கிரம் கரையேறி வேறு சித்தாடை உடுத்திக்கொள்'' என்று அபயாம்பாள் சொல்லிவிட்டுப் பின்னர் சூரியாவைப் பார்த்து, ''நீ எங்கேயிருந்தடா அப்பா வருகிறாய்?—இவர்கள்தான் உன் பம்பாய் அத்தை ராஜமும் அவளுடைய பெண்ணும். இவர்களை நீ பார்த்ததே யில்லையே!'' என்றாள்.

''தேவப்பட்டணத்திலிருந்து வருகிறேன் அத்தை!'' என்று சொல்லிக் கொண்டே சூரியா ஓடக் கரையிலிருந்து இப்பால் வந்தான்.

''ஒருவருக்கும் காயம் படவில்லையே, அத்தை! ஏதோ நல்ல காலமாய்ப் போச்சு! இங்கேயே இந்த வண்டிக்குச் சத்தத்தைக் கொடுத்து அனுப்பி விடலாம். நம்முடைய வண்டியிலேயே எல்லோரும் போய்விடலாம்!'' என்றான்.

இதற்குள் சீதா ஓடையிலிருந்து கரையேறி வந்தாள். ''பெரியம்மா! அம்மாஞ்சியை அறிமுகம் செய்து கொள்வதற்குச் சரியான இடம்தான். இந்த ஓடையில் இன்னும் கொஞ்சம் தண்ணீர் அதிகம் இல்லாதது மட்டும் ஒரு குறை!'' என்று சொல்லிக் கொண்டே சூரியாவை ஒரு விஷமப் பார்வை பார்த்தாள். பிறகு அம்மாவின் அருகில் சென்று, ''பெட்டியிலிருந்து வேறு புடவை எடுத்துக்கொள்கிறேன் அம்மா! உனக்கு ஒன்றும் காயம் கீயம் இல்லையே?'' என்று கவலையுடன் கேட்டாள்.

''எனக்கு ஒன்றுமில்லை, சீதா! ஆனாலும் நீ இப்படி 'முழுகப் போகிறேன்' என்று கூச்சல் போடலாமா? ஒரு நிமிஷம் நான் கதிகலங்கிப் போய்விட்டேன்!'' என்றாள் ராஜம்.

''நீ இனிமேல் என்னைப் பற்றிக் கொஞ்சம் கூடக் கவலைப்பட வேண்டாம், அம்மா! அம்மாஞ்சி சூரியா இருக்கிறபோது உனக்கு என்ன கவலை? என்னை இந்த முழங்கால் மட்டும் ஜலத்திலிருந்து காப்பாற்றுவதற்காக அம்மாஞ்சி ஓடிவந்த வேகத்தை நீ பார்த்தாயோ இல்லையோ?'' என்று சொல்லிக் கொண்டே சூரியாவை மறுபடியும் ஒரு தடவை திரும்பிப் பார்த்துவிட்டுச் சிரிக்கத் தொடங்கினாள்.

''இந்தப் பெண்ணுக்கு எப்போது பார்த்தாலும் சிரிப்புதான்; எதற்கெடுத்தாலும் சிரிப்புதான்!'' என்றாள் ராஜத்தின் தமக்கை.

* * *

சூரியா சொன்னபடி எல்லோரும் ஒரே வண்டியில் ஏறிப் போகவில்லை. ராஜம்மாளுக்குத் தன் மருமகனோடு தனியாகப் பேச வேண்டும் என்ற எண்ணம். இதற்குள் இரண்டு வண்டிக்காரர்களுமாகக் குடையடித்த வண்டியை நிமிர்த்திச் சாலைக்குக் கொண்டு வந்து மாட்டையும் மெள்ளப் பூட்டி விட்டார்கள். ராஜம்மாள் வற்புறுத்தியதன் பேரில் அவளும் சூரியாவும் வாடகை வண்டியில் ஏறிக் கொண்டார்கள். சீதாவும் அவளுடைய பெரியம்மாவும் பெட்டி வண்டியில் ஏறிக் கொண்டார்கள். வண்டிகள் ராஜம்பேட்டையை நோக்கி 'ஜாம் ஜாம்' என்று சென்றன.

* * *

சீதா பெரியம்மாளிடம், ''அம்மாஞ்சியைப் பார்த்தால் லலிதாவை அச்சடித்தது மாதிரி இருக்கிறது; அம்மாஞ்சிக்குப் புடவை கட்டி விட்டால் லலிதா என்றே பார்க்கிறவர்கள் நினைப்பார்கள், பெரியம்மா! ஒருவேளை அவர்கள் இரண்டு பேரும் இரட்டைக் குழந்தைகளோ?'' என்றாள் சீதா.

''சீ சீ! அசடே! என்ன சொல்கிறாய்! லலிதாவை விடச் சூரியா மூன்று வயது பெரியவன். என் மனத்துக்குள்ளே நான் என்ன ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிறேன் என்றால்...''

''என்ன ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிறாய், சொல்லேன்!''

''அதைச் சொல்லி என்ன பிரயோஜனம்? தொழுவூர் அய்யனார் கிருபை வைத்தால் நடக்கும்!''

''அது யார் பெரியம்மா, தொழுவூர் அய்யனார்?'' என்றாள் சீதா.

''உனக்குத் தெரியாதா? நம் குடும்பத்தின் குலதெய்வம்! ரொம்பச் சக்தி வாய்ந்த தெய்வம்.''

''ஓகோ! அப்படியா? நான் என்ன நினைத்தேன், சொல்லட்டுமா, அத்தை! அய்யர்களிலே பணக்காரர்களுக்கு 'அய்யனார்' என்ற பட்டப் பெயரோ என்று நினைத்தேன்.''

''சீதா! எதற்கும் ஒரு குதர்க்கம் பேசுகிறது என்று வைத்துக் கொண்டிருக்கிறாய். இது நன்றாயில்லை. பெரியவர்கள் சொல்வதைப் பயபக்தியோடு கேட்டுக் கொள்ள வேணும்.''

சீதா உடனே கையைக் கட்டிக் கொண்டு, ''ஆகட்டும்; அப்படியே செய்கிறேன். அய்யனாரால் இப்போது



என்ன காரியம் ஆகவேணும்?'' என்று கேட்டாள்.

''நான் நினைத்தது கை கூடினால் ஆயிரத்தெட்டு தேங்காய் உடைப்பதாக வேண்டிக் கொண்டிருக்கிறேன்.''

''நீ நினைத்துக் கொண்டிருப்பது என்ன சொல்லு, பெரியம்மா!''

அபயாம்பாள் வண்டிக்காரனுக்குக் கேளாதபடி தன் குரலை மெல்லிய தாக்கிக் கொண்டு, ''உன்னைச் சூரியாவுக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கலாம் என்றுதான். கிட்டா உடனே சம்மதித்து விடுவான்; நான் சொன்னால் தட்ட மாட்டான். ஆனால் அந்த ராட்சஸி இருக்கிறாளே!'' என்றாள்.

''அது யார் ராட்சஸி, பெரியம்மா?''

''உன் அம்மாமி சரஸ்வதிதான்! அவள் சம்மதிப்பதுதான் சந்தேகம். பெரிய இடமாய் இருக்கணும்; எதிர் ஜாமீனும், சீரும் செனத்தியும் விடு கொள்ளாமல் வரணும் என்று அவள் ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிறாள். பகவான் புண்ணியத்திலே...''

''பெரியம்மா! நீ சொல்லுவது தப்பு, சரஸ்வதி அம்மாமி சொல்லுவதுதான் சரி. சூரியாவைப் பார்த்தால் என்னுடைய அண்ணாவோ தம்பியோ என்று சந்தேகப்படும்படி இருக்கிறது. அப்படிப் போய் யாராவது கல்யாணம் திட்டம் செய்வார்களா? பெண்ணுக்கும் பிள்ளைக்கும் குறைந்தது ஐந்து வருஷங்களாவது வித்தியாசம் இருக்க வேண்டாமா?''

''ஐந்து வருஷம் என்னத்துக்கு வித்தியாசம்? இரண்டு வருஷம் இருந்தால் எதேஷ்டம். உன் தாத்தாவுக்கு அதாவது எங்க அப்பாவுக்குப் பதினாலு வயதிலே கலியாணம் நடந்ததாம். அப்போது அம்மாவுக்கு வயது பதின்மூன்றுதான். உன் பாட்டி எத்தனை குழந்தை பெற்றாள் தெரியுமா? பதினேழு பெற்றாள்.''

''அதெல்லாம் அந்தக் காலம், பெரியம்மா! இந்த நாளிலே இருபது வயதுக்குக் குறைந்து எந்தப் பிள்ளையும் கல்யாணம் பண்ணிக்க மாட்டான்; அப்படிப் பண்ணிக் கொண்டாலும், அவர்கள் சந்தோஷமாயிருக்கமாட்டார்கள்!''

''ஏன் சந்தோஷமாக இருக்கமாட்டார்கள்? பேஷாக இருப்பார்கள். உன் அம்மாமி மாத்திரம் சம்மதித்தால் கல்யாணம் நடந்துவிடும். ஆனால் அவள் எங்கே சம்மதிக்கப் போகிறாள்! ரொம்பப் பேராசை அவளுக்கு. ஆனால் குழந்தைகள் மட்டும் தங்கக் கம்பிகள்தான்! அப்பாவின் குணத்தைக் கொண்டு அவர்கள் பிறந்திருக்கிறார்கள்!''

''பெரியம்மா! பிறத்தியாரைப் பற்றி அவர்கள் இல்லாத போது குறை சொல்லக் கூடாது. அது ரொம்பப் பிசகு. மாமியைப் பற்றி ஏன் இப்படியெல்லாம் சொல்கிறாய்? சரஸ்வதி மாமி ரொம்ப நல்லவள். என்னிடம் எவ்வளவு பிரியமாயிருக்கிறாள் தெரியுமா?'' என்றாள் சீதா.

''அசட்டுப் பெண்ணே! நீயும் உன்னுடைய அம்மாவைப் போலவேதான் இருக்கிறாய். வெளுத்ததெல்லாம் பால் என்று நினைக்கிறாய், மாமியின் சுபாவம் போகப் போகத் தெரியப் போகிறது, பார்!'' என்றாள் அபயாம்பாள்.

முதலில் சூரியாவுக்குச் சீதா ஏறிய வண்டியில் தானும் ஏறவில்லையே என்று இருந்தது. இந்த ஏமாற்றம் ஒரு கணத்துக்கு மேல் இருக்கவில்லை. சீதாவுடன் பேசிக் கொண்டு போவதற்கு அடுத்தபடியாக பம்பாய் அத்தையுடன் பேசிக் கொண்டு பிரயாணம் செய்வது அவனுக்கு மிகவும் உற்சாகமாக இருந்தது.

'' அத்தை! நீங்கள் எங்கே போய் விட்டு வருகிறீர்கள்? ராஜம்பேட்டையில் இருப்பதாக அல்லவா நினைத்தேன்? 'லலிதாவைக் கல்யாணத்துக்காகப் பார்க்க வருகிறார்கள்; நீயும் வந்து விட்டுப் போ!' என்று அப்பா கடிதம் எழுதியிருந்தார். ஆனால், உங்களையும் பார்த்துவிட்டுப் போகலாம் என்ற ஆசையினால்தான் நான் வந்தேன். போன வருஷம் லலிதா பம்பாய்க்குப் போய்த் திரும்பியதிலிருந்து உங்களைப் பற்றியும் சீதாவைப் பற்றியும் ஓயாமல் ஏதாவது புகழ்ந்து கொண்டேயிருப்பது அவளுக்கு வழக்கமாகி விட்டது! அதிலிருந்து எனக்கும் உங்களைப் பார்க்க வேண்டும் என்று ஒரே ஆவலாயிருந்தது'' என்று சூரியா தன்னுடைய வழக்கத்தைவிட அதிக படபடப்புடன் வார்த்தைகளைக் கொட்டினான்.

'' இங்கேதான் ஒரு வாரத்துக்கு மேலே இருந்தோம், சூரியா! அக்கா வீட்டில் சுமங்கலிப் பிரார்த்தனை நடந்தது. அதற்கு வர வேண்டுமென்று ரொம்பச் சொன்னாள். போய்விட்டுத் திரும்பினோம். வருகிற வழியிலேதான் இப்படி ஆயிற்று. நல்ல சமயத்துக்கு நீ வந்தாய்!'' என்றாள் ராஜம்.

''நான் வந்து என்ன செய்துவிட்டேன்? ஒன்றுமில்லையே!''

''அப்படிச் சொல்லாதே, அப்பா! வண்டி குடை கவிழ்ந்ததும் எனக்கு ஒரே பயமாய்ப் போய்விட்டது. அதுவும் இந்த அசட்டுப் பெண் விளையாட்டுக்காக, 'முழுகப் போகிறேன்; முழுகிக்



★ வாலிப உள்ளங்களை ஈர்க்கும் விசேஷ அம்சங்கள்.

★ இளைஞர் சமுதாயம்: லட்சிய நோக்கு கொண்ட யுவர் சங்கங்கள் பற்றிய கட்டுரைகள்.

★ சிறப்புச் சிறுகதைகள்.

★ அன்பே அகிலா! – புதிய சித்திரத் தொடர்கதை.

★ **இன்றைய பிரச்னை:**

சென்னை மாநகரை அழகுபடுத்துவது பற்றிப் பேசப்படுகிறது. இலேசில் நடக்கிற காரியமா? பெரிய பிரச்னை. இது பற்றிப் பல கேள்விகளைத் தயாரித்துக் கொண்டு நிபுணர் ஒருவரை அணுகுகிறோம். கேள்விகளும் அவர் தரும் பதில்களும் கல்கியில் இடம் பெறுகின்றன. இதே போல் வேலை நிறுத்தங்கள், விலைவாசி உயர்வு, அடிக்கடி கட்சி மாறுவது, கல்வித் தரம் குறைவது, வேலை இல்லாத் திண்டாட்டம் போன்ற பல பிரச்னைகளும் ஆராயப்படுகின்றன.

★ **தெரிந்த விளையாட்டு; தெரியாத விவரம்:**

பிரபலமான பெரிய விளையாட்டுகள் பற்றி இதுவரை பலர் அறிந்திருக்க முடியாத சின்னச் சின்ன ருசிகரமான தகவல்களைத் தொகுத்துத் தருகிறார் குண்டுமணி.

★ **வாரம் ஒரு நகைச்சுவைக் கதை:**

நகைச்சுவைக் கதைகளை வரவேற்கிறோம். ஏப்ரல் 16ந் தேதி இளைஞர் மலரில் தொடங்கித் தொடர்ந்து பன்னிரண்டு வாரங்களுக்கு நகைச்சுவைக் கதைகள் கல்கியில் இடம் பெறும். இப்பன்னிரண்டு கதைகளுள் சிறந்த ஒன்று என்று நாங்கள் கருதும் கதைக்கு வழக்கமான சன்மானம் தவிர விசேஷ பரிசும் உண்டு. (ரூ. 100.) இதுவரை வேறு எந்தப் பத்திரிகையிலும் எழுதியிராத புது எழுத்தாளர் இந்த விசேஷப் பரிசைப் பெறுவாரேயானால் எங்கள் மகிழ்ச்சி இரட்டிப்பாவதுடன் விசேஷப் பரிசும் இரட்டிப்பாகும். (ரூ. 200) எழுத்தாள அன்பர்களின் முழு ஒத்துழைப்பையும் வேண்டுகிறோம்.

ஊழியர்-தொழிலின் ஜீவநாடி



இயந்திரங்கள் மற்றும் மூலப் பொருள்களை விட ஊழியர்கள் —அதாவது, அவரவர்கள் தொழிலை கற்றறிந்து நன்கு பயிற்சி பெற்றவர்கள் இன்றியமையாதவர்கள் ஆவார்கள். 1921ல் ஜம்ஷெட்பூர் டெக்னிகல் இன்ஸ்டிட்யூட் நிறுவப்பட்டது முதல், கடந்த 50 வருடங்களாக இந்த உண்மை ஜம்ஷெட்பூரில் வலியுறுத்தப்பட்டு வந்திருக்கிறது. வருடம் 29 லட்ச ரூபாய் செலவுத் திட்டப்படி இயங்கி வரும் இந்த இன்ஸ்டிட்யூட் எங்கள் பணித்துறைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டு வருகிறது. மானேஜிங் டைரெக்டர் முதல், பள்ளி இறுதிப் படிப்பு முடிந்து பயிற்சி முடித்த முற்றும் புதிய ஊழியர் வரை இங்கு உருவாகின்றனர். பற்பல வருடங்களாக உருப்பெற்றிருக்கும் டெக்னீஷியன்களின் எண்ணிக்கை 19000 தவிர, சுமார் 2000 என்ஜினீயர்கள் மற்றும்இயக்குனர்களுக்குப் பயிற்சி அளித்து கவர்மெண்ட் ஸ்டீல் ப்ளான்ட்களுக்கும் சேவை புரிந்திருக்கிறது.

டாடா ஸ்டீல்

எங்கள் பலம் உறுதிமிக்க எஃகில் மட்டுமல்ல. திறமைமிக்க ஊழியர்களிலும் உள்ளது.

கொண்டிருக்கிறேன்' என்று கத்தினதும் எனக்கு என்னமோ போல் ஆகிவிட்டது. உன்னைக் கண்ட பிறகுதான் தைரியம் உண்டாயிற்று. வேண்டுமென்கிற மனுஷான் பக்கத்தில் இருந்தாலே எப்படிப்பட்ட ஆபத்திலும் ஒரு தைரியந்தானே ....!''

'' அத்தை! என்னைப் பார்த்ததும் நான் வேண்டும் என்கிறவன் என்று உனக்குத் தெரிந்துவிட்டதா! என்னை இதற்கு முன்னால் நீ பார்த்ததே கிடையாதே !''

''எத்தனை நாட்கள் பிரிந்திருந்தாலும் பார்க்காது இருந்தாலும் இரத்த பாசம் என்பது ஒன்று இருக்கிறதல்லவா? உன்னைப் பார்த்ததுமே எனக்குத் தெரிந்துபோய் விட்டது ! சூரியா ! உன்னுடைய வயதில் உன் அப்பா உன்னைப் போலவே இருந்தார். நீ தலையைக் கிராப் செய்து கொண்டிருக்கிறாய். உன் அப்பா குடுமி வைத்துக் கொண்டிருந்தார். மற்றப்படி தத்ரூபம் அதே மாதிரி இருக்கிறாய். திடீரென்று உன்னைப் பார்த்ததும் எனக்குப் பழைய காலத்து நினைவு வந்தது. வண்டி குடையடித்ததைப் பார்த்துவிட்டு அண்ணா தான் ஓடி வருகிறார் என்று நினைத்தேன். அண்ணா உன் பிராயமாக இருந்த நாளிலேதான் எனக்குக் கல்யாணம் நடந்தது. நேற்றுப்போல் இருக்கிறது. ஆனால், அதெல்லாம் நடந்து வருஷம் இருபது ஆகிவிட்டது!'' என்று ராஜம் சொல்லுகையில் அவளுடைய கண்கள் கலங்கின.

'' அத்தை ! கல்யாணம் ஆகிப் புக்ககத்துக்குப் போன பிறகு நீ இந்த ஊருக்கு வரவே இல்லையாமே? ஏன் அப்படி ?'' என்று சூரியா கேட்டான்.

'' ஆமாம் ; வரவேயில்லை. உன் அத்திம்பேரின் சுபாவந்தான் காரணம். இப்போதுகூட வரமாட்டேன் என்று சொன்னேன். ஆனால், வந்தது நல்லதாய்ப் போயிற்று. இப்போது வந்திரா விட்டால் உங்களையெல்லாம் எங்கே பார்க்கப் போகிறேன்? இந்த ஊரையெல்லாந்தான் மறுபடியும் எந்தக் காலத்தில் பார்க்கப் போகிறேன் ? சூரியா ! சீதாவைவிட இரண்டு வயது குறைவாயிருந்த போதே எனக்குக் கல்யாணம் ஆகிவிட்டது. அப்போது போனவள் இப்போதுதான் திரும்புகிறேன். ஆனாலும் இந்தச் சாலையும் ஓடையும், வயலும், வரப்பும், தோப்பும் துரவும், கோயிலும் குளமும் அப்படியே எல்லாம் ஞாபகம் இருக்கின்றன. இந்தச் சாலை வழியாக இதே மாதிரி மாட்டு வண்டியில் ஏறிக் கொண்டு எத்தனை உற்சவங்களுக்கும் கல்யாணங்களுக்கும் போயிருக்கிறேன், தெரியுமா ? அதையெல்லாம் நினைத்தால் சந்தோஷமாயுமிருக்கிறது; துக்கமாயுமிருக்கிறது!'' என்றாள் ராஜம்.

சூரியாவும் அப்போது சந்தோஷமும் துக்கமும் கலந்த மனநிலையை அடைந்தான். அத்தைக்கு ஏதாவது ஆறுதல் வார்த்தை சொல்ல வேண்டுமென்று நினைத்தான். ஆனால் ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை.

21. சீதாவின் காதலன்

மறுநாள் ராஜம்பேட்டை அக்கிரகாரத்தில் பெரிதும் பரபரப்புக் குடி கொண்டிருந்தது. சாயங்காலந்தான் மதராசிலிருந்து பெண் பார்க்க வருகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்திருந்தபோதிலும் அன்று காலையிலிருந்தே யாருக்கும் வீட்டுக்குள் இருப்புக் கொள்ளவில்லை. பாதிப் பேருக்கு மேல் அவரவர்கள் வீட்டு வாசலிலேயே நின்று கொண்டிருந்தார்கள். வீட்டுக்குள் வேலையா யிருந்தவர்கள் ஐந்து நிமிஷங்களுக்கு ஒரு தடவை வாசலுக்கு வந்து கிழக்கும் மேற்கும் பார்த்து விட்டு உள்ளே சென்றார்கள். ஊரிலேயே இப்படி யிருந்ததென்றால் கிட்டாவய்யர் வீடு எப்படி இருந்திருக்கும் என்று சொல்லவும் வேண்டுமா?

காலையில் காப்பி சாப்பிடுவதற்கே சிமாச்சுவய்யர் வந்து விட்டார். ''என்ன ஓய்? என்ன ஓய்?'' என்று அடிக்கடி கேட்டுக் கொண்டு சாயங்காலம் வரப்போகிறவர்களை வரவேற்பதற்கான காரியங்களைச் சுறுசுறுப்பாகக் கவனித்தார். இன்னும் பலர் ஒரு வேலையும் இல்லாமல் கிட்டாவய்யர் வீட்டுக்கு வருவதும் போவதுமாக இருந்தார்கள். ''இன்று சாயங்காலம்தானே வருகிறார்கள்?'' என்ற கேள்விக்கு ஆயிரம் தடவைக்கு மேல் கிட்டாவய்யர் 'ஜவாப்' சொல்லித் தீர வேண்டியதாயிருந்தது.

சரஸ்வதி அம்மாள் காலை நாலரை மணிக்கே எழுந்து பரபரப்பாக எல்லாக் காரியங்களையும் கவனிக்கத் தொடங்கினாள். பலபலவென்று பொழுது விடிவதற்குள்ளே வீடு மெழுகி வாசல் பெருக்கிக் கோலமும் போட்டாகிவிட்டது. அப்புறம் உக்கிராண அறையிலிருந்து சமையலறைக்குப் போவதும் சமையலறையிலிருந்து காமரா உள்ளுக்

ருப் போவதும், தரையிலிருந்த சாமான்களைப் பரணில் தூக்கிப் போடுவதும், பரணில் இருந்த சாமானைத் தரையில் இறக்கி வைப்பதும் அங்காங்கே உள்ளவர்களை ஏதாவது அதிகாரம் பண்ணுவதுமா யிருந்தாள்

''இன்றைக்கே இந்தப் பாடாயிருக்கிறதே, நாளைக்குக் கல்யாணம் என்று வந்தால் எப்படித்தான் சமாளிக்கப் போகிறேனோ?'' என்று அடிக்கடி அங்கலாய்த்துக் கொண்டாள்.

அபயாம்பாளையும் ராஜம்மாளையும் பார்க்கும்போதெல்லாம் அவர்கள் வந்தது பற்றிச் சரஸ்வதி அம்மாள் தன் திருப்தியைத் தெரிவித்தாள். ''ஏதோ சிரமத்தைப் பார்க்காமல் நேற்றே புறப்பட்டு வந்துவிட்டீர்களே! என்னுடைய பாரம் பாதி குறைந்தது. இவ்வளவு அவசரப்பட்டுக் கொண்டு நீங்கள் வந்திராவிட்டாலும் பாதகமில்லை! ஆனாலும் வந்ததுதான் சந்தோஷமாக இருக்கிறது. இதற்குத்தான் நமக்கு என்று நாலு மனுஷாள் வேணும் என்கிறது. நான் ஒண்டிக்காரி. என்னத்தை என்று கவனிப்பேன்? எங்க அம்மாவினாலும் ஓடியாடி முன்னேயெல்லாம் போல் இப்போது காரியம் செய்ய முடிகிறதில்லை. நீங்கள் வந்துதான் காரியம் நடக்க வேண்டும், இல்லாவிட்டால் நடக்கவே நடக்காது என்று சொல்கிறேனா? அது ஒன்றும் கிடையாது. ஆனாலும் சமயத்துக்கு நீங்கள் வந்து சேர்ந்ததுதான் மனத்துக்குத் திருப்தியாக இருக்கிறது'' என்று மிகப் பெரிய தமிழ்ப் புலவர்களைப் போல் இரு டொருள் வைத்துப் பேசினாள்.

உடனடியாகத் தன் தாயாரிடம் போய், ''கேட்டாயா அம்மா! குறுக்கே நெடுக்கே வீட்டிலே எங்கே போனாலும் இரண்டு நாத்தனார்மார்களும் நிற்கிறார்கள். ஒரு காரியமும் செய்ய முடிகிறதில்லை. அந்தப் பெண் சீதா ஒரு நிமிஷம்கூட விடமாட்டேன் என்று லலிதாவைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறாள்! இவர்கள் இவ்வளவு அவசரப்பட்டுக் கொண்டு வரவில்லையென்றால் யார் குறைப்படப் போகிறார்கள்? தலைக்கு மேலே எனக்கு இருக்கிற வேலையில் இவர்களை வேறே நான் விசாரித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் வீண் பொல்லாப்பு வந்து சேரும். ஏதோ ஒத்தாசைக்கு நீயாவது வந்து சேர்ந்தாயே, அதைச் சொல்லு. இல்லாவிட்டால் நான் தவித்துப்போயிருப்பேன்!'' என்று மற்றவர்களுக்குக் காதில் விழுந்தும் விழாமலும் இருக்கும்படி கூறினாள்.

சரஸ்வதி அம்மாள் சொன்னபடியே லலிதாவும் சீதாவும் இணைபிரியாமல், ஒருவரையொருவர் தொடர்ந்து கொண்டிருந்தார்கள். முதல்நாள் சாயங்காலம் சீதா வண்டியிலிருந்து இறங்கியவுடன் லலிதா அவளை ஆவலுடன் கட்டித் தழுவிக் கொண்டு வரவேற்றாள். அப்புறம் ஒருவரையொருவர் ஒரு நிமிஷமும் பிரியவில்லை. இராத்திரி இருவரும் படுத்துக் கொண்டதுகூட ஒரே பாயில் ஒரே தலையணையை வைத்துக் கொண்டுதான். இதெல்லாம் உதவாது என்று லலிதாவின் தாயார் எவ்வளவு சொல்லியும் அந்தப் பெண் கேட்கவில்லை. அன்றைக்குப் பொழுது விடிந்து எழுந்ததிலிருந்து இரண்டு பேரும் கூடிக் கூடிப் பேசிய வண்ணம் இருந்தார்கள். பேசுவதற்கு அவர்களுக்கு என்னதான் விஷயம் இருக்கும் என்று மற்றவர்களுக்கெல்லாம் வியப்பா யிருந்தது.

சீதா — லலிதா இவர்களின் நடத்தையைக் காட்டிலும் அதிகமான வியப்புக்கு உரியதாக இருந்தது சூரியாவின் நடவடிக்கைதான். முன் தடவையெல்லாம் அவன் ஊருக்கு வந்தால் வீட்டுக்குள் அதிகம் தங்கவே மாட்டான். கையோடு ஏதேனும் புத்தகம் கொண்டு வந்திருப்பான். எங்கேயாவது மூலையில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருப்பான். ''ரொம்பப் படிக்காதேடா. அப்பா! கண்ணுக்குச் சூடு!'' என்று அவனுடைய தாயார் எவ்வளவு சொன்னாலும் கேட்க மாட்டான். அம்மா ஏதாவது கேட்டால் அதற்கு அவன் பதில் சொல்வதே அபூர்வம். பெண் பிள்ளைகள் அதிகமாப் புழங்கும் சமையல் அறைக்கும் காமரா உள்ளுக்கும் அவன் வருவதே கிடையாது.

அப்படிப்பட்டவன் இந்தத் தடவை வீட்டு வாசலுக்கும் சமையல் அறைக்கும் காமரா உள்ளுக்கும் குட்டி போட்ட பூனையைப்போல் அலைந்து கொண்டிருந்தான். அடிக்கடி சீதாவும் லலிதாவும் இருக்கும் இடத்துக்கு வருவான். ''ஏது? இரண்டு பேரும் ஒருவரையொருவர் ஒரு நிமிஷங்கூட விட்டுப் பிரிய மாட்டீர்கள் போலிருக்கிறதே! நாளைக்குக் கல்யாணமாகிப் புக்ககம் போய்விட்டால் என்ன செய்வீர்கள்?'' என்பான். பெரும்பாலும் லலிதாதான் பதில் சொல்லுவாள்: ''நாங்கள் ஏதாவது செய்துகொள்கிறோம். உனக்கென்ன அதைப் பற்றி?'' என்பாள். சில சமயம் ''பெண்கள் பேசிக் கொண்டிருக்கிற இடத்தில் புருஷப் பிள்ளைக்கு என்ன வேலை? போய் உன் காரியத்தைப் பார்!'' என்பாள். ''என் காரியம் வேறு ஒன்றும் இல்லையே? உன்னை விசாரித்துக் கொள்வதுதான்


சிறந்த முனை என்றால் சிறந்த பிளேடு...
வைரமுனைகொண்ட சில்வர் ப்ரின்ஸ்
உங்களுக்கு சுகமான, வழவழப்பான
சவரங்களை அளிக்கிறது!
பிளேடு கலை நுட்பத்தின் முன்னேற்றத்திற்கு எடுத்துக்காட்டு, சில்வர் பரின்ஸ் ஸ்டெ-யின்லெஸ் முனை. கூர்மையானது...நீடித்து நிற்கிறது கன்னத்தில் கரகரவென்று பிளேடு இழுபடுவதை தவிர்க்கிறது. முகச் சவரத்தை இன்பமயமாக்குகிறது.
சில்வர் ப்ரின்ஸ் ஸ்டெயின்லெஸ் இன்றே உபயோகித்துப் பாருங்கள். அது இல்லாமல் இவ்வளவு நாட்கள் எப்படிச் சமாளித்தோமென வியப்பீர்கள்!
SILVER PRINCE
STAINLESS
SILVER
PRINCE
STAINLESS
5 BLADES
STAINLESS BLADES
வைரமுனையுடைய ஒரே பிளேடு

Grant-2TM

எனக்கு இப்போது வேலை. தங்கைக்குக் கல்யாணம் என்றால் தமையன் சும்மா உட்கார்ந்திருக்க முடியுமா? உலகம் சிரிக்காதா?'' என்பான் சூரியா.

''ஆமாம்; நீ ரொம்ப இங்கே வந்து வெட்டி முறித்து விடுகிறாயாக்கும்? போடா போ!'' என்பாள் லலிதா.

''அவனை ஏண்டி விரட்டி யடிக்கிறாய்? ஏதோ உன்பேரில் உள்ள பிரியத்தினால் தானே வருகிறான்'' என்பாள் சீதா. இந்தச் சமயத்தில் லலிதாவின் சின்னத் தம்பி கண்டுப் பயல் குறுக்கிடுவான்.

''ஏன் பொய் சொல்லுகிறாய் அண்ணா! நீ லலிதாவைக் கவனித்துக் கொள்வதற்காகவா இப்படி வலிய வந்துகொண்டிருக்கிறாய்? பம்பாய் அத்தங்காளைப் பார்ப்பதற்குத்தானே வீட்டுக்குள் சுற்றுகிறாய்? எனக்குத் தெரியாது என்று நினைத்தாயோ?'' என்று குட்டை உடைத்து விடுவான். ''சீ! கழுதை சும்மாயிரு!'' என்பான் சூரியா. ''நான் கழுதை என்றால் நீ கழுதையின் அண்ணா தானே!'' என்பான் கண்டுப் பயல். விவகாரம் முற்றிச் சூரியா கண்டுவின் கெண்டைப் பிடிக்க ஓடுவான். ஆனால் மறு நிமிடம் திரும்பி வந்து விடுவான்.

சூரியாவின் தொந்தரவிலிருந்து தப்புவதற்காகவே லலிதாவும் சீதாவும், அன்று மத்தியானம் சாப்பாடு முடிந்தவுடனே குளத்தங்கரைப் 'பங்களா'வுக்குச் சென்றார்கள்.

* * *

சீதா பம்பாயிலிருந்து வந்ததும் ராஜம்பேட்டையில் ஒரு வாரம் இருந்தாள். அந்த ஒரு வாரம் சீதாவும் லலிதாவும் அடிக்கடி குளத்தங்கரைப் பங்களாவுக்குப் போவார்கள். பிறருடைய தொந்தரவு இல்லாமல் தங்களுடைய மனோரதங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பார்கள். பகலெல்லாம் பேசினாலும் பேச்சு முடியாது. சூரியன் அஸ்தமித்தபிறகு கூட வீட்டுக்குத் திரும்ப மாட்டார்கள். பங்களாவுக்கு எதிரில் இருந்த குளத்தங்கரைப் படிக்கட்டுகளில் உட்கார்ந்து கொண்டு பேச்சைத் தொடங்குவார்கள். அந்த இளம் பெண்கள் அப்படி என்னதான் முடிவில்லாத அந்தரங்கம் பேசுவார்களோ என்று வானமா தேவி தன்னுடைய லட்சக் கணக்கான நட்சத்திரக் கண்களில் அதிசயம் ததும்பப் பார்த்துக் கொண்டிருப்பாள்.

ஒரு நாள் அத்தகைய மோகன முன்னிரவு வேளையில் சீதாவைப் பார்த்து லலிதா, ''அத்தங்கா! நான் எத்தனை தடவை கேட்டும் ஒரு கேள்விக்கு மட்டும் பதில் சொல்ல மாட்டேன் என்கிறாயே? நீ யாரைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாய்? எப்போது உனக்குக் கல்யாணம்?'' என்று கேட்டாள்.

எமனை வென்ற எக்ஸ்ரே!



உலக சரித்திரத்தில் மனித குலம் எத்தனையோ பல யுத்தங்களைக் கண்டிருக்கிறது. அத்தனை போர்களிலும் இறந்துபட்டவர்களின் தொகையை விட அதிகம் பேர் எக்ஸ்ரே என்ற அற்புதக் கண்டுபிடிப்பு காரணமாக மரணத்தின் வாயிலிருந்து மீட்கப்பட்டிருக்கிறார்கள். எக்ஸ் கதிர்களைக் கண்டுபிடித்தவர் ராண்ட்ஜென். அவர் இன்று உயிருடன் இருந்தால் எக்ஸ்ரே துறை அடைந்திருக்கும் முன்னேற்றம் கண்டு வியந்தே போவார்! - ஸ்கோலா

சீதா ஆகாயத்தை நோக்கிய வண்ணம் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். பிறகு அவள் லலிதாவைப் பார்த்துச் சொன்னாள்:

''என் கல்யாணப் பேச்சை எடுக்க வேண்டாம் என்றால் நீ கேட்கவில்லை. பதில் சொன்னால்தான் விடுவாய் போல் இருக்கிறது. நல்லது; என்னுடைய அந்தரங்கத்தைச் சொல்லுகிறேன், கேள். அம்மா சொன்னாலும் சரி, அப்பா சொன்னாலும் சரி, அவர்கள் இஷ்டப்படி நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சம்மதிக்க மாட்டேன். எனக்குப் பிரியம் இருந்தால்தான் சம்மதிப்பேன். என்னைக் கல்யாணம் செய்து கொள்கிறேன் என்று ஒருவன் வந்தால் உடனே 'சரி' என்று சொல்லி விடுவேனா? ஒரு நாளும் மாட்டேன். லலிதா! உனக்கு லைலா — மஜ்னூன் கதை சொன்னேன் அல்லவா? அது ஞாபகம் இருக்கிறதா? மஜ்னூனை லைலா என்ன கேட்டாள்? 'இந்தியா தேசத்திலிருந்து பஞ்சவர்ணக் கிளி வேண்டும்' என்று கேட்டாள். மஜ்னூனும் 'கொண்டு வருகிறேன்' என்று போனான். ஆனால் நான் அவ்வளவு அற்பமான பொருளைக் கேட்க மாட்

டேன். என்னை மணந்து கொள்கிறேன் என்று வருகிறவனுக்கு இராத்திரி வேளையில் நட்சத்திர மயமான ஆகாயத்தைக் காட்டுவேன். எனக்குப் பிடித்த பன்னிரண்டு நட்சத்திரங்களைக் குறிப்பிட்டு, 'அந்த நட்சத்திரங்களைக் கொண்டு வந்தால் உன்னைக் கல்யாணம் செய்து கொள்வேன்' என்பேன். அவன் போய் இன்னொருவன் வருகிறான் என்று வைத்துக்கொள். அவனைப் பார்த்து 'முள் இல்லாத ரோஜாச் செடியிலிருந்து மல்லிகைப் பூ மணமுள்ள செண்பக மலர் எடுத்து மாலை கட்டிக் கொண்டு வர உன்னால் முடியுமா? கொண்டு வந்தால் உன்னைக் கல்யாணம் செய்து கொள்வேன்' என்று சொல்வேன். அவன் போய் இன்னொருவன் வந்தால், 'வானவில்லின் வர்ணங்களையும் தோகை மயிலின் சாயலையும் கலந்து ஓர் அற்புதமான வர்ணச் சித்திரம் எழுதிக் கொண்டு வா! கொண்டு வந்தால் உன்னை நான் மணந்து கொள்வேன்!' என்பேன்...''

சீதா அடுத்தபடி என்ன சொல்லலாம் என்று ஒரு கணம் யோசித்தபோது லலிதா, ''அத்தங்கா! இது என்ன பேச்சு? இப்படியெல்லாம் நீ கேட்டால் யாரால் கொண்டு வர முடியும்? உன்னைப் பைத்தியம் என்று நினைத்துக் கொள்வார்கள். உனக்குக் கல்யாணமே ஆகாது!'' என்று சொன்னாள்.

''அப்படியா நினைத்தாய், லலிதா! ஒரு நாளும் இல்லை. மூடர்கள் எல்லாரும் நான் கேட்டதைக் கொடுக்க முடியாது என்று போய்விடுவார்கள். கடைசியாகப் புத்தியுள்ளவன் ஒருவன் வருவான். வந்து, அவன், 'இதோ பார்! நீ கேட்டதையெல்லாம் கொண்டு வந்து விடுவேன். ஆனால் உனக்கு நான் வேண்டுமா? அல்லது வெறும் நட்சத்திரமும் சித்திரமும் பூவும் காற்றும் வேண்டுமா? என்னையே உனக்குக் காணிக்கையாகக் கொடுக்க வந்திருக்கிறேனே? அவை யெல்லாம் எதற்கு?' என்று கேட்பான். மறு வார்த்தை பேசாமல் அவனைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதிப்பேன்.''

''அம்மம்மா! அவ்வளவு பொல்லாத மோசக்காரியா நீ?''

''இதில் மோசம் என்ன வந்தது, லலிதா? பின்னே என்னவென்று நினைத்தாய்? மஜ்னூன் 'இந்தியா தேசத்துக் கிளியுடன் திரும்பி வந்தபோது லைலாவைக் காணமல் பைத்தியம் பிடித்து ஊர் ஊராய் அலைந்தான். என்னை உண்மையில் காதலிப்பவனை 'அந்த மாதிரி நான் பைத்தியமாக அடிக்க வேண்டும் என்கிறாயா?''

சீதாவின் தர்க்கம் லலிதாவின் மூளையில் ஏறவில்லை. எனவே, அவள் ''சரி! நீ உன் இஷ்டப்படி செய் அம்மா! உன்னோடு பேசி என்னால் ஜெயிக்க முடியுமா?'' என்றாள்.

* * *

ஆனால் இன்றைக்கு லலிதாவும் சீதாவும் குளத்தங்கரைப் பங்களாவுக்குச் சென்று தனிமையை அடைந்த பிறகும் பேச்சு அவ்வளவு சுவாரசியமாகத் தொடங்கவில்லை. இரண்டு பேருடைய மனத்திலும் ஏதோ ஒரு தடங்கல் இருந்து தாராளமாகப் பேச முடியாமல் தடை செய்தது.

''லலிதா! இன்றைக்கு நாம் இங்கு வந்தது சரியில்லை. இதற்குள் மாமி நம்மைத் தேட ஆரம்பித்திருப்பாள். நான் தான் உன்னை இங்கு அழைத்து வந்து விட்டேன் என்று என்னைத் திட்டினாலும் திட்டுவாள்!'' என்று சீதா ஆரம்பித்தாள்.

''உன்னை எதற்காகத் திட்ட வேண்டும்? வேண்டுமானால் அம்மா என்னைத் திட்டட்டும்; நான் அதற்குப் பதில் சொல்லிக் கொள்கிறேன்!'' என்றாள் லலிதா.

''சாப்பிட்ட உடனே உனக்குத் தலை வாரிப் பின்ன வேண்டும் என்று மாமி சொல்லிக் கொண்டிருந்தாள். தாழம்பூ வைத்துப் பின்னுவதற்கு ஒரு மணி நேரமாவது ஆகுமல்லவா? அவர்களோ சாயங்காலம் ஐந்து மணிக்கே வந்து விடப் போகிறார்களாம். நாம் இங்கே உட்கார்ந்திருந்தால் எப்படி?'' என்றாள் சீதா.

''அதென்னமோ அம்மா! இந்த ஏற்பாடெல்லாம் எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. என்னை விட நீ ஒரு வயது மூத்தவள் அல்லவா? உன் கல்யாணத்தை முடிவு செய்துவிட்டல்லவா என் கல்யாணத்தைப் பற்றிப் பேசவேண்டும்? அப்பா கூட இப்படிச் செய்கிறாரே என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. எனக்கு என்ன இவ்வளவு அவசரம் கல்யாணத்துக்கு? இன்றைக்குத்தான் பாரேன்! இவ்வளவு தடபுடலும் ஆர்ப்பாட்டமும் எதற்காக என்று எனக்குத் தெரியவில்லை. இதைப் பற்றிச் சொல்லலாம் என்று பார்த்தால் அம்மா சண்டைக்கு வரப் போகிறாளே என்று பயமாக இருக்கிறது...''

இந்தச் சமயத்தில் ''யாருக்கு என்ன பயம்? நான் ஒருவன் இருக்கிறபோது யாரும் பயப்படவேண்டியதில்லை'' என்று சொல்லிக் கொண்டே பங்களாவுக்குள் பிரவேசித்தான் சூரியா. (தொடரும்)

மூன்று மந்திரவாதிகள்

கதை: வாண்டுமாமா

சித்திரம்: ராஜு

26




ஆனந்தனின் அழைப்பை ஏற்று வந்த கழுகு மூலிகை ஒன்றைக் கொண்டு வருகிறது.
இந்த மூலிகைச் சாறு உங்கள் பார்வையை மீட்டு விடும் அப்பா.
ஆ... உண்மை தான்.. இதோ மங்கலாக... இப்போ பிரகாசமாகவே... நீங்கள் எல்லாரும் என் அருமைக் குழந்தைகளே! ஆஹா... உங்களைப் பெற்றதின் பலனை அடைந்து விட்டேன்.
சகோதரர்கள் படை திரட்டுவதில் முனைந்தார்கள்.
என் நண்பன் கெட்டையனிடம் ஓலை கொடுத்தனுப்புகிறேன் சந்தனபுரிக்கு. சற்குணநாதர் படைகளோடு விரைந்து வருவார்.
என் கழுகுத் தோழன் என் ஓலையைக் கலாவதியிடம் கொண்டு சேர்க்கும்.
என் பவள புறா உருக்கொண்டு பறந்து போய்ப் படைகளோடு வந்து சேருவாள்.
மந்திர தந்திரங்களினால் வெற்றி கொள்ளாமல் வீரத்தினாலேயே வெற்றி கொள்ள முடிவு செய்து சகோதரர்கள் பெரும் படையுடன் ரணதீரனைச் சந்திக்கக் கிளம்புகிறார்கள்.
கடுமையான போர்....
ரணதீரனின் வீரர்கள் புறமுதுகிட்டு ஓடுகிறார்கள்.
பத்மபுரிக் கோட்டைக்குள் மூன்று அரச குமாரர்களும் வெற்றி வீரர்களாக நுழைகிறார்கள்.


தம் மைந்தர்களைச் சிங்காதனத்தில் அமர்த்தி விடுகிறார் பரிமளநாதர். தோல்வியைத் தழுவிய ரணதீரன் மன்னரின் கால்களில் விழுகிறான் மன்னிப்புக் கோரி.
உன் செயல்களுக்கு உன்னை உயிரோடு விடவே கூடாது. ஆனால் உன்னைக் கொல்ல நான் விரும்பவில்லை... இந்தத் துரோகியை நாடு கடத்தி விரட்டுங்கள் மதிவாணரே.
இழந்த பார்வையை மீண்டு, நாட்டையும் மீட்டுக் கொடுத்த தன் அருமை மைந்தர்களின் மண விழாவினையும் கண்டு களிக்கிறார் பரிமளநாதர்.
நம்மை விடப் பார்த்திபன் தான் அதிர்ஷ்டக்காரன் இல்லையா ஆனந்தா?
சந்தேகமில்லாமல். இரண்டு பெண்டாட்டிக் காரன் தான் திண்டாடுவான். மூன்று பெண்டாட்டிகளானால்...
திண்டாட்டம் பழகிப் போய் விடும். பாக்யமாகி விடும் என்கிறாயாக்கும். என் அன்புப் புவனாவின் ஆதரவு இருக்கும் வரை என்னால் எதையும் சமாளிக்க முடியும்.
சரி.. சரி... எங்களுக்குத் தூக்கம் வருகிறது. எத்தனை நேரம் இப்படியே இருப்பது?.. மாலை வேறு கழுத்தை அழுத்துகிறது!
எல்லோருக்கும் வணக்கம். அரச குமாரர்களுக்கு விடை கொடுங்கள்.

முற்றும்.


அந்த நாள் ஓய்யாரம் குடும்பத்துக்கு
கொண்டு தந்தது எதுவோ ?
Binaca
அதுவோ பினகா !
அதன் புதிய ஸாண்டல்வுட் டால்க்தூலை
பினகா, சந்தனத்தின் சாறெடுத்து, சத்தெடுத்து, சருமப் பராமரிப்பு சாதனம் கலந்தெடுத்து படைத்துள்ளது. சுழல் வண்ணப் பெட்டியினில் அடைத்து அளித்துள்ளது. அந்நாள் ஒய்யாரத் தன்னில், குடும்பத்தினரைக் கொலுவேற்ற, சந்தன மயமான புதிய பாதை—இன்றே ஒரு புதிய பினகா ஸாண்டல் வுட் டால்க் டின் வாங்கி அளிப்பீர்.
நாட்டம் அவர்க்கு சந்தனத்தில் இல்லை எனில், நாடிப் பெறுவீர் பினகா ரோஸ் டால்க்
பினகா
டால்க்—குடும்பம் முழுக்க விரும்பும்



யாருக்கு?

மலையாள மூலம்: ஜப்பார்
தமிழில்: மணவை முஸ்தபா


மேகம் கனத்துக் கொண்டு வந்தது. தூறல்களும் விழத் தொடங்கின. ஆனால் இதை யெல்லாம் பொருட்படுத்தாதவராகக் காதர் சாஹிபு வெகு வேகமாகப் புதைகுழி தோண்டிக்கொண்டிருந்தார். இடைவிடாமல் தூறல் போட்டுக் கொண்டிருந்த போதிலும் காதர் சாஹிபின் நெற்றியிலிருந்து வியர்வை நீர் வழிந்து கொண்டுதான் இருந்தது. ஆறடி நீளமும் இரண்டடி அகலமும் உள்ள புதை குழி வேகமாக வெட்டி முடிக்க வேண்டும். கடந்த பத்தாண்டு காலமாகப் புதை குழி வெட்டுவதையே தொழிலாகக் கொண்டிருந்த காதர் சாஹிபுக்குப் புதை குழி தோண்டுவதில் நல்ல அனுபவம் உண்டு. இதுவரைக்கும் அவர் எத்தனையோ புதை குழியில் தோண்டியிருக்கிறார். பச்சிளங் குழந்தைகள் முதல் மூப்பின் எல்லையை எட்டிப் பிடித்த கிழவர்கள் வரை எல்லோரது இறுதிப் பயணத்துக்கும் புதை குழி வெட்டிக் கொடுத்த பெருமை அவருக்கு உண்டு. உயர்ந்து நிற்கின்ற பள்ளி வாசலைச் சார்ந்து காணப்படுகின்ற 'புதை குழி'களில் ஆவி ஒடுங்கிக் கிடக்கும் பலரைப் பற்றிய வரலாறும் அவருக்கு நன்கு தெரியும். மரணத்தின் முன்னால் குபேரனும் ஏதுமற்ற ஏழையும் ஒன்றாக இணைந்து உறங்கும் அந்தக் காட்சியைப் பல சமயத்தில் கண்டு வியப்பதுண்டு.

புதைகுழி வெட்டி முடித்தால் முழுசாக ஒரு ரூபாய் கிடைக்கும். இன்று இறந்திருப்பவர் ஊரிலேயே மிகப் பெரிய பணக்காரர். ஆயினும் காதர் சாஹிப்புக்கு இதனால் ஒரு பயனுமில்லை. அவருக்கு அந்த ஒரு ரூபாய்தானே கூலியாகக் கிடைக்கப் போகிறது! மண்வெட்டியை நனைந்த மண்ணில் பதித்து எடுக்கும்போது மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியது.

கையும் கண்ணும் புதைகுழியை நோக்கியிருந்தாலும் காதரின் மனம் மட்டும் அவரது குடும்பத்தைச் சுற்றியே வட்டமிட்டுக்கொண்டிருந்தது. அடுத்தநாள் பெருநாள் பண்டிகை. மண்வெட்டியை எடுத்துத் தோளில் சாத்திக் கொண்டு அவர் வீட்டை விட்டு வெளிக் கிளம்பியபோது அவர் மனைவியால் அந்த விஷயத்தை நினைவுபடுத்தாமலிருக்க முடியவில்லை.

''பெருநாள் பண்டிகைக்குப் பிள்ளைகளுக்குத் துணிமணிகள் வாங்க வேண்டும்; அரிசி முதலிய சமையல் சாமான்களும் வியாதியில் படுத்திருக்கும் பாட்டிக்கு மருந்தும் வாங்க வேண்டும்.''

கடந்த நான்காண்டு காலமாக அவர் மனைவி புதுத் துணியின் வாசனையே அறியவில்லை. கிழிந்து கந்தலாகிப் போன சேலையும் ஜாக்கெட்டுமே அவளது பொன்னிற மேனியை அரைகுறையாக மூடிக் கொண்டிருந்தது. கிழிந்த ஜாக்கெட்டின் சந்து வழியாகத் தன் மனைவியின் வெளிறிய சரீரம் வெளித் தெரியும்போதெல்லாம் காதர் சாஹிபு தன் ஏழ்மையை எண்ணி வேதனைப்படுவார். மற்றப் பெண்களைப் போல் அவள் எப்போதும் தன் குறைகளைப் பற்றி ஓலமிடும் பழக்கமுடையவள் அல்ல. எவ்விதத் துன்பத்



தையும் மௌனத்துடனேயே பொறுத்துக் கொள்ளும் இனிய சுபாவமுடையவள். தனது கணவனின் கஷ்டநிலை அவளுக்கு நன்கு தெரியும். இருந்தபோதிலும் பெருநாளன்று தவிர்க்க முடியாத சில கடமைகளைச் செய்தே தீர வேண்டும். அன்றாடம் கையேந்தி நிற்கும் பிச்சைக்காரர்களும் புத்தாடை அணிந்து மகிழ்ச்சிப் பெருக்கோடு நடமாடும் நாளாகும் பெருநாள் பண்டிகை. இதனை உத்தேசித்தே அவர் மனைவி தன் கணவனுக்குப் பெருநாளை நினைவுபடுத்தினாள்.

ஆனால், அவளது இவ்வேண்டுகோள் எப்படி நிறைவேறும்? பிரேத அடக்கம் நடந்து முடிந்தால் ஒரு ரூபாய் கிடைக்கும். நூறு நயாபைசாக்களைக் கொண்டு வீட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்து பெருநாள் பண்டிகையை எப்படிக் கழிக்க முடியும்? மனக் கிலேசத்தை உண்டுபண்ணிய இவ்வெண்ண அலைகள் அவர் மனத்திரையில் முட்டி மோதி அவரை அலைக்கழித்த வண்ணம் இருந்தன.



காதர் சாகிபு தன் உடம்பிலுள்ள சக்திகளையெல்லாம் ஒன்றுதிரட்டி வெகு வேகமாகக் குழி தோண்டும் வேலையை முடித்தார். குழியைச் சுற்றிலும் வெட்டிய ஈர மண் பெருங் குவியலாகக் குவிந்து கிடந்தது. சோக மயமான பிரார்த்தனை ஒரு பிரேத ஊர்வலம் அண்மையில் வந்து கொண்டிருப்பதை அறிவித்தது. புதைகுழி தோண்டும் வேலையும் முடியவே காதர் சாகிபு குழியின் மேல் பாகத்தில் ஏறி நின்று கையில் மண்வெட்டியை ஊன்றிப் பிடித்தவண்ணம் பூதவுடல் வருகைக்காகக் காத்திருந்தார். பெருந் திரளான மக்கள் திரண்டு வரும் பிரேத ஊர்வலம் பள்ளியை அடைந்தது. தன் வாழ்நாளில் இவ்வளவு பெருந்திரளான மக்கள் சூழ்ந்து வரும் பிரேத ஊர்வலத்தைக் காதர் சாகிபு இதற்கு முன் கண்டதே யில்லை!

சமய சம்பந்தமான சடங்குகளெல்லாம் நடந்து முடிந்த பின்னர் பிரேதப் பெட்டி குழியின் அருகில் கொண்டு வந்து வைக்கப்பட்டது. பிரேதப் பெட்டியின் மூடி திறந்தவுடன் காதர் சாகிபு பிரேதத்தை உற்றுப் பார்த்தார். பருத்த சடலம் — ஒடுக்கமான புதைகுழிக்குள் இதனை இறக்கி வைப்பது சிறிது சிரமமே. இறந்த செல்வந்தரின் உறவினர்கள் இருமருங்கும் வந்து நின்றார்கள்.

''மெதுவாகப் பார்த்து இறக்க வேண்டும். இல்லாவிட்டால் கீழே விழுந்துவிடும்.''

இறந்தவரின் உறவினர் ஒருவர் கூறிய இவ்வார்த்தையைக் கேட்டுக் காதர் சாகிபு வியப்படைந்தார். மண்ணோடு சேர்ந்து மக்கி மடியப் போகும் பிரேதத்தைப் பற்றி அவர் காட்டிய பரிவையும் கவலையையும் எண்ணிய போது காதருக்குச் சிறிது வியப்பே தோன்றியது. ஒரு சமயம் அவர் அவ்வாறு கூறியது அந்தப் பிரேதத்தைப் பற்றி இருக்காது. இறந்தவரின் பணமும் புகழும் உலகில் தங்கி அவ்வாறு சொல்ல வைத்திருக்கிறது என்று தான் எண்ணத் தோன்றியது.

பிரேதம் பத்திரமாகவே குழியினுள் இறக்கி வைக்கப் பட்டது. பலகையும் மூடப் பட்டு விட்டது. மண்ணை வெட்டிக் குழி நிரப்பும் வேலையும் தொடங்கியாயிற்று. வந்திருந்தவர்கள் ஆளுக்கொரு பிடி மண்ணை



எடுத்துக் குழியில் போட்டு விட்டுத் திரும்பிச் சென்றார்கள். மற்றவர்களைப் போல் காதர் சாகிபும் ஒரு பிடி மண்ணைக் கையிலெடுத்துக் குழியில் போடக் குனிந்தார். குனிந்த அவர் சாவதானமாகப் பார்த்தார். பரலோகத்துக்கு அனுப்பத் தயாராக வைத்துள்ள மிகப் பெரிய 'பார்சல்' போல் பிரேதம் குழியில் கிடந்தது. பால் போன்ற வெண்மை நிறம் பொருந்திய நேர்த்தியான துணியால் பிரேதம் போர்த்தப்பட்டிருந்தது என்பது அவர் நினைவுக்கு வந்தது. இதை எண்ணியபோது இரண்டு மூன்று பிரச்னைகள் காதர் சாகிபின் சிந்தனையைப் பிடித்துக் குலுக்கத் தொடங்கின. கிழிந்த ஜாக்கெட்டின் வழியாக வெளித் தெரியும் தன் மனைவியின் வெளுத்த மேனி, மரணத்தின் வாயிலில் நின்று போராடும் நோய்வாய்ப்பட்ட தன் பாட்டி, அடுத்து வரப் போகும் பெருநாள் பண்டிகை. இத்தனையும் அவர் மனத்திரையில் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்து தோன்றிய வண்ணம் இருந்தன.

வந்திருந்த மக்களெல்லாம் சென்று விட்டார்கள். புதைகுழியை மண்ணால் நிரப்பிக் கல் நடவேண்டிய வேலையும் காதர் சாகிபுக்கு உண்டு. இவ்வேலையைச் செய்து கொண்டிருக்கும்போதே அவர் மனக் கண் முன் பிரேதத்தை மூடியிருக்கும் நேர்த்தியான வெண்ணிறத் துணி தோன்றியது. தோன்றி உள்ளத்தை அலைத்தது. விலையுயர்ந்த அந்தத் துணியைக் கைப்பற்றினால் எல்லாப் பிரச்னைகளுக்கும் தகுந்த பரிகாரம் காண முடியும். குறைந்தது பத்துப் பதினைந்து ரூபாய்களாவது பெறாமல் போகாது. தன் மனைவிக்கு ஜாக்கெட் தைத்தது போகப் பாக்கியுள்ளதை விற்றால் பாட்டிக்கு மருந்தும் பெருநாள் செலவும் சுலபமாக முடியும்.

நல்ல இருட்டு. மழையும் வலுத்துவிட்டது. மழைக்குப் பள்ளிவாசலில் ஒதுங்கினார் காதர். 'சோ'வென்று கொட்டிக் கொண்டிருந்தது மழை. எத்தனை நேரம்தான் நிற்பது? ஒரு முடிவுக்கு வந்தவர், மண்வெட்டியைத் தோளில் சாத்திக் கொண்டு புதைகுழிகள் நிறைந்த பகுதிக்குள் மெதுவாக நடந்து சென்றார். திட்டுத் திட்டாகக் காணும் புதைகுழிகளுக்கிடையே நடந்து சென்ற காதர் செல்வந்தரின் புதைகுழியருகே சென்று நின்றார். எத்தகைய தைரியசாலியையும் குலைநடுங்கச் செய்யும் இடமாயினும் காதருக்கு எத்தகைய அச்ச உணர்வும் ஏற்படவில்லை. ஒரு விநாடியும் வீணாக்காது புதைகுழி மண்ணை மேலெடுத்துப் போடத் தொடங்கினார். மூடியிருந்த பலகைகளையும் அப்புறப்படுத்தினார். குழிக்குள் மெதுவாக இறங்கிப் பிரேதத்தை மூடியிருந்த வெண்ணிறத் துணியை அவிழ்த்து எடுத்து வேகமாக மேலே ஏறினார். குழியைப் பழைய நிலையில் மூடி மறைத்த பின் வீடு நோக்கி நடை போட்டார்.

மகிழ்ச்சி அவர் உள்ளத்தில் குமிழியிட்டுக் கொண்டிருந்தது. விரைவில் வீடு சென்று தன் மனைவியை எழுப்பித் தனக்குக் கிடைத்த அதிர்ஷ்டத்தைச் சொல்ல வேண்டும்; பிரேதத்தைப் போர்த்தியிருந்த துணி என்பதை மட்டும் எக்காரணத்தைக்கொண்டும் கூறக் கூடாது. கூறினால் அவள் இத்துணியைக் கையினால் தொடவே மாட்டாள் என்றெல்லாம் தமக்குத் தாமே எண்ணிக் கொண்டு தம் நடைக்கு வேகம் தந்தார். போகும்போதே துணியை ஒரு முறை தடவிப் பார்த்தார். மிகவும் மிருதுவான துணி. இதில் ஜாக்கெட் தைத்து அணிந்தால் எவ்வளவு மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைவாள். புதுத் துணி உடுத்துத் தன் முன் வரும்போது வெட்கத்தால் நாணித் தலை கவிழ்த்துக் கொள்வாள்!

வீட்டை நெருங்கும்போது வீட்டில் விளக்கு எரிந்து கொண்டிருப்பது நன்கு தெரிந்தது. நடுநிசியும் ஆகிவிட்டது. ஏன் இன்னும் விளக்கு அணைக்கப்படவில்லை? என்றைக்கும் இல்லாத புதுமையாக உள்ளதே? ஒரு சமயம் தம்மையும், தாம்பெருநாளுக்கெனக் கொண்டு வரும் சாமான்களையும் எதிர்நோக்கி உறங்காது காத்திருக்கலாம். வெண்மேகம் போன்ற வெண்ணிறமும் மிருதுவும் உடைய இத்துணியை அவளிடம் காண்பித்து அவளை வியப்பில் ஆழ்த்த வேண்டும் என்று உறுதி செய்து கொண்டு வீட்டை அடைந்து கதவைத் தட்டினார். கதவைத் திறந்த அவர் மனைவி கணவனைக் கண்டதும் 'ஓ'வெனக் கதறி அழுதாள். காதர் சாகிபு இக்காட்சியைக் கண்டு திடுக்கிட்டு விட்டார்.

''பாட்டி.... இறந்து விட்டார்.''

அவள் இதனைக் கூறிவிட்டுத் தேம்பித் தேம்பி அழத் தொடங்கினாள். அவர் ஒன்றும் தோன்றாத நிலையில் பதில் ஏதும் கூற வலிவற்று வீட்டுக்குள் சென்று ஒரு மூலையில் அமர்ந்தார்.

காதரின் பாட்டி இறந்த செய்தியறிந்த உறவினர்களும் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களும் வந்து சேர்ந்தார்கள். மேற்கொண்டு பிரேத அடக்கத்துக்கான இறுதிக் கடமைகளையெல்லாம் செய்யத் தொடங்கினார்கள். காதர் சாகிபு மட்டும் சித்தப் பிரமை கொண்டவர் போல் ஒரு மூலையில் அசையாமல் அமர்ந்திருந்தார். எல்லாக் கடமைகளும் முடிந்த பின்னர் பக்கத்து வீட்டுக்காரர் ஒருவர் காதரை அணுகி, ''ஆறு கஜம் வெள்ளைத் துணி வேண்டும்'' என்றார்.

காதர் சாகிபு ஏதும் பேசாது எழுந்து சென்று அருகில் கிடந்த துணிச் சுருள் ஒன்றை எடுத்துக் கொடுத்தார். விலையுயர்ந்த அத்துணியைக் கண்டபோது அங்குள்ளவர்கள், தங்களுக்குள், ''நம்ம காதருக்கு அவர் பாட்டி மீது எவ்வளவு அன்பு, பாசம்; எவ்வளவு நல்ல துணி பார்! பணம் படைத்தவர்கள்கூட இவ்வளவு விலையுயர்ந்த துணியை உபயோகிப்பதில்லை!'' என்றெல்லாம் பேசிக்கொண்டனர். நான்கு பேர் பிரேதப் பெட்டியைத் தூக்கியபோது காதர் சாகிபு பெட்டியின் உட்புறத்தை நோக்கினார். தம் பாட்டியின் இறந்த சடலத்தையல்ல. அவ்வுடலைப் போர்த்தியிருந்த வெண் மேகம் போன்ற நேர்த்தியான துணியையே பார்த்தார். பாட்டியின் பூதவுடல் தம் பார்வையினின்றும் மறைந்தபோது காதர் சாகிபின் கண்களில் நீர் துளித்து நின்றது. பாட்டியை நினைத்து அல்ல, விலையுயர்ந்த அந்தத் துணி தம்மிடமிருந்து பிரிக்கப்பட்டு விட்டதே என்பதை நினைத்து.

5 டி.ஐ.ஜி விஜயம்

பத்மநாபன் குடும்பத்தினர் பயணக் களைப்புத் தீர வெந்நீரைத் தாராளமாக விட்டுக் கொண்டு குளித்து விட்டுப் புத்தாடை உடுத்திச் சாப்பாட்டுக் கூடத்தை நோக்கி நடந்தனர்.

அறையைப் பூட்டிக் கொண்டு வந்த பத்மநாபன் முன்னால் சென்ற மனைவியையும் மக்களையும் பின்தொடர்ந்தார்.

''அம்மா! அதோ, அந்த மரங்களை நெருங்கி வந்து கொண்டிருக்கும் மேகத்தைப் பாரேன்! கையால் தொடலாம்போல் எத்தனை கிட்டத்தில் இருக்கு!'' என்று அதிசயத்துடன் தாயாருக்குச் சுட்டிக் காட்டினாள் மீனா.

அப்போதுதான் குளித்து அலங்கரித்துக் கொண்டு வந்திருந்


போனால் மீனு அம்புஜத்தைவிட நாலு அங்குலம் உயர்ந்து விடுவாள்! சீக்கிரம் கல்யாணத்தைப் பண்ணி வைத்துவிட வேண்டும்!'

'அவளுக்கு இப்போ என்ன அவசரம்? பார்த்துக் கொள்ளலாம்' என்று அலட்சியப்படுத்திக் கல்யாணத்தை ஒத்திப் போட்டு விட்டுப் பின்னால் கையைப் பிசைந்து கொண்டு நின்ற பெற்றோர்கள் சிலரைப் பத்மநாபன் அறிவார். அதே தவற்றைத் தாமும் செய்துவிடக் கூடாது என்பதில் அவர் குறியாக இருந்தார். இருபது வயதுவரை பரவாயில்லை, இருபத்திரண்டானால் மாப்பிள்ளை கிடைப்பது சிரமம்; அதற்கு மேல் போனால் ஆபத்து



"ஸைக்கோ ஸாரநாதன்"

கி. ராஜேந்திரன்



தார்கள் என்பதோடு மனோரம்மியமான புதிய இடத்துக்கு வந்த மகிழ்ச்சி காரணமாய் உடலெங்கும் ஒரு மலர்ச்சி விகசிக்கும் அவர்கள் தோற்றம் மலைய மாருதம் போல் நெஞ்சைக் குளிர்விப்பதாய் இருந்தது.

'நம்முடைய கண்ணே பட்டு விடும் போலிருக்கே! அனசூயாவுக்கு நாம் புதிதாக வாங்கிக் கொடுத்திருக்கும் 'பாக்ஸ்' காமிராவால் அம்மாவையும் பெண்ணையும் சேர்த்து நிற்க வைத்து ஒரு ஃபோட்டோ எடுக்க வேண்டும்!' என்று தமக்குள் சொல்லிக் கொண்டார் பத்மநாபன். 'இன்னும் ஓரிரு வருஷங்கள்

என்று தமக்குள் கணக்கிட்டு வைத்திருந்தார் அவர்.

பத்மநாபனின் சிந்தனை தடைப்படும் விதமாக, ''என்னங்க, ரூமெல்லாம் வசதியாயிருக்கா?'' என்று கேட்டார், கைகூப்பி வணக்கம் செலுத்திய ஒருவர். பிறகு தம்மைத் தாமே அறிமுகப்படுத்திக் கொண்டார்:

''நான்தானுங்க இந்த ஹாப்பி ஹாலிடேயை நடத்தறது. ஏதாவது வேணுமானால் சொல்லுங்க, ஏற்பாடு செய்து தரேன்; வெந்நீர் சரியா வருதில்லே?''

''ஓ! எல்லாம் சௌகரியமாகவே இருக்கு'' என்றார் பத்மநாபன், அங்கு வந்தது முதல்

அம்புஜம் கூறிய பல குற்றங்களையும் ஒதுக்கித் தள்ளியவராக, குறைகளைப் பட்டியல் போடப் பண்பாடு இடம் தரவில்லை.

"அன்னம் பத்திரிகை நம்மது தானுங்களே ?"

"இல்லவே இல்லை!" அலறிப் புடைத்துக் கொண்டு மறுதளித்தார் பத்மநாபன். "அதில் நான் துணை ஆசிரியராகப் பணியாற்றுகிறேன், அவ்வளவுதான். நீங்க பெரிய பொறுப்பை எல்லாம் என் தலையில் கட்டாதிங்க. கற்பனையில்கூட அவ்வளவு சுமையைத் தாங்க முடியாது என்னாலே."

அவரிடமிருந்து தப்ப முயன்றவர்போல், "சாப்பிட்டு விட்டு வரேன்" என்று கூறி நகர்ந்தார் பத்மநாபன். அவருக்காக அம்புஜமும் குழந்தைகளும் காத்திருந்தார்கள்.

"போங்க, போங்க. பசங்களெல்லாம் பசியோடே இருக்கும்" என்றார் தனராஜ்.

"என்ன சொல்கிறார்?" என்று வினவினாள் அம்புஜம், பத்மநாபன் தனராஜை விட்டுப் பிரிந்து அவர்களை நெருங்கியபோது.

"ரூம் ரிஸர்வ் பண்ணச் சொல்லிக் கடிதாக போட்டபோது ஆபீஸ் 'லெட்டர்ஹெட்'டில் எழுதிட்டேன் போலிருக்கு, ஞாபகம் இல்லாமே. அவன் அன்னம் பத்திரிகையே எனக்குத்தான் சொந்தம்னு முடிவு பண்ணிட்டான்! இதிலேயிருந்து என்ன தெரியறதுன்னா, அப்படிப்பட்ட பெரும் செல்வந்தர்கள்தான் இங்கே வந்து தங்குவான்னு! ஆக, நாம் சரியான இடத்துக்குத்தான் வந்து சேர்ந்திருக்கோம், ஆரம்பத்தில் நாம் போட்டதிட்டத்தின்பிரகாரம்."

"அது என்ன பெரிய மனுஷாளோ, ஆடம்பர ஹோட்டலோ எனக்கு ஒண்ணும் புரியலை. கட்டில்லே உட்கார்ந்தா மெத்தைக்குப் பஞ்சு அடைக்கிறதுக்குப் பதில் எலிகளைப் பிடிச்சுத் திணிச்சு இருக்கிற மாதிரி குண்டும் குழியுமா இருக்கிறதோடே கிங்கிங்னு சத்த வேறே செய்யறது. ரூமை விட்டு வெளியே வந்தால் வராந்தாவில் கண்ணாடியெல்லாம் ஒடிசலும் விரிசலுமாய் இருக்கு. ஜன்னலுக்குக் கொக்கிதான் இல்லே. புது கர்ட்டனாவது போடப்படாதா?

அமிர்தலிங்கம் உடனே பதில் கூறவில்லை; அந்த ஹிப்பியின் கண்கள் பம்பரக் கயிற்றில் நிலைகுத்தி நின்றன!



கதவுக்கெல்லாம் ஒரு பெயிண்ட் அடிக்கக்கூடாதா? மேஜை நாற்காலி ஒவ்வொண்ணும் இரண்டு பாட்டில் வார்னிஷைக் குடிக்கத் தயாராயிருக்கும் போலிருக்கு!''

''உஷ்! அம்மா அவர் வரார்; அக்கம் பக்கம் பார்த்துப் பேசு'' என்று கிசுகிசுத்தாள் மீனா.

''என்னங்க இன்னும் நிக்க நீங்க? உட்காருங்க!'' என்று நாற்காலிகளை இழுத்துவிட்டு உபசரித்தார் தனராஜ். ''இந்தாப்பா, இந்த டேபிளை இலையைப் போடு சீக்கிரம்'' என்று அதட்டினார்.

''இந்த ஹோட்டலைக் கட்டி எத்தனை வருஷங்களாச்சு?'' என்று அவரைக் கேட்டாள் அம்புஜம். அவள் குரல் சண்டைக்கு இழுப்பது போன்று தொனிக்கவே பத்மநாபன் பயந்து போனார்.

ஆனால் தனராஜ் இந்தக் கேள்வியால் ரொம்ப உற்சாகமடைந்தவராகக் காணப்பட்டார். இதற்காகவே காத்திருந்தவர் போல ஒரு நாற்காலியை அவர்கள் அருகே இழுத்துப் போட்டுக் கொண்டு பேச ஆரம்பித்தார்.

''இதெல்லாம் ஒரு காலத்திலே ஆர்மி பாரக்ஸா இருந்ததுங்க. நான் சொல்றது பிரிட்டிஷ் ஆட்சிக் காலம். வோர்ல்ட் வார் டூ பீரியட்!''

''அப்போ அடித்த பெயிண்ட் தான்'' என்று முணுமுணுத்தாள் அம்புஜம்.

''அம்மா, பிளீஸ்!'' என்று பேசாதிருக்கும்படி ஜாடையாகக் கெஞ்சினாள் மீனா.

அம்புஜம் சொன்னது தனராஜ் காதில் விழுந்ததோ இல்லையோ, அவர் தொடர்ந்தார்: ''அந்த நாளிலே ராணுவத்திலேயிருந்து பெரிய பெரிய ஆபீஸருங்க இங்கே விடுமுறையில் வந்து தங்குவாங்க.''



''அதுதானே பார்த்தேன், இந்த ஹோட்டலே ஓர் அலாதியான விதமா அமைஞ்சிருக்கேன்னு.''

''ஆமாங்க, ஒரே கட்டடமா மாடி மேலே மாடியா இல்லாமே இரண்டு இரண்டு அறைகளா தனித் தனிக் கட்டிடங்களா யிருக்கும். இங்கொன்றும் அங்கொன்றுமாய் விசாலமான இடத்தில் பரவலாகக் கட்டி யிருக்காங்க.''

''அதிலே ஓர் அலாதி அழகு, அமைதி எல்லாம் இருக்கு. ஐ லைக் திஸ் பிளேஸ்'' என்றார் பத்மநாபன்.

''இந்தா ஸாருக்கு இன்னொரு அப்பளாம் போடு'' என்றார் தனராஜ்.

''இப்போ புதுசா ஒரு அப்பளாம் வரவழைக்கிறேன்; சாப்பிட்டுப் பார்த்துச் சொல்லுங்க. மதுரையிலே ஓர் அநாதை ஆசிரமம் நடக்குது. அவங்க இப்படி ஊறுகாய், அப்பளாம், கூடை நாற்காலின்னு பல பொருள்களைச் செய்து விற்கிறாங்க. இத்தனை நாட்களா நான் அம்மாமி அப்பளாம்தான் வாங்கறது. இந்த ஸீஸனிலேதான் இவங்க வற்புறுத்திக் கேட்டதாலே மாத்தினேன். ஒரு தர்ம ஸ்தாபனத்துக்கு உதவின மாதிரியும் ஆச்சு இல்லீங்களா?''

பத்மநாபன் தலை யாட்டியபடியே, ''வருஷத்தில் மூணு மாசம் உங்களுக்குப் பிஸினஸ் நடக்குமா?'' என்றார்.

''ஸெகண்ட் ஸீஸன் இரண்டு மாசமுங்க. வருஷத்திலே நாலு மாசம் ஃபுல்லா இருக்கும். ரெண்டு மாசம் சுமாரா இருக்கும். பாக்கி நாளெல்லாம் பூட்டி வைச்சுட வேண்டியது தான் ஹோட்டலை.''

'இந்த அறைக்குப் போய் இத்தனை வாடகையா? என்று கேட்டாயே காரணம் இப்போ புரிகிறதா?' என்று வினவுவதுபோல் தம் மனைவியைப் பார்த்துத் தலையைச் சொடுக்கினார் பத்மநாபன். பின்னர் மீண்டும் தனராஜை நோக்கினார். ''ஆட்கள்?''

''ஒருத்தர் இரண்டு பேர் தவிர பாக்கி யெல்லாம் ஸீஸனுக்கு மட்டும் வேலைக்கு வரவங்கதான். இதோ சாதத் தட்டோடு வருகிற பையன் மதுரையிலே படிச்சுக்கிட்டிருக்கான். என்ன தம்பி? எந்த வகுப்புப் படிக்கிறே நீ?''

''பியூஸி... சாதம் வைக்கவா?'' என்றான் பையன்.

அவனுக்குப் போதும் என்று கை நீட்டிவிட்டு ''நல்ல ஏற்பாடுதான்''என்றார் பத்மநாபன்.

''அடுத்த வருஷம் இன்னும் நல்லா இருக்குங்க. கட்டிடங்களுக்கெல்லாம் டன்லப் பில்லோ மாத்தப் போறேன். அதுக்கு மட்டுமே இருபத்திரண்டாயிரம் ரூபாய் வரைக்கும் ஆகிறது.''

''ஒவ்வொரு வருஷமும் வருகிறவர்களிடமெல்லாம் இவர் இதையே சொல்லிண்டிருப்பார் போலிருக்கு-அடுத்த வருஷம் இன்னும் பிரமாதமாயிருக்கும்னு!'' அம்புஜம் மகளிடம் இவ்வாறு காதோடு காதாகக் கூற மீனு சிரித்து விட்டாள்.

''என்ன சொல்றீங்க அம்மா?'' என்று தனராஜ் கேட்க, அம்புஜம் சரேலெனப் பின்வாங்கத் தீர்மானித்தவளாய் அவர்கள் பேச்சு எதையுமே செவிமடுக்காதவள் போல, ''சாப்பிடேண்டா சீக்கிரம்! நீ சாப்பிட்டு முடிக்கிறதுக்குள்ளே ஸீஸனே முடிஞ்சுடும்! மெட்ராஸுக்குக் கிளம்ப வேண்டியதுதான்!'' என்று விசுவை மிரட்டினாள்.

''நான் சொல்றேன், ரூம் வாடகை கொஞ்சம் அதிகம் என்று என் ஒய்ஃப் அபிப்பிராயப்படுகிறாள். உண்மையில் எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது'' என்றார் பத்மநாபன்.

''பணத்தைக் கொடுத்தாலும் பளிச்சென்று அறைகள் இருந்தால் தேவலை'' என்று தைரியமாகச் சொன்ன அம்புஜம் ''அழுது வடியறது'' என்று அடங்கிய குரலில் கூறினாள்.

''அம்மா! நான் கேக்கறேன்னு கோவிக்காதீங்க. கொடைக்கானலுக்கு எதுக்காக வரது? அறைக்குள்ளே உட்கார்ந்து அது அழுது வடியறதைப் பார்த்து நாமும் விசனிக்கவா? இரவு படுக்க மட்டும்தான் நீங்க ரூமுக்கு வரணும். பாக்கி நேரமெல்லாம் வெளியே சுத்தணும். நிறைய நடக்கணும்; இயற்கைக் காட்சிகளை, மலைகளை, அருவிகளை, பட்சிகளை, ஓடைகளை யெல்லாம் ரசிக்கணும். 'பிக்நிக்' போகணும். ஏரியில் ரோயிங் செய்யணும். ஹார்ஸ் ரைட் பண்ணணும். இவற்றையெல்லாம் செய்தா மனசு சந்தோஷமா யிருக்கும். பஸ்ஸில் ஏறிக்கிட்டு பேரிஜம், ஸில்வர் காஸ்கேட், பில்லர் ராக்ஸ் போன்ற இடங்களுக்கெல்லாம் போயிட்டு வாங்க. நம்ம ஹோட்டல் பஸ்ஸே இங்கே யெல்லாம் உங்களை அழைச்சுக்கிட்டுப் போகும். சார்ஜ் கிடையாது. இப்படி யெல்லாம் சுத்தி அலைஞ்சுட்டு வந்தீங்கன்னா கபகபன்னு பசிக்கும். கொடைக்கானலுக்கு வரவங்களுக்கு முக்கியமா குளிக்கத் தாராளமா வெந்நீர், பசிக்கு நல்ல சாப்பாடு. இவைதான் தேவை. இவற்றை நான் தரேன்.''

''சமையல் ரொம்ப நல்லாத்தான் இருந்தது'' என்று ஒப்புக்கொண்டாள் அம்புஜம், — அவர் பேச்சில் மிரண்டு

போய் அல்ல; மனம் விட்டுத்தான் கூறினாள்.

''உங்களோ மாதிரி லேடீஸ், சமையல் நல்லா இருந்ததுன்னு சொல்லும்போது தான் எனக்குத் திருப்தி'' என்றார் தன ராஜ். ''இன்னொரு பிளேட் ஃப்ரூட் ஸாலட் கொண்டு வரச் சொல்லட்டா பாப்பாவுக்கு?''

அம்புஜம், ''வேண்டாம் வேண் டாம்'' என்றபோதே அனுவும் விகவும் ''வேண்டும்! வேண்டும்!'' என்றார்கள்.

''ஒரு பிளேட் போதும்; ஆளுக்குப் பாதியா எடுத்துக்கட்டும்'' என்றாள் அம்புஜம்.

தனராஜ் அதற்கு ஏற்பாடு செய்து விட்டுத் தொடர்ந்தார்:

''நீங்க ஃப்ராங்க்கா பேசறதை நான் வரவேற்கிறேன். ஆனா நான் பணத்தைப் பிடுங்கறதா மட்டும் நினைக் காதீங்க. ஸார் எழுத்துத் தொழிலிலே கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கிறார். பணத் தோட அருமை அவரைப் போலவே எனக்கும் தெரியும். என்னோட ஃபாதர் விறகு வெட்டிக்கிட்டுப் போக இந்தக் காடுகளுக்கு வருவார். நானும் வந்து கோடாலி புடிச்சு உதவி யிருக்கேன், பள்ளிக்கூடத்திலே லீவு விடறப்போ. மலையை விட்டு இறங்கி விறகு விற் போம். அது ஒரு காலம். நாலஞ்சு விறகுத் தொட்டி அவருக்குச் சொந்த மாச்சு. சண்டை சமயத்திலே நல்லா சம்பாதிச்சார். யுத்தம் முடிஞ்சதும் இந்த இடத்தை ராணுவத்தினரிட மிருந்து கட்டடங்கள் உள்படச் சல்லிசா ஏலத்திலே எடுத்தார். பேரிக்காய்த் தோப்பாக்கலாமா? உருளைக்கிழங்கு பயிர் பண்ணலாமான்னு யோசிச்சுக் கிட்டிருந்தார். ஹோட்டல் வைக்க லாம்னு யாரும் நினைக்கலே. எனக்குத் தான் தோணிச்சு. நான் இன்னிக்குச் சௌகரியமா யிருக்கேன். என் பெய ரைப் பிரபலப்படுத்திக்கிட்டு இருபது பஸ் வேறே ஓடுது.''

''ரூமுக்குப் போனதும் உன் அப் பாவை மறக்காமெ இவர் சொன் னதை யெல்லாம் குறிச்சுக்கொள்ளச் சொல்லு. பத்திரிகையிலே போட்டோ போட்டு எழுத வேண்டி யிருக்கும்'' என்று அம்புஜம் தன் மகளிடம் ரகசியம் பேசினாள்.

''ஸார் சொன்னார், இங்கே அமைதி யாக இருக்குன்னு. அவர் எழுத்தாளர். அவருக்குத்தான் அமைதியின் அருமை தெரியும். எங்களுக்கு இது அசௌ கரியமா இருக்கு. எல்லாச் சாமானும் டவுன்லேருந்து பத்து மைல் தூரம் எடுத்துக்கிட்டு வரணும். ஆனால் இந்த ஹோட்டல் கொடைக்கானல் டவுனி லேயே இருந்தால் இந்த அமைதி கிடைக்குமா? நீங்கள் வெளியே போகத் தான் வேணும்; ஆனால் இந்த ஹோட் டலுக்குச் சொந்தமான நிலப் பரப்பை யும் ஒரு தடவை சுற்றி வாங்க. இயற் கையோடு அப்படியே மனசு ஒன்றிப் போயிடும். அத்தனை விஸ்தாரமான இடம். அழகான இயற்கைக் காட்சிகள்.''

''அதுக்கென்ன, கொடைக்கானலில் திரும்பிய பக்கமெல்லாம் இயற்கைக் காட்சிகள்தான்'' என்றாள் அம்புஜம்.

''ராத்திரி குளிரும்போது போர்த் திக்கொள்ளக் கம்பளி வேண்டும் என்று கேட்டால் அதற்கு எக்ஸ்ட்ரா சார்ஜ் பண்ணறீங்களே? அது சரியாகத் தோணலேனக்கு'' என்றார் பத்மநாபன்.

பம்பாய் கலா மன்றத்தின் கட்டட நிதிக்காக நடிகர் திலகம் சிவாஜி கணேசன் 'வியட்நாம் வீடு', 'தங்கப் பதக்கம்' ஆகிய இரு நாடகங்களை தாதரில் நடத்தினார். 1. நாடகத்துக்கு விஜயம் செய்த திரு எச். வி. ஆர். ஐயங்கார் திரு சிவாஜி கணேசனின் நடிப்பைப் பாராட்டிப் பூமாலை சூட்டுகிறார். 2. நடிகர் ராஜ்கபூர் தலைமையில் சிவாஜி கணேசன் உரையாற்றுகிறார். இந்த நாலு நாள் நாடகத்துக்கென்றே பிரத்தியேகமாகத் திறந்தவெளி அரங்கம் அமைக்கப்பட்டிருந்தது ஒரு விசேஷமாகும்.





''ஸார்! கொடைக்கானலுக்கு வந்தால் குளிரும்னு தெரியாதா? நீங்க கம்பளி எடுத்துக்காமல் வந்தால் அது எங்க குற்றமா?''

''எங்களோட தப்பாகவே இருந்துட்டுப் போகட்டும். ஒரே ஒரு காரியம் மட்டும் உடனே பண்ணுங்க. எங்க அறைக்கு வெளியே வராந்தாக் கதவில் கண்ணாடி ஒடைஞ்சிருக்கு. அது வழியா சில்லுன்னு காத்து வீசறது. ரத்தம் உறைகிற மாதிரி. அதிலே இன்னொரு ஆபத்து என்னன்னு அந்த ஓட்டை வழியாக யார் வேணுமானாலும் கையை விட்டு உள்பக்கம் தாழ்ப்பாளைத் திறந்துடலாம். ராத்திரி திருடன் வந்தாக் கூடத் தெரியாது. பத்திரமில்லே'' என்றாள் அம்புஜம்.

''நான் உடனே கவனிக்கிறேன், அம்மா!'' என்றார் தனராஜ். ''பாருங்க ஸார்! லேடீஸ் வந்தாங்கன்னா அவங்க கண்ணுக்குன்னு இது மாதிரி சில விஷயங்கள் பளிச்சுன்னு தென்படும். நாமெல்லாம் இதைக் கவனிக்காமல் அலட்சியப்படுத்தி விடுவோம்.''

இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருந்தபோதே ஹாப்பி ஹாலிடேயில் தங்கியிருந்த பல விருந்தினரும் சாப்பாட்டுக் கூடத்துக்குள் வருவதும் உண வருந்திவிட்டுத் திரும்பிச் செல்வதுமாய் இருந்தார்கள். இச்சமயத்தில் கூடத்தின் வாசலில் ஒரு போலீஸ்காரர் தோன்றினார். அவர் மலைப் பிரதேசத்துக்கு ஏற்றதாக நீல நிறக் கம்பளிச் சொக்காயும் பாண்டும் அணிந்திருந்ததால்தானோ என்னவோ பத்மநாபனின் கவனம் அவர்பால் சட்டென்று ஈர்க்கப்பட்டது. தொப்பி மட்டும் மற்ற எல்லாப் போலீஸ்காரர்களையும் போல் சிவப்பு, கறுப்பு நிறத்தில்தான் அணிந்திருந்தார். அந்தப் போலீஸ்காரர் இப்படியும் அப்படியுமாகக் கூடத்தைக் கண்களால் துழாவிவிட்டுத் தனராஜ் மீது பார்வை விழுந்ததும் விடுவிடுவென்று அவரை நோக்கி வந்தார்.

பத்மநாபன் ஒரு கணம் துணுக்குற்றார். ஆனால் அடுத்த கணமே அந்தப் போலீஸ்காரர் ரொம்பப் பணிவாயும் அடக்கமாயும் குனிந்து தனராஜிடம் தணிந்த குரலில் பேசுவதைக் கண்டு மனம் தெளிந்தார்.

தனராஜ் சொன்னார்: ''டி. ஐ. ஜி. வந்திருக்காருங்க. அவரை நானே போய் ரிஸீவ் பண்ணறதுதான் மரியாதை. அவருக்கு அறையைக் காட்டிக் கொடுத்துட்டு வந்துடறேன்.'' தனராஜ் எழுந்து விரைந்தார்.

''யார் வந்திருக்காளாம்?'' — அம்புஜம் கேட்டாள்.

''டி. ஐ. ஜி. — டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ்!''

''அவர் எதுக்கு இங்கே வரணும்?''

''ஏன் அவருக்கு மட்டும் விடுமுறை வேண்டாமா? ஹாலிடேயை 'என்ஜாய்' பண்ண வந்திருப்பார்'' என்றாள் மீனு.

''ஆமாம்! ஸைக்கோ ஸாரநாதன் தப்பிச்சுக்கிட்டுப் போயிட்டான்னு பேப்பரிலே எல்லாம் திமிலோகப்படறது. அவனைத் தேடிக் கண்டுபிடிக்காமே இவருக்கு விடுமுறை என்ன கேடு!''

''ஒருவேளை அவனைத் தேடிண்டுதான் வந்திருப்பாரோ என்னவோ?''

''சிவ சிவா! அந்தக் கொலைகாரப் பாவி இங்கே எதுக்கு வரணும்?''

இப்படி அம்புஜம் கேட்ட அதே தருணத்தில் அமிர்தலிங்கம் அந்தக் கூடத்தின் வாசலில் தோன்றினான்.

''டி. ஐ. ஜி. ஸைக்கோவைப் பிடிக்கிறாரோ இல்லையோ, இந்த ஹிப்பி வேஷக்காரனையாவது பிடிச்சுண்டு போய்க் கம்பி எண்ண வைக்கலாம்'' என்றாள் மீனு.


அப்போது அந்த ஹிப்பி அமிர்தலிங்கம் சாப்பாட்டுக் கூடத்துக்குள் நுழைந்து முன்னேறிக் கொண்டிருந்தான். மீனு கூறியது அவன் காதில் அரை குறையாகவேனும் விழுந்துவிட்டதோ? இல்லையானால் அவன் கண்கள் ஏன் இப்படி அனல் பறப்பது போல் சிவந்து பளபளக்க வேண்டும்? ஏன் இப்படி அவன் விரல்களைப் பிசைந்து கொள்கிறான்?

''மீனு! நீ இன்னொரு தடவை இப்படிப் பேசினால் எனக்குக் கெட்ட கோபம் வரும்'' என்று எச்சரித்தார் பத்மநாபன். ''யார் பேரிலும் நாம் வெறுப்பை இந்த அளவுக்கு வளர்த்துக் கொள்ளக் கூடாது. தெரிந்ததா?''

அப்பா அம்மாவுக்கு முன்னால் சாப்பிட்டுவிட்டுக் கை கழுவிக் கொண்டு வந்திருந்த அனசூயா, தம்பியிடமிருந்து பம்பரத்தைத் தன் கையில் வாங்கிக் கொண்டாள். ''சாட்டை சுத்தறத்துக்கு நான் சொல்லித் தரேண்டா'' என்று கூறி இடக் கரத்தில் பம்பரத்தைப் பிடித்துக் கொண்டு வலக் கரத்தால் மெல்ல அதில் கயிற்றைச் சுற்றினாள்.

''ஹலோ அமிர்தலிங்கம்! இன்னிக்கு என்ன புரோகிராம் உங்களுக்கு? கால்ஃப் ஆடப் போறீங்களா?'' என்று கேட்டார் பத்மநாபன்.

அருகில் வந்து விட்ட போதிலும் அமிர்தலிங்கம் உடனே பதில் கூறவில்லை. அந்த ஹிப்பியின் கண்கள் பம்பரக் கயிற்றில் நிலைக்குத்தி நின்றன! (தொடரும்)



மண்புழு
மகரிஷி
நாவல்

'துரைராஜை நான் நல்வழிப்படுத்த வேண்டுமாமே!' இலகத்துக்கு வேடிக்கையாகத் தோன்றியது பாக்கியத்தின் ஆசை.

சுமார் ஆறு மாதங்களுக்குமுன்னுல் தன் தாயார் உடல் நலம் சரியில்லாமல் இருக்கிருள் என்ற செய்தி வந்தது இலகத்துக்கு.

இலகம் அப்பொழுது திருச்சி இண்டர்நாஷனல் இன்ஜினியரிங் கம்பெனியில் பணியாற்றிக் கொண்டிருந்தாள். நான்கு நாள் லீவில் சென்னை வந்தாள். இதற்குமுன் அவள் அடிக்கடி சென்னை வந்ததற்கும், இதற்கும் அதிக வித்தியாசம் இருந்தது.

அம்மணி பாக்கியத்தின் பங்களாவில் ஒரு சாதாரண சமையற்காரி மட்டும் அல்ல. சிறு வயதில் இருந்தே அந்தக் குடும்பத்துடன் ஒன்றி விட்ட ஓர் உண்மையான உழைப்பாளி; உறுப்பினள். அவள் வாழ்வும், வளர்ச்சியும், முடிவும் அங்கேயே நிகழ்ந்துவிட்ட ஒரு வாழ்க்கையோட்டம்.

அலுவலகத்துக்கு நான்கு நாட்கள் லீவு போட்டுவிட்டுத் தாயாரைப் பார்க்க வந்தாள் இலகம். உடல் நலம் ரொம்பவும் பாதிக்கப்பட்ட நிலையில் தன் தாயாரைப் பார்த்தபோது, அவளுக்கு அந்த நிலையில் தாயாரை விட்டு விட்டுப் போக மனம் வரவில்லை. எனவே, மேலும் ஒரு வாரம் லீவு எழுதிப் போட்டுவிட்டு அங்கேயே இருந்தாள். பாக்கியத்தின் பெரிய பங்களாவின் இடப்புற ஓரமாக அமைந்திருந்த நல்ல வசதிகளுடன் கூடிய அவுட்ஹவுஸில் அவள் தங்கியிருந்தாள்.

சென்னை வந்தபோது அவள் இரண்டு நோயாளிகளைக் கவனிக்க வேண்டியதாகி விட்டது. தாயாருக்குத் திடீரென்று வந்த நோய். ஆனல் பாக்யமோ நிரந்தர நோயாளி. அம்மணியம்மாளின் இடையருத கவனிப்பில் கொஞ்சம் கலகலப்பாக இருந்த பாக்கியம் அம்மணி படுத்தவுடன் மனம் அதிக சோர்வுற்றுப் போயிருந்தாள்.

இலகத்தைக் கண்டபின்தான் அவள் கொஞ்சம் உற்சாகம் கொண்டவள் போல் இருந்தாள்.

''நான்கு நாட்கள் லீவு போட்டுவிட்டு வந்திருக்கிறேன். அம்மாவின் உடம்பு ரொம்பவும் மோசமாகி விட்டது. இந்நிலையில் அம்மாவை எப்படித் தனியே விட்டு விட்டுப் போவது என்று தெரியவில்லை. உங்களைக் கவனிக்கவும் வேறு ஆள் இல்லை.''

இலகம் வந்த இரண்டாவது நாள் பாக்யத்தின் கட்டில் அருகில் வந்து நின்று கூறினுள்.

''இப்பொழுதுதான் புதிதாக இந்த வேலையில் சேர்ந்திருக்கிறேன். அதிக நாட்கள் லீவு எடுக்கவும் வகையில்லை'' என்று இலகம் கூறியவுடன் பாக்யம் இலகத்தின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

''உன் நிலைமை எனக்குப் புரிகிறது. இரண்டு நாட்கள் இரு. வேறு என்ன ஏற்பாடு செய்யலாம் என்பது பற்றி யோசிப்போம்'' என்றுள் பாக்கியம்.

''யோசிக்கிறதென்ன, அம்மா வகிக்கிற ஸ்தானத்தைப் பெண் எடுத்துக் கொள்ள வேண்டியதுதானே !''

இரண்டு மூன்று நாட்களில் நெஞ்சு வலி என்று படுத்த அம்மணிக்கு நான்காம் நாள் அதன் உக்கிரமான தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் மரண வாயிலை நெருங்கிக் கொண்டிருந்தாள்.

பாரிச வாயுவினுல் நடக்க முடியாமல் உள்ள பாக்யத்தை நான்கு பேர்கள் ஸ்ட்ரெச்சரில் அமர வைத்து, அம்மணி படுத்திருக்கும் அவுட் ஹவுஸில் கொண்டு வந்து உட்கார வைத்தனர். மனத்தில் என்னென்ன அபிலாஷைகளை — எண்ணங்களை — சேர்த்து வைத்திருந்தாளோ தெரியவில்லை. இறுதி வார்த்தையாக எதையுமே பேச முடியவில்லை. இலகத்தை மட்டும் விரலால் சுட்டிக் காட்டி, பாக்யத்தைப் பார்த்தாள். அக்கடைசி நேரச் சைகையின் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட பாக்யம் இலகத்தை அம்மணியின் கண்முன் இழுத்து அணைத்துக் கொண்டு அதற்கோர் அர்த்தத்தை உணர்த்தினுள். அக்கடைசி நேர நிம்மதி — அவள் விழிகளில் மின்ன— அவள் ஆவி பிரிந்தது.

''இந்நிலையில் நீ இனிமேல் தனியே வெளியே போவதையோ, இருப்பதையோ நான் அனுமதிக்க மாட்டேன். நீ சம்பாதிக்கத் தொடங்கியதையோ, அதன்பின் உன் தாயாரை நீ அழைத்துக் கொள்ள விரும்பியதையோ நான் குறை சொல்லவில்லை. அதற்குக் குறுக்கேயும் நிற்கவில்லை. ஆனல் இனிமேல் நீ தனியாக ஓரிடத்தில் இருப்பது நல்லதில்லை. என்னதான் உன் மாமா வீடு திருச்சியில் இருந்தாலும், அவர்கள் கண்காணிப்பில் நீ இருந்தாலும் அது எனக்குத் திருப்தி அளிக்கவில்லை. உன் மாமாவைப் பற்றி உன் தாயார் நிறையக் கூறியிருக்கிருள். எனவே...

''நீ இங்கேயே இருக்கலாம். என் பெண்ணைப் போல இருக்கலாம். இரும்புப் பெட்டிச் சாவி உன்னிடம்தான் இருக்கப் போகிறது. இந்தப் பெரிய பங்களாவை நீதான் பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லையென்ருல் இதை எல்லாரும் கொள்ளை அடித்துக் கொண்டு போய் விடுவார்கள். உன் அம்மா இருந்த வரை எனக்கு இந்தப் பயம் இருந்ததில்லை. இப்பொழுது அவளும் போய்விட்டாள்.''

இலகம் சற்று நேரம் மௌனமாக இருந்தவள் தன் முடிவை உடனே சொல்ல முடியாமல் தடுமாறினுள். ''எனக்குக் கொஞ்சம் அவகாசம் கொடுங்கள்'' என்று கூறிவிட்டு அப்பால் போய்விட்டாள்.

முரட்டுச் சுபாவமுள்ள தம்பியை வைத்துக் கொண்டு சமாளிக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்த தருணம் தாய் தந்தையர் இருவருமே ஒரு விபத்தில் மரணமெய்தியபின் அவனைப் பராமரிக்க வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு பாக்யத்துக்கு.

துரைராஜுக்குச் சிறுவயது முதலே இலகத்தின் மேல் வெறுப்பு. அது அவள் ஏழ்மையின் காரணமாகவோ அல்லது தன்னைவிட அதிகமான அறிவுக் கூர்மையுடன் இருக்கிருளே என்பதாலோ இருக்கலாம்.

இலகத்துக்கும், துரைராஜுக்கும் கொஞ்சம்கூட இணக்கமான உறவே இல்லை. இந்த இணக்கமற்ற தன்மை அவர்களிடையே சிறு சிறு சச்சரவுகளை உண்டாக்கிக் கொண்டே இருக்கும்.

இப்படி அவர்களிடையே இருக்கும் ஒற்றுமையின்மையால் அமைதி குலைந்தான்

அம்மணி. தனிமையில் வேதனைப்பட்டாள். 'துரைராஜைச் சரிக்கட்டிக் கொண்டு திலகம் இங்கே இருந்து ஆக வேண்டிய அவசியம் என்ன? இப்பெரிய இடக்குப் பொல்லாப்பைத் தவிர்த்துக் கொண்டால் என்ன?'

அம்மணியின் தீவிர சிந்தனை திலகத்தைத் திருச்சியில் உள்ள தன் சகோதரர் வீட்டில் கொண்டு போய்ச் சேர்ப்பதில் முடிந்தது. திலகத்தைப் படிக்க வைக்கும் பொறுப்புக்களையும், அவளுடைய தேவைகளையும் பாக்யம் ஒரு பகுதி ஏற்றுக் கொண்டாள்.

திலகம் அதிகமாகச் சென்னைக்கு வருவது கிடையாது. வருகின்ற குறைவான சந்தர்ப்பங்களில்கூடத் துரைராஜின் அநாவசியமான தலையீடுகளும் அலட்சியமான மனோபாவங்களும் அவளை இலேசான மனத்தாங்கலுக்கு ஆளாக்கும். ஓடியாடித் திரியும் சிறுமியாக இருந்த போது உணர்ந்த பாவனையின் சிறு பிள்ளைத்தனத்தை இன்று வளர்ந்த நிலையில் அவளால் ஏற்க முடியவில்லை; பொறுக்கவும் முடியவில்லை.

அம்மணி தன் ஊழியத்தாலும், பரிசுத்தமான எண்ணங்களினாலும், பாக்யத்தின் வாழ்க்கையில் ஒரு தவிர்க்க முடியாத அல்லது ஒதுக்க முடியாத உறுதுணையாக ஆகிவிட்டாள். அக்குடும்பத்துச் சுக துக்கங்களில் பங்கு கொண்டு, அவள் ஒரு பந்தத்தை உண்டாக்கிக் கொண்டு விட்டதால், திலகம் அந்தக் குடும்பத்தில் ஓர் அந்நியப் பெண் என்ற எண்ணம் எழ வகையே இன்றிப் போய்விட்டது.

வனப்பும் வசீகரமுமாக ஓர் அபூர்வ லாவண்யத்துடன் அடிக்கடி தாயாரைக் காண வரும் சந்தர்ப்பங்களில் தன்னையும் அன்புடனும், மரியாதையுடனும் காண வரும் திலகத்தைக் காணும் போதெல்லாம் பாக்யம் அகமகிழ்ந்தாள். 'ஏழை அம்மணியின் மகள் திலகமா இவள்! தன்னை அடித்து விட்டதாகத் துரை அக்காவிடம் புகார் செய்ய வரும் போது, கூடவே அவளும் வந்து, 'இதைப் பாருங்க அக்கா, என் முதுகைப் பெய்டால் அடித்ததை' என்று பின்னால் திரும்பிச் சட்டையைத் தூக்கிக் காட்டுவாளே, அந்தத் திலகம்தானு இவள்!' என்று எண்ணிப் பூரிக்கும் பாக்யம் அவளை அருகில் அழைத்து, அவளுடைய கைகளையும், தோள் பட்டையையும், கழுத்தையும் அன்புடன் தொட்டுத் தடவுவாள். அந்த உடம்பைத் தொடுவதே ஒரு சுவாரசியமாகப் படும், பாக்யத்துக்கு.

அந்த அபூர்வ அழகையே துரைராஜ் இலட்சியம் செய்ய மாட்டான். அவளை அவன் மதிப்பதில்லை. ஆரம்ப காலத்தில் இருந்த வெறுப்பு அப்படியே அவனிடம் தேங்கிவிட்டது. இதைத்தான் பாக்யத்தினுல் புரிந்து கொள்ள இயலவில்லை.

திலகத்திடம் இருக்கும் சில கண்டிப்புகள், நடவடிக்கையில் காணப்படும் முன்னெச்சரிக்கை போன்ற சில குணங்கள்தாம் பாக்யத்தின் நெஞ்சில் அந்தப் புதிய எண்ணம் உருவாக அடிகோலியது. அதை உடனே அம்மணியிடமும் கூறினுள். அம்மணி அதற்குச் சம்மதிக்கவில்லை.

''அவளை நல்வழிப்படுத்த உன் பெண்ணுல் முடியும், அம்மணி. அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நீ சரி என்று சொல். இந்த ஏற்பாட்டை உடனே நான் செய்து வைக்கிறேன்'' என்று கூறினுள்.

அம்மணி அதற்குச் சம்மதம் தரவில்லை. துரைராஜின் முரட்டுச் சுபாவம் அவளுக்குத் தெரியும். அவன் தன் மகளைச் சரியாகப் பராமரிக்க மாட்டான் என்பதால் அந்த விவாக யோசனையை அவள் ஏற்கவில்லை. சாதாரண ஏழைப் பையனுக இருந்தாலும் அவள் குணங்களுக்கு ஏற்றவனுகவும், அன்புடன் பராமரிப்பவனுகவும் இருப்பவனுக்குத் தான் கொடுக்க வேண்டும் என்ற தன் ஆசையையும் வெளிப்படையாகப் பாக்யத்திடம் கூறியிருந்தாள் அம்மணி. அப்பொழுது அப்படிச் சொன்னுலும் நாளாவட்டத்தில் அம்மணியைத் தன் விருப்பத்துக்குச் சம்மதிக்க வைத்துவிட முடியும் என்று பாக்யம் எண்ணியிருந்தாள். ஆனுல்.... ஆனுல்...

''அவளால் உனக்கு எவ்வித அபாயமும் வராமல் நான் பார்த்துக் கொள்கிறேன். இந்த இடத்தில் உன் தாயாருக்குப் பதிலாக வேறு ஒரு புதிய நபரைக் கொண்டு வந்து வைக்க எனக்கு விருப்பமில்லை. உனக்கு எவ்விதக் குறையுமில்லாமல் நான் பார்த்துக் கொள்கிறேன். அவளை உன் ஒருத்தியால் தான் திருத்த முடியும். என்னுடைய இந்த வேண்டுகோளைக் கொஞ்சம் சிந்தனை செய்து பார். நீ என் அருகில் இருக்கும்போது என் பலவீனங்கள் எதுவுமே எனக்குத் தெரிவதில்லை. அவ்வளவு தெம்பாக இருக்கிறது.''

இரவின் அமைதியில் தன் அறையில் கட்டில் அருகில் படுத்திருக்கும் திலகத்திடம் கூறிக் கொண்டிருந்தாள் பாக்யம்.

''திலகம்!''

''என்ன சொல்லுங்கள்.''

''தூங்கிவிட்டாயோ என்று பார்த்தேன்.''

''இல்லை.''

''போன வருஷம் பத்திரிகையில் 'ஒரு படித்த பெண் தேவை — வீட்டு நிர்வாகத்தைக் கவனிக்க. வயது நாற்பதுக்குள் இருக்க வேண்டும்' என்று விளம்பரம் செய்திருந்தேனே, நினைவிருக்கிறதா?''

''நினைவிருக்கிறது.''

''நான்கு பெண்கள் வந்தார்கள், வெளியூர் உள்ளூர்களிலிருந்து. அவர்களில் ஒருத்தி பார்க்கவும், பேசவும் நன்ருக இருந்தாள். அவளை அமர்த்திக் கொண்டேன். கொஞ்ச நாட்கள் வேலையும் பார்த்தாள். அதோடு, வேறு மாதிரியும் நடக்கத் தொடங்கினுள்.''

''அதைப் பற்றியெல்லாம் அம்மா என்னிடம் சொல்லியிருக்கிறுள். இவரும் ஒரு மாதிரியாக அவளுடன் பழக ஆரம்பித்தார் என்பதால் நீங்கள் அவளை நிறுத்திவிட்டதையும், இவர் உங்கள் மேல் எரிந்து விழுந்து சண்டையிட்டதையும் கூடக் கூறியிருக்கிறுள்.''

''ஆமாம். இவளைவிட அவள் நான்கைந்து வயது பெரியவள். அவள் பேச்சு, நடத்தை ஒன்றும் ஆரம்ப காலத்தில் இருந்த மாதிரி இல்லை. அவள் நடத்தை எனக்குப் பிடிக்கவும் இல்லை. வேலைகளில் ரொம்பவும் புத்திசாலி. ஆனுல் நடத்தை சரியில்லை. அனுப்பிவிட்

டேன். நான் அவனை வேலைநீக்கம் செய்ததில் அவனுக்குக்கூட ரொம்ப ஆத்திரம். உன் அம்மாதான் ஏதோ சொல்லிக் கொடுத்து விட்டதாக அம்மணியிடம் சண்டை பிடித்து விட்டுப் போய்ச் சேர்ந்தாள். அப்போ திருந்தே உன்னைப் பத்தியதொரு முடிவு என்னிடம் ஏற்பட்டு விட்டது. இனி, இப்பொறுப்புக்களை உன்னிடம்தான் விடுவது. அதுவரையில் யாருமே வேண்டாம் என்று இருந்து விட்டேன். அதற்குப் பின் வேறு யாரோ சிலர் வேறு சில புதியவர்களை அழைத்து வந்து சிபாரிசு செய்தார்கள்.''

பாக்யம் அரைத் தூக்கத்தில் பேசிக் கொண்டே உறங்கிவிட்டாள். நீண்ட நேரச் சிந்தனையில் இரவைக் கழித்த திலகம் தான் அங்கு இருப்பதால் உண்டாகும் பலாபலன் களையும், அதனால் உண்டாகும் எதிர்கால விளைவுகளையும் எதிர்மறையான துரைராஜின் அச்சம் தரும் போக்கினைச் சமாளித்துக் கொண்டு இருக்க வேண்டியதைப் பற்றியும், ஒரு முறைக்குப் பல முறை எண்ணிப் பார்த் தான். அவனால் ஏதேனும் அசம்பாவிதங்கள் நேர்ந்தால், அதையும் தான் எப்படிச் சமாளிக்க வேண்டும் என்பதையும் எண்ணி அதற்கும் ஒரு முடிவு செய்து கொண்டான். ஒரு சிக்கல் நிறைந்த வாழ்க்கைப் பயணத்தில் எதிர்ப்படப் போவதாக அவன் இடையூறு களை அநுமானித்ததோடு அவற்றை எப்படிச் சாதுர்யமாகக் கடப்பது என்பது பற்றியும் ஒரு திருப்திகரமான முடிவுக்கு அவனால் வர முடிந்தது. எப்பொழுது அவன் தன்னைப் பயப்படுத்திய பிரச்னைகளின் பேரில் தன் திருப்திக்கு ஏற்ற வகையில் ஒரு சரியான முடிவைக் கண்டுபிடித்து விட்டானோ, அதன் பின் அங்கே அவன் பாக்கியத்தின் அன்புக் கட்டளைக்கு இணங்கி இருப்பதில் அதிகச் சிரமம் இருக்கவில்லை.

''குட்மார்னிங் சார்!''

பூட்ஸுக்குப் பாலிஷ் போட்டுக் கொண்டிருந்த துரைராஜ் குரல் வந்த பக்கம் திரும்பாமல் பிரஷ் போடுவதை மட்டும் சில விநாடிகள் நிறுத்தினான்.

''உங்களுடைய விருப்பத்துக்கு மாறாக, உங்களுடைய பூரண சம்மதம் பெறாமலே நான் இங்கே பணி புரியச் சம்மதித்துவிட்டேன்'' என்றான் திலகம் கேலியுடன்.

'' நீ இதுக்குத்தான் லாயக்கு என்று அப்பொழுதே தெரியும். இண்டர் நேஷனல் இன்ஜினீயரிங் கம்பெனியைவிட்டு உன்னுடைய தகுதியை இவ்வளவு சீக்கிரமாகத் தெரிந்து கண்டு வெளியே வந்தியே! உன்னை நான் பாராட்டாமல் இருக்க முடியாது. அதே நேரத்தில் நீ வெளியே போனதற்கு அந்தக் கம்பெனிக்கு ஒரு பாராட்டுக் கடிதம் அனுப்ப வேண்டும்.''

அவன் அருகில் வந்து ரூபாய் நோட்டுக்கள் கொண்ட ஒரு சிறு கட்டை நீட்டினான்.

''கார் ரிப்பேருக்கான பில் நேற்று வந்தது. தொகையை 'ஸ்டார்' ஆட்டோ வொர்க்ஸிடம் சேர்ப்பிக்க வேண்டும்.''


''பணம் எத்தனை இருக்கு?''

''பில்லில் உள்ளது இருக்கு.''

'' மேலே நூற்றைம்பது ஆயிருக்கு.''

''பில் இருக்கா ?''





"இல்லே."

"பணம் இல்லே."

காலில் ஷூவை மாட்டிக் கொண்டு வேகமாகத் தமக்கையின் அறைக்குள் நுழைந்தான் துரைராஜ்.

அதே வேகத்தில் திரும்பி வந்து விட்டான்.

"இனியேல் இந்த வீட்டு வேலேக்காரி, எஜமானி, கணக்குப் பிள்ளை- கண்ணராவி எல்லாம் நீதானும். அக்கா சொல்லிவிட்டான். உன்னிடம் சொல்லாமல் இந்தக் காரில் ஓர் எக்ஸ்ட்ரா பிட்டிங் செய்து விட்டேன். மன்னிச்சுடு" என்றான் ஏளனமாகவும், வன்மமாகவும்.

"இனிமேல் மைனர் ரிப்பேருக்கெல்லாம் பில் வந்தால் தொகை கிடைக்கிறது கொஞ்சம் சிரமம். ஆடோமோபைல் பற்றி நாலு வருஷம் படிச்சுட்டுச் சின்னச் சின்ன ரிப்பேருக்கெல்லாம் வொர்க் ஷாப்புக்குப் போவதாக இருந்தால், அது அவ்வளவு சரியான பழக்கமில்லே."

"காருக்கு அடியில் படுத்துக் கொண்டு என்னை ரிப்பேர் செய்யச் சொல்றியா ?"

"அதில் என்ன தப்பு?"

"யூ டாமிட்....." வேகமாக அவளிடம் வந்தான். அவன் பயப்படவில்லை. "நீ

பெண்மையின் மென்மையை உணர
ஆண்களைப் போல் 'ஷேவ்' செய்யாதீர்!

ஆன் பிரெஞ்சு ஹேர் ரிமூவர் தடவி பெண்மை வழியிலே உரோமத்தை வழித்தெறியுங்கள். அது மென்மையானது, இன்மணம் கொண்டது. உரோமங்களின் வேர்கள் வரை ஊடுருவிச் செயல் புரிகிறது. வெட்டுக்கள் இல்லை, உரோமத் துகள்கள் இல்லை. வாரக் கணக்கில் வழவழப்பான சருமம்.





பட்டுப்போன்ற கரங்களுக்கும் கால்களுக்கும்.

ஆன் பிரெஞ்சு ஹேர் ரிமூவர்

ட்ரேட்மார்க்கின் ரெஜிஸ்டர்ட் யூஸர்: ஜெப்ரி மேனர்ஸ் & கம்பெனி லிட். 95-AF-172-Tam.

என்னை அவமானப்படுத்துகிறாய்!'' என்று சொன்னான் துரைராஜ்.

''நான் உங்களைப் புண்படுத்தவில்லை. உங்களிடம் இருக்கும் தகுதி, திறமை இவைகளை நினைவுபடுத்தினேன்.''

''எனக்கு எதையும் நினைவுபடுத்த வேண்டாம். முதலில் இவ்வீட்டில் நீ யார் என்பதை நினைவுபடுத்திக் கொள். அளவுக்கு மீறிப் போகாதே.''

''என் எல்லை இவ்வீட்டில் என்ன என்பது எனக்கு ஓரளவு நன்றாகவே நினைவிருக்கிறது'' என்றாள், அவனது எதிர் அம்புகளை அலட்சியமாக ஒதுக்கியவண்ணம்.

''நடக்கட்டும். எத்தனை நாட்கள் உன் ராஜ்யம் என்பதைப் பார்க்கிறேன். அதிக நாட்கள் நீடிக்க நான் அனுமதிக்க மாட்டேன்.''

கொடூரமான வார்த்தைகளை உமிழ்ந்து விட்டு வெளியேறினான்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவித பிரச்னையிலும் அவனது மெல்லிய இதயத்தைக் கூரான வார்த்தைகளினால் கீறிக் கொண்டிருந்தான் துரைராஜ். தன் உள்ளத்துச் சோகத்தை வெளிக் காட்டாமல் 'அன்பினால் அவனைத் திருத்த முயல்கிறேன்' என்று பாக்கியத்துக்குத் தான் கொடுத்திருந்த வாக்குறுதியின் பேரில் ஸ்திரமாக நின்றாள்.

''உங்களுக்கு எப்படித்தான் இவ்வளவு பொறுமை இருக்கிறதோ தெரியவில்லை..... நீங்கள் இல்லாமல் வேறு ஒரு பெண்ணாக இருந்தால் இவர் ஆட்டி வைக்கிற ஆட்டத்துக்கு ஒரு நாள்கூடத் தாங்க மாட்டாள்.''

காம்பவுண்ட் ஓரமாக மண்டிக் கிடக்கும் கனகாம்பரச் செடியில் பூக்களைப் பறித்துக் கொண்டிருந்தவளிடம் பேச்சுக் கொடுத்தான் ரமணன். அவன் சமீபத்தில்தான் அங்குள்ள அவுட் ஹவுஸில் குடி வந்திருந்தான். எங்கோ ஒரு தனியார் பள்ளியில் டிராயிங் மாஸ்டர் என்று கூறிக் கொண்டு எளிமையான தோற்றத்துடன் அங்கு ஒரு நாள் வந்து விசாரித்தான். அவனது அடக்கமான, சாந்தமான உருவத்தைப் பார்த்த உடனேயே அவன் மேல் ஒரு நல்ல எண்ணம் உருவாகிவிட்டது, பாக்யத்துக்கு. பண்பு, கூச்சம் காரணமாக அவன் தோற்றமே இலேசாகக் கூன் விழுந்தது போலிருக்கும். அவன் அவுட் ஹவுஸில் குடியேறச் சம்மதித்துவிட்டாள்.

பாக்யத்திடமும், திலகத்திடமும் அவன் ரொம்பவும் மரியாதையுடன் நடந்துகொண்டான். ஒருவேளை, அவன் எளிமை, ஏழ்மை இவைகளினால் உண்டான அடக்கமாகவும் இருக்கலாம் என்று எண்ணிக் கொண்டாள் திலகம்.

அவுட் ஹவுஸ், பங்களாவின் இடப் பக்கம் காம்பவுண்ட் ஓரமாக வெகுதூரத்தில் இருந்தது. முன் பக்கம் பெரிய திறந்தவெளி வராந்தா உண்டு. வீட்டில் இருக்கும் அந்த முன் வராந்தாவில் உட்கார்ந்து படம் வரைந்து கொண்டிருந்தான். இதற்குமுன் இரண்டு முறை அவனுடைய உதவியை அவள் வலுவிலே நாடியதும் உண்டு. பாக்யத்தம்மாளுக்கு ஒரு நாள் இரவு உடம்பு கொஞ்சம் அதிகமாகப் போய்விட்டது. இரண்டு நாட்களுக்குமுன்பு, சொல்லிக் கொள்ளாமல் துரை எங்கோ போய்விட்டதால், டாக்டரை உடனே அழைத்து வரும்படி, நடு இரவில் அவனைக் கெஞ்சினாள். அவன் எவ்வித முணுமுணுப்புமின்றி உதவினான்.

துரைராஜின் குண இயல்புகள் அருகில் இருப்பவர்களால் ஓரளவு நன்றாகவே யூகிக்க முடிந்ததுதான். அதிலும், திலகத்தின் மேல் அவன் கொண்டுள்ள வெறுப்பு, அதை எதிர்த்

அற்புத அநுமானுக்கு இலட்சார்ச்சனை

முக்கண்ணராகப் பத்துக் கரங்களுடன் ஓர் ஆஞ்சநேயர் இருக்கிறார் என்றால் அது விசேஷமன்றோ? பிரம்மா, விஷ்ணு, சிவன் முதலிய தேவர்களுக்கு உரிய ஆயுதங்களையும் கரத்தில் தரித்துத் திரிநேத்ர தசபுஜ ஆஞ்சநேயராகத் திகழும் அநுமானைத் தஞ்சை மாவட்டம் பொறையாருக்கு அருகே உள்ள அனந்தமங்கலத்தில் தரிசிக்கலாம். இப்பெருமானுக்கு வருகிற ஏப்ரல் முதல் தேதியன்று ஒரே தினத்தில் லக்ஷார்ச்சனை செய்யப்படுகிறது. ஏப்ரல் முதல் தேதியை 'முட்டாள் தினம்' என்று ஆங்கிலத்தில் சொல்வர். அன்றைய தினம் 'புத்திமதாம் வரிஷ்டம்' — 'அறிவாளிகளில் தலைசிறந்தவர்' — எனப்படும் மாருதிக்கு நடக்கும் லக்ஷார்ச்சனையில் பங்குபெறுவது பாக்கியமாகும். அன்பர்கள் அர்ச்சனைக் கட்டணம் ரூபாய் பதினொன்றும், தங்கள் பெயர் விலாசமும் அனுப்ப வேண்டிய முகவரி: ஸ்ரீ எஸ். ஜகந்நாத அய்யங்கார், அர்ச்சகர், ராஜகோபாலப் பெருமான் கோயில், அனந்தமங்கலம், காளியப்பநல்லூர் அஞ்சல், பொறையார் வழி, தஞ்சை மாவட்டம்.



துச் சமாளித்துக் கொண்டு அவள் போடுகிற எதிர்நீச்சல். திலகத்துக்குப் பக்கபலமாகப் பாக்யம் என்ற இந்த முக்கோண நிலை அங்கு இருப்பவர்கள் எல்லோருக்குமே தெரியும். திலகத்தின் மேல் உள்ள பச்சாத்தாபத்தினால் ரமணன் இவைகளைக் கூர்மையுடன் கவனித்துக் கொண்டுதான் இருந்தான். படம் போடுவதற்காக முன் வராந்தாவில் நாற்காலியில் அமர்ந்து கொண்டால் அவன் செவிப் புலன் முழுதும் அந்தப் பங்களாவின் பின்கட்டிலே தான் இருக்கும். திலகத்தைத் துரைராஜ் மிரட்டுவதும், திலகம் அதற்குப் பதில் பேசுவதும் காதில் விழும்.

"கட்டின பெண்டாட்டிகூட இவ்வளவு பொறுமை காட்ட மாட்டாள்..." என்று எண்ணிக் கொள்வான்.

கனகாம்பரத்தைப் பறித்துக் கொண்டவள் "இந்தச் சோதனை ஒரு பெரிய பிரச்னையாக இல்லை. அது மட்டுமல்ல. துரைராஜ் என்னிடம் அவர் இஷ்டம் போல் சத்தம் போடலாமே தவிர வேறொன்றும் செய்ய முடியாது. பொதுவாக ஒன்று சொல்லட்டுமா?" என்றாள் திலகம் புன்னகையுடன்.

"என்ன சொல்லுங்களேன்."

"என்னைப் பொறுத்த வரையில் துரைராஜைச் சீண்டுவது எனக்கொரு பொழுது போக்கு. அவரது சினத்தை நான் ரொம்பவும் சுவாரசியத்துடன் ரசிக்கிறேன்."

"ரொம்ப வேடிக்கையானவர் நீங்கள்!" என்றான் ரமணன் வியப்பு தாங்காமல்.

"அவருக்கு என் மேல் உள்ள ஆத்திரமெல்லாம் எனது இந்த ரஸனையை அவர் புரிந்து கொண்டு விட்டதால்தான். நான் அவரைக் கண்டு பயப்படுவேன், அவர் மிரட்டலுக்கு அடிபணிவேன் என்று அவர் நினைத்தார். அவரால் என்னை அடக்க முடியவில்லை. அதனால் உண்டான ஆத்திரம்தான் இப்பொழுதெல்லாம் அதிகம். அதோடு, நான் வேண்டுமென்றே தாண்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறேன் என்ற ஆத்திரம்.... எப்படி விளையாட்டு?......"

"ரொம்ப ரஸனையாக இருக்கிறது" என்றான் ரமணன். ❖

வீட்டில் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் நான்கு நாட்கள் எங்கோ போய் விட்டு வந்தவளை முதலில் எதிர் கொண்டு அழைத்தவள் திலகம்தான்.

"பிக்னிக் பிரயாணமோ?..." என்றாள், வேகமாக உள்ளே போகிறவளைப் பார்த்து.

"ஆமாம்" என்றாள் கடுமையுடன்.

"என்ன பிக்னிக்கோ?"

"நீ தெரிந்து கொள்ள வேண்டுமா?"

"எனக்கு அவசியமில்லை."

"பின்னே, உன் வேலையைப் பார்."

"உங்கள் அக்கா தெரிந்து கொள்ள ஆசைப் படுகிறார்."

துரைராஜ் திடீரென்று கருதி இறங்கி, "அம்மா நண்பர்களோடே" என்றான்.

"பிக்னிக் என்றீர்கள்?"

"நீ என்னிடம் கேட்க வேண்டாம். நானே அக்காவிடம் சொல்லிக் கொள்கிறேன்."

"அக்காவிடம் நீங்கள் சொல்ல வேண்டாம். என்னிடம் சொல்லுங்கள். நான் சொல்லிக் கொள்கிறேன்."

[illegible] அறைக்குள் சென்று உடைகளைக் களைந்து வேற்றுடை உடுத்திக்கொள்ளும்வரை வெளியே நின்றுகொண்டிருந்தாள்.

மெதுவாக அறையை விட்டு வெளியே வந்தவள் நிலைவாசிற்படியைத் தாண்டி வந்து அங்கே நிற்கும் திலகத்தைப் பார்த்தாள். அவள் விழிகளை அவளும் சந்தித்தாள்.

அப்பப்பா! எவ்வளவு வசீகரமான கண்கள் அவளுடையது!

அவள் ஒரு தடவை அப்பால் பார்த்து விட்டுத் தலைதிரும்பிய போதும் அவள் அவளையே விழியசைக்காது பார்த்துக்கொண்டிருந்தாள்.

"நீங்கள் எங்கே போனீர்கள், யாருடன் போனீர்கள் என்பதெல்லாம் எனக்குத் தெரியும். அதை நான் உங்கள் அக்காவிடம் சொல்லப் போகிறேன். இப்பொழுது சொல்ல மாட்டேன். சமயம் வரும்போது மட்டும் சொல்வேன்."

அவள் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்து விட்டு உணவருந்த உட்கார்ந்தாள். அவளுக்குத் தேவையானவற்றை டைனிங் டேபிளில் எடுத்து வைத்துவிட்டு வெளியே வந்து நின்று கொண்டாள்.

வாசற்படி அருகில் அவள் நிற்பதைப் பார்த்துவிட்டு, "இந்த வீட்டில் உன்னுடைய பொறுப்புக்கள் என்ன என்பது எனக்குத் தெரிந்தால் பரவாயில்லை. உன்னை வேலைக்காரி என்று கூறவும் கூடாதாம். ஆனால் நீ வேலைக்காரி போல்தான் உழைக்கிறாய். கூடவே இவ்வீட்டின் நிர்வாகப் பொறுப்புக்களையும் நீதான் கவனிக்கிறாய். அதற்காக உன்னை யாரும் அதட்டவோ, மிரட்டவோ கூடாது என்றால் அதை நான் அனுமதித்துக் கொண்டிருக்க மாட்டேன்" என்றாள் சாப்பிட்டுக் கொண்டே...

"நீங்கள் அனுமதித்தாலும் அனுமதிக்காவிட்டாலும் நான் இந்த வீட்டு எஜமானிக்குக் காரியதரிசிப் பெண். அதோடு எனக்கு நன்றாகச் சமைக்கத் தெரிவதால் நான் சமைக்கிறேன். என்னை இங்கே யாரும் சமைக்கச் சொல்லி நான் சமைக்கவில்லை என்பதையும் நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும். எனக்கு விருப்பம் இல்லை என்றால் எந்தச் சந்தர்ப்பத்திலும் இந்தச் சமையல் வேலையை நிறுத்திக் கொண்டு விடுவேன். ஒரு வீட்டில் ஊழியம் செய்கிறேன் என்ற ஒரே காரணத்துக்காக மட்டும், அவள் தன்னுடைய அடிமை என்ற எண்ணம் யார் மனத்திலாவது தோன்றினால் அவர்களைப் பற்றியோ, அவர்கள் எஜமான சிந்தனை பற்றியோ நான் கவலைப்பட வேண்டும் என்பதில்லை. இவ்வீட்டில் எனது பொறுப்புக்கள் இவ்வீட்டின் எஜமானரை விட அதிகமானது" என்றாள் திலகம் புன்னகையுடன் அறைக்கு வெளியே நின்றுகொண்டே...

"நான்சென்ஸ்" என்றாள் துரை சிறிது நேர மௌனத்துக்குப் பிறகு. "உன்னை இங்கிருந்து ஒழித்துக் கட்டும்வரை எனக்குத் தூக்கம் வராது."

"உங்களால் அது முடியாது. வீணாக முயன்று எனக்கு முன்னால் தோல்வி அடையாதீர்கள் — தினம் தினம் என் முகத்தில்தான் விழித்தாக வேண்டும்."

"நீ இந்த வீட்டை — இல்லை — என்னைப் பிடித்த ஒரு பிசாசு."

"எப்படி இவ்வளவு சரியாகச் சொன்னீர்கள்? அது போகட்டும்...போன வாரம் சாந்தோம் பீச்சிலே ரொம்ப உரசினுற்போல் ஒரு பெண்ணுடன் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தீர்களே, அந்தப் பெண் யார்? இந்த இரண்டு நாட்களாக வீட்டுக்கு வராமல்கூட அவளுடன்தான் சுற்றிக் கொண்டிருந்தீர்கள் இல்லையா?"

சாப்பிட்டுக் கொண்டிருந்தவன் திடுக்கிட்டுப் போய் அவள் இருந்த பக்கம் நிமிர்ந்து பார்த்தான்.

"சும்மா சொல்லுங்க... உங்களை அந்தப் பெண்ணோடே மகாபலிபுரத்திலே பார்த்ததாகவும் எங்கோ ஒரு ஹோட்டல் அறையில் பார்த்ததாகவும் எனக்குத் தகவல் வந்திருக்கிறது."

"நீ என்ன பெரிய ஜேம்ஸ்பாண்ட் 007ஆ?"

"இல்லை; நான் ஒரு பெண். உணர்ச்சியுள்ள பெண்."

"யாராக இருந்தால் என்ன? அவள் என் காதலியாகக்கூட இருக்கலாம் — சிநேகிதையாகக்கூட இருக்கலாம்."

"பார்த்தால் உங்களைவிட நான்கைந்து வயது பெரியவளைப் போலத் தோற்றம் அளிக்கிறுளே!"

"இருக்கட்டுமே?" — அவன் எழுந்துவிட்டான்.

அவளைத் தாண்டிப் போகும்போது அவளை ஏதோ வஞ்சம் தீர்த்துவிட்ட மாதிரி பார்த்துவிட்டுத் தன் அறைக்குப் போய் விட்டான்.

திலகமும் அவனைத் தொடர்ந்து அவன் அறை வரையில் சென்று வெளியே நின்றுள்.

"உங்களுடைய இந்தச் செய்கை ரொம்பவும் அளவுக்கு மீறினது. இதை வளரவிட்டுக் கொள்வது உங்களுடைய அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கும்."

"எச்சரிக்கையா ?— மிரட்டலா ?— இல்லை அக்கறையா?.... ம்...."

"எப்படி வேண்டுமானுலும் எடுத்துக் கொள்ளலாம். இதை நான் வளரவிட மாட்டேன். ஒன்று நீங்களாக நிறுத்த வேண்டும்; அல்லது நிறுத்தும்படியாகச் செய்வேன்."

"பார்க்கலாமா?"

"பார்க்கலாம்."

"இங்கே வாப்பா ரமணன். நீ சொல்றது உண்மைதானு?"

"ஆமாம் அம்மா, தயவுசெய்து நான் சொன்னதாக வெளியே காட்டிக்கொள்ளாதீர்கள்."

"இது எத்தனை நாளா?"

"நான் பல தடவைகள் பார்த்திருக்கிறேன்."

"அவள் எப்படி இருப்பாள்?"

"கொஞ்சம் உயரமான உடம்பு — நல்ல சிவப்பு — நீளமான மூக்கு..."

"தலைமயிர் குட்டையா இருக்குமா? எப்பவாவது காதிலே வளையத்தோடு பார்த்திருக்கிறுயா? — இங்கே இருக்கிறபோது போட்டுண்டு மினுக்குவா. நான் கொஞ்சம்



ஜாடையாக் கண்டிப்பேன். அவள் சுமற்றி வச்சுடுவா."

"நீங்க சொல்ற மாதிரி காதிலே வளையம் தான் போட்டுண்டு இருக்கா."

"அடிப் பாவி! அவளேதான்."

"அவள் இங்கே போன வருஷம் சில மாதங்கள் வேலை செய்திருக்கிறுளா?" என்றுள் திலகம்.

"ஏம்பா ரமணு! நீ ஒரு நல்ல பிள்ளை. அவன் மேலே நான் எவ்வளவு அன்பு வெச்சு இருக்கேன்கிறது உனக்குத்தான் தெரியுமே. என்கிட்டே இதை இவ்வளவு நாட்கள் கழிச்சுச் சொல்லலாமா?"

"திலகத்துக்கிட்டே சொன்னேன். அவள் உங்ககிட்டே இப்போ சொல்ல வேண்டாம்; சொன்னுல் உங்க மனம் ரொம்ப வேதனைப்படும் என்று சொல்லி விட்டாள்."

"அவளும் ஒரு அசடு; நீயும் ஒரு அசடு." பாக்யம் உரிமையோடு கடிந்து கொண்டாள். "இப்போதாவது வந்து சொன்னியே — ரொம்ப சந்தோஷம்...." அருகில் நின்ற ரமணனின் கரத்தைப் பிடித்துக் கொண்டு சில கணங்கள் மௌனமாக இருந்தாள் பாக்கியம். அவள் கரம் இலேசாக நடுங்குவதை அவன் உணர்ந்தான்.

"ஏன் உங்கள் உடம்பு இப்படி நடுங்குகிறது?" என்று கேட்டுக் கொண்டே பாக்கியத்தின் கட்டிலில் அமர்ந்தான்.

பாக்கியம் மௌனமாகக் கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தாள். "உன்னைப் பார்த்தால் நான் ரொம்பப் பெருமைப்படறேம்ப்பா— இங்கே இருக்கிறவர்கள் யாருக்குமே — நீ எந்த வித உறவும் இல்லேதான். நீ யாரோ, நாங்கள் யாரோதான். ஆனுல் உன்னுடைய

சாதுவைகமான போக்கு என்னை ரொம்பக் கவர்ந்து விட்டது. உன்னிடம் மனம் விட்டுச் சொல்கிறேன்... இப்போ சொல்றேன். வெளியில் நீ அவனைக் கொஞ்சம் ஜாக்கிரதையாகக் கண்காணிக்க முடியுமானால் ரொம்ப உதவியாக இருக்கும்'' என்றவள் கண்களைத் துடைத்தவாறே திலகத்தை நோக்கினாள்.

''உன்னுடைய பொறுப்புக்கள் இன்னும் அதிகமாகின்றன, திலகம். துரைராஜை இப்படியே விட்டு விட்டுப் பிறகு துயரத்தை நாம் உண்டாக்கிக் கொள்ளக் கூடாது'' என்று வேதனையுடன் பாக்கியம் கூறிக்கொண்டிருக்கும்போதே துரைராஜ் அறையின் வாசற்படியில் நின்று கொண்டிருந்தான். அவன் முகம் சிவந்திருந்தது. அவனது பார்வை முழுதும் ரமணனின் மேல் ஆழமாகப் பதிந்து பாய்ந்து கொண்டிருந்தது.

''ஏண்டா, மரியாதை இல்லாத ராஸ்கல். உனக்கு இதுதான் வேலையா?'' வேகமாய் அவன் மேல் பாய்ந்தவன் அவனைக் கீழே பிடித்துத் தள்ளி தன் முஷ்டியை மடக்கி முகத்தில் அடித்தான். அவனது செய்கையைக் கண்டு படுக்கையில் இருந்தபடியே பாக்கியம் துடிக்க, வேகமாக வந்த திலகம் தன் அசுர பலத்தைப் பயன்படுத்தி, ரமணனைக் கீழே தள்ளி மேலே அமர்ந்திருந்த துரைராஜைப் பிடித்து இழுத்தாள். அவள் இழுத்த வேகத்தில் அவன் அப்பால் சென்று விழுந்தான்.

ரமணனுக்கும் கைகொடுத்து எழுந்து நிற்க உதவினாள். கன்னத்தில் சிராய்ப்புகளுடன், உதட்டில் ரத்தம் கொட்ட, ரமணன் தலைகுனிந்து மௌனமாக நின்றான்.

''ஏ, முட்டாள்! வெளியே போ. என்னோட சொந்த விவகாரங்களில் தலையிடறவங்களுக்கு எல்லாம் இதுதான் தண்டனை. ஜாக்கிரதை!'' என்று அவன் எச்சரிக்கை செய்வது போல் திலகத்தைப் பார்த்தான். அவள், இவனுடைய மிரட்டல்களுக்கெல்லாம் அஞ்சுபவளாகத் தெரியவில்லை.

''ரொம்பச் சாதுப் பிள்ளையடா அவன்— அவனைப் பார்க்கிறபோதே அவன் மேல் ஓர் இரக்கம் உண்டாகலே உனக்கு? — ஏண்டா பிசாசு! அவனைப் போய் இப்படி அடிக்கறியே? நீ ஆடுகிற ஆட்டத்தைச் சொன்னால் உனக்கு இவ்வளவு திமிரா?'' என்றாள் பாக்கியம்.

ரமணன் தன் உதட்டில் கசிந்த ரத்தத்தைத் துடைத்துவிட்டுத் திலகம் கொடுத்த பர்ஃபூம் பேஸ்டைத் தடவிக் கொண்டிருந்தான். அவன் கண்கள் கலங்கிப் போயிருந்தன. இவ்வளவு அடி வாங்கியதற்கு அவன் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் மௌனமாகவே நின்றான்.

''ரமணா! என்னை மன்னிச்சுடப்பா — இவனுடைய செய்கைகளுக்காக நான் ரொம்ப வெட்கப்படறேன்'' என்றாள் பாக்கியம்.

''பரவாயில்லே. இவர்தானே அடிச்சார். என்னோட சகோதரர் அடிச்ச மாதிரி நினைக்கிறேன். அதுக்காக நீங்கள் வருந்த வேண்டாம். உங்க மேலேயும் திலகத்து மேலேயும் உள்ள ஒரு தனி அக்கறையினாலே இதை நான் சொன்னேன்...'' என்று கூறிவிட்டு மெதுவாக வெளியேறிவிட்டான். அவன் தன் அவுட்ஹவுஸுக்குப் போவதை ஜன்னல் வழியே பார்த்துக் கொண்டிருந்த திலகத்துக்கு அவன் மேல் அளவற்ற பரிவும் பச்சாதாபமும் பிறந்தன.

மாலையில் வீடு அமைதியில் மூழ்கியிருந்தது. திலகம் பாக்கியத்தின் அருகில் மௌனமாக நின்று கொண்டிருந்தாள். பாக்கியம் கவலையுடன் பேசிக் கொண்டிருந்தாள்.

''ரமணன் சொல்வது உண்மையானால், அதை நாம் இப்பொழுதே தடை செய்ய வேறு வழியை மேற்கொள்ள வேண்டும். எனக்குத் தெரிந்தது இது ஒன்றுதான் — மேலே எனக்கு எந்த வித யோசனையும் தோன்றவில்லை. உன்னுடைய மனப்பூர்வமான சம்மதம் கிடைத்தால் போதும்.''

''என்னிடம் ஒன்றும் இல்லை. இதில் எந்த வித மாற்று அபிப்பிராயமும் கிடையாது. சில நாட்களுக்கு முன் என்னிடம் நீங்கள் கேட்டிருந்தால், ஒருவேளை நான் உங்கள் விருப்பத்துக்கு மாறாகப் பதில் கூறியிருப்பேனோ என்னவோ — ஆனால் இன்று அப்படியல்ல. நீங்கள் படுகிற அந்தரங்க சோகம் எனக்குப் புரிகிறது. தாங்கள் என்மேல் வைத்துள்ள அன்பும் எனக்குத் தெரிகிறது. உங்கள் விருப்பத்தை ஏற்று, அதில் வெற்றி பெறும் மனோதிடம் என்னிடம் உண்டு.''

அப்போது ரமணன் தயங்கித் தயங்கி உள்ளே நுழைந்தான். ''நல்ல சமயத்தில் தான் வந்திருக்கிறேன் போலிருக்கிறது'' என்றான், எல்லாவற்றையும் மறந்து சிரித்துக் கொண்டே. அவனது கபடமற்ற சிரிப்பின் தன்மை திலகத்துக்கு அவன்மேல் உள்ள பரிவை இன்னும் அதிகமாக்கியது.

''நல்ல சமயந்தான்'' என்ற பாக்கியம், தனது விருப்பத்தையும், திலகத்தின் துணிவான முடிவையும் கூறினாள்.

''திலகத்துடைய உயர்ந்த குணங்கள் வேறு எந்தப் பெண்ணுக்கும் வராது'' என்று தயங்கியபடியே திலகத்தைப் பார்த்துக் கூறினான் ரமணன்.

திலகத்தை ரமணன் புகழ்வது பாக்யத்துக்குப் பெருமையாக இருந்தது.

''ஆனால், இதில் இதற்குப்பின் நிலவும் அல்லது நிலவப் போகும் ஒரு முக்கியமான மனநிலையின் மாறுதலைப் பற்றி நாம் நினைக்க வேண்டும். இன்று நான் அவருக்கு ஒரு மூன்றும் மனுஷியாக இருப்பதால்தான் என்னால் அவரை ஓரளவு கண்டிக்க முடிகிறது. இந்த மனோபாவம் மாறுமானால், அந்த வாய்ப்பை நான் இழக்கும்படியாக மாறலாம். அவருக்கு என்னை மிரட்டும் வாய்ப்பு ஓர் அநுகூலமாக அமையலாம். இது ஒன்றுக்காகத்தான் நான் யோசனை செய்கிறேன்...''

திலகத்தின் இவ்வாதம் நியாயமானதாகவேபட்டது பாக்யத்துக்கு. இருந்தாலும் எந்த ஒரு வாய்ப்பு துரைக்கு அநுகூலமாக அமையும் என்று திலகம் கருதுகிறாளோ, அதே அநுகூலம்தான் அவளுக்கும் உண்டே. துரைராஜின் நடவடிக்கைகளைக் கண்டிப்பது ஒரு கடமை என்று எண்ணுகிறவளுக்கு, அதே உரிமை என்று ஆகிவிட்டால், அதில் இன்னும்

ஒரு பங்கு சிரத்தை சேருமே. பாக்யம் இதைத்தான் திலகத்திடம் கூறினாள்.

ரமணன், எல்லாம் பெரிய இடத்து விஷயம். தனக்கு ஏன் இந்த விவகாரமெல்லாம் என்று வெறுமனே நின்று கொண்டிருந்தான்.

பாக்யம் அவனை விடவில்லை.

"சும்மா சொல்லப்பா, அபிப்பிராயம் சொல்றதுனாலே என்ன வந்துவிடப் போகிறது?" என்று ரொம்ப உரிமையுடன் கூறிய பின்புதான் பாக்யத்தின் வாதம் சரியானதே என்ற தன் எண்ணத்தை ரமணன் வெளிவிட்டான். சொல்லிவிட்டு, "ஆனால், அவர் இதற்கு ரொம்பச் சுலபமாகச் சம்மதிப்பார் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா?" என்ற கேள்வியையும் பாக்யத்திடமே கேட்டான்.

"நிச்சயமாக அவர் அதற்குச் சம்மதிக்க மாட்டார். ஒரு பெரிய பூகம்பமே வரப் போகிறது, பாருங்கள்" என்றாள் திலகம்.

ரமணன் இலேசாகச் சிரித்துவிட்டுக் கூறினான்: "உங்களுக்கு இவர்கள் சொல்வது போல் தைரியம் அதிகம்தான். உங்கள் ஒருவரால்தான் துரைராஜைச் சமாளிக்க முடிகிறது."

"இதை ஒரு பெருமையாக நான் நினைக்கவில்லை" என்றாள் திலகம், ரமணனைப் பார்த்து.

"நீங்கள் அப்படி நினைப்பதாக நான் சொல்லவில்லை. உங்கள் பணி ரொம்பக் கடினமானது என்று சொல்ல வந்தேன்." அங்கே நீண்ட நேரம் மௌனம் நிலவியது. ரமணன் போய்விட்டான்.

தன் அறையில் உள்ள செண்ட் ஆப் டிராயரில் உள்ள அடுக்குத் தட்டுக்களை ஒவ்வொன்றாக இழுத்து எதையோ பரபரப்புடன் தேடிக் கொண்டிருந்தான் துரைராஜ். திலகம் மௌனமாக நின்று கொண்டிருந்தாள்.

"நீ கொஞ்சம் வெளியே போகிறாயா? நான் கொஞ்சம் முக்கியமான வேலையில் ஈடுபட்டிருக்கிறேன்."

"நான் போவதாக இல்லை."

"உன்னுடன் பெரிய தொல்லையாகப் போய்விட்டது எனக்கு."

"என்ன செய்ய? அது வாழ்க்கை முழுதும் தொடரப் போகிறது. அதற்காகத் திட்டம் உருவாகிக் கொண்டிருக்கிறது. நீங்கள் என்னை உதறிவிட்டு ஓட நினைத்தாலும், சில பேருடைய அன்புக் கட்டளை என்னை உங்கள் அருகில் தூக்கிவந்து நிறுத்திவிடும்போல் இருக்கிறதே."

"அதுதான் நடக்காது. நான் என் விஷயமாக ஒரு முடிவுக்கு வந்து எத்தனையோ நாட்களாகி விட்டன. அந்த முடிவு மாற்ற முடியாத முடிவு. மாற்றம் இல்லாத முடிவு. என்ன ஆனாலும் சரி. இதனால் இந்தக் குடும்பமே இரண்டாகப் பிரிந்தாலும் சரி."

"அதுதான் உங்களால் முடியாது. எனக்கும் தெரியும். அக்காவின் அனுமதியில்லாமல் ஒரு செப்புக் காசுகூட உங்களால் தொட முடியாது. அவர் அனுமதியும், அன்பும் பெறாமல் மற்றொருத்தி இவ்வீட்டில் நுழையவும் முடியாது. உங்களுடைய பிடிவாதம் வெளியில் வேறுவிதமாக மேய்ந்து கொண்டிருக்கலாம். ஆனால், அக்காவின் கடமை என்பது இங்கே வேறுவிதமாக வேலை செய்து கொண்டிருக்கிறது" என்று அவள் சொன்னவுடன் பரபரப்புடன் தேடுவதை நிறுத்தி விட்டு, நாற்காலியில் உருத்துக்காவிட்டு மௌனமாக அமர்ந்து விட்டான். திலகத்துக்கு அவனால் பதில் ஏதும் கூற முடியவில்லை.

"நீங்கள் எதைப் பரபரப்புடன் தேடிக் கொண்டிருந்தீர்களோ, அது அக்காவின் கைக்குப் போய் ஒரு வாரத்துக்கு மேல் ஆகிறது. உங்கள் வெளிஉலக லட்சணத்தை அக்காவும் பார்க்கட்டுமே என்று நான்தான் எடுத்துக் கொண்டு போய்க் கொடுத்தேன்."

"அதை உன்னை யார் எடுக்கச் சொன்னது? அந்த டெண்டர் பேப்பர்கள், லைசென்ஸ் இல்லையென்றால் வருகிற கண்காட்சியில் அந்த நடன நிகழ்ச்சியை நான் நடத்த முடியாது. பல வெளியூர் பெண்களுக்கெல்லாம் எழுதி, பணம் அட்வான்ஸ் கொடுத்த ரசீதுகள் அதிலே இருந்தன.

"...கலையரங்கத்தை ஏலம் எடுக்க டெண்டர் வேறு அதில் இருந்தது. அதை அனுப்ப இன்றுதான் கடைசித் தேதி."

"எல்லாம் இருந்தன. யார் இல்லை என்றீர்கள்? எல்லாம் அக்காவிடம் பத்திரமாய் இருக்கின்றன. இப்படிக் கீழ்த்தரமான ஆபாச நடனமெல்லாம் நடத்திப் பணம் சம்பாதிக்கிற நல்ல வழியைச் சொல்லித் தந்தது யார்? உங்களுடைய... அதான் ... அவள் பெயர், விஜயமாலாதானே? அவளுடைய யோசனையா? அவள்கூட ஆடுவாளோ?"

"அவள் ஆடுகிற காபரேயையும், பெல்லி நடனத்தையும்.... இன்று முழுதும் பார்த்துக் கொண்டிருக்கலாம்..." என்றான் துரைராஜ் மிகுந்த உற்சாகத்துடன்.

"ஓஹோ?" என்றவளின் கண்கள் கலங்கிப் போயிருந்தன. அதற்கு மேல் அவள் அங்கே நிற்கவில்லை. போய்விட்டாள்.



யாகியாவின் சாதனைகள்!

பாகிஸ்தானைத் தோற்றுவித்த ஜின்னாவே செய்ய முடியாத பல அரும்பெரும் சாதனைகளைச் செய்து விட்டார் யாஹியா கான்!

இரண்டாகப் பிரிந்திருந்த பாகிஸ்தான் இப்போது ஒன்றாகிவிட்டது!

வங்காளி, வங்காளி அல்லாதார் என்ற பிரச்னை இனி எழாமல் செய்துவிட்டார்!

காந்தியோ, லிங்கனோ தங்கள் மக்களுக்கு ஜனநாயகத்தின் அருமையை உணர்த்தியதைவிட நன்றாகத் தம் குறுகிய கால ஆட்சியில் பாகிஸ்தான் மக்களுக்கு ஜனநாயகத்தின் பெருமையை உணர்த்தி விட்டார்!

"உருதுவா, வங்காளியா" எனும் மொழிப் பிரச்னைக்குத் தீர்வு ஏற்படுத்தி விட்டார். இனி உருது மட்டுமே ஆட்சி மொழியாக இருக்கலாம்!

பெரிய பெரிய வல்லரசுகள்கூட, ராஜாஜி, ரஸ்ஸல் போன்ற பெரியோர்கள் கூறியபடி படைக் குறைப்புச் செய்ய முன்வராதபோது யாஹியா பாரதத்தின் மீது படையெடுத்து பாக். படையைப் பாதிக்குப் பாதியாகக் குறைத்து விட்டார்! - சம்பத் குமாரி

பாக்யத்திடம் நேரில் செல்லத் தயங்கியவன் நிலகத்திடம் வந்து அந்தக் கவர்ச்சி நடன லேசென்ஸையும், பூர்த்தி செய்து அனுப்பத் தயாராக இருந்த டெண்டர் பாரத்தையும் பெற முயன்று ரொம்பவும் மனமுடைந்து போனுன். அவள் அவனது வேண்டுகோளை நிறைவேற்ற மறுத்துவிட்டாள்.

"**உ**ங்களை அதை யார் அவ்வளவு ஞாபகப் பிசகாக மேஜையின்மேல் வைக்கச் சொன்னது? இன்றுடன் அதற்கான டெண்டர் தேதி நேரம் முடிந்துவிட்டது. காலை பத்து மணிக்கே உங்களை எதிர்பார்த்தேன். இன்றுதானே ஸீல்டு டெண்டர்கள் உடைக்கிறார்கள். நீங்கள் இப்போ வர்றீங்க. இப்போ என்ன மணி? செல்லையா வந்து கன்றுபின்றுவென்று திட்டி விட்டுப் போகிறுரு. நீங்க எங்க எல்லாரையும் ஏமாத்தப் பார்க்கிறீங்க.... பணத்தோட உடனே வரேன்னுட்டு...." விஜயா மிகுந்த ஆத்திரத்துடன் படபடத்தாள்.

"சம்பந்தப்பட்ட பேப்பர் எல்லாம் அக்கா கையிலே சிக்கிவிட்டது. அதை எப்படியாவது தட்டிக் கொண்டு வந்துவிட வேண்டும் என்று முயன்றேன். வெறுங் கையுடன் உங்களைக் காண வர எனக்கு என்னவோ போல் இருந்தது. அதோடு, காரை ஷெட்டிலிருந்து எடுக்க முடியாமல் கார் சாவி, ஷெட் சாவி எல்லாவற்றையும் நிலகம் ஒளித்து வைத்து விட்டாள்."

"நீங்கள் இவ்வளவு பயந்தாங்கொள்ளியா? ஒரு பெண், அதிலும் கேவலம் வீட்டு வேலைக்காரி, சமையற்காரி — ஏதோ உங்க அக்கா அவ மேலே கொஞ்சம் அபிமானமா இருக்காங்கறதைச் சாதகமாய்ப் பயன்படுத்திக்கிட்டு உங்களை ஆட்டி வைக்கிறு. அதைப் பொறுத்துக்கிட்டு நீங்க இருக்கீங்க..... இதுக்கே இப்படி இருந்தால், நம்முடைய மற்ற திட்டங்களுக்கெல்லாம் எப்படி ஒத்து வரப் போறீங்க? ஊர் ஊரா கலா நிகழ்ச்சிகளுக்குப் போறது. காபரே நடனக் குழு ஒன்று நிரந்தரமா அமைக்கிறது. இதெல்லாம் என்ன ஆறது?" என்று விஜயா பேசிக் கொண்டிருக்கும் போதே, அவனது கவர்ச்சி நடன ஏற்பாட்டுக்கான கூட்டாளி செல்லையா வந்து விட்டான். விஜயா ஒருபுறமும் செல்லையா ஒருபுறமுமாக அவனைக் கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டுத் துளைத்து எடுத்தனர். காட்டமான பேச்சுக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. அவனது சாமர்த்தியமின்மையைக் குத்திக் காட்டுவதுபோல் விஜயா பேசியபோது அவனுக்கு ரோஷம் வந்துவிட்டது. விஜயா, செல்லையா இவர்களின் நேரிடையான நெருக்கலால் தாக்குண்ட துரை அவர்கள் முன்பு தான் ஓர் உபயோகமற்றவன் என்பதை நிரூபித்துக் கொண்டு விடக் கூடாது என்ற எண்ணத்தில் தீவிரமான ஒரு முடிவுடன் முடுக்கி விடப்பட்ட பொம்மை போல் தன் இல்லம் நோக்கி வந்தான்.

கடைத்தெருப் பக்கமாக வரும்போது தான் ரமணன் தன்னைக் கண்டு பயந்து ஒரு நகைக் கடைக்குள் ஒளிவதைக் கண்டான். அவன் சந்தேகம் வலுப் பெறவே, வேகமாக அவன் மறைந்துகொண்ட கடைக்குள் சென்று அவனை வெளியே இழுத்து வந்தான். ரமணன் கையில் சிறு பொட்டலம் ஒன்று இருந்தது.

"என்ன இது?"

அவன் கையில் உள்ளதைப் பிடுங்காத குறையாக வாங்கிப் பிரித்தான்.

ஒரு பழைய தங்கச் சங்கிலி. பாக்யத்தினுடையதுதான்.

"திருட்டு ராஸ்கல்.... இது ஏதுடா, உனக்கு? நீ சாதுபோல் நடக்கிறதைப் பார்க்கிறபோதே எனக்கு இந்தச் சந்தேகம் உண்டு." நடுத்தெரு என்றுகூடப் பாராமல் அவன் கன்னத்தில் ஓர் அறை கொடுத்துவிட்டான். ஒரு சிறு கூட்டம் கூடிவிட்டது. தலை குனிந்து மௌனமாக நின்ற ரமணன் கன்னத்தைத் தடவி விட்டுக் கொண்டே துரைராஜைப் பரிதாபத்துடன் பார்த்தான்.

கூட்டத்தில் இருந்தவர்கள் பலவாறு பேசத் தொடங்கினர்.

"பார்த்தால் படித்தவர் போலத் தோன்றுகிறார்" என்றார் ஒருவர்.

"இவன் பெரிய டிராயிங் மாஸ்டர் சார். திருட்டு அயோக்கியன்.... நம்ம அவுட் ஹவுஸிலே குடியிருக்கான்.... நடடா,— ஸ்டேஷனுக்கு......"

ரமணன் பேச முடியாமல் தடுமாறினுன். அவன் கழுத்தைப் பிடித்துத் தள்ளினுன் துரை. சிறு கூட்டத்தின் நடுவில் தனக்குத் துரைராஜினுல் உண்டான மானக் குறைவினுல் மனம் வேதனைப்பட்ட ரமணன் தலை குனிந்து நடந்தான்.

போலீஸ் பின்தொடர ரமணனும், ரொம்பவும் அட்டகாசத்துடன் துரையும் வீட்டுக்குள்ளே வந்தனர்.

"உன்னுடைய சாது ரமணன் செய்ததைப் பாரு. கேட்டால் நீதான் பாலிஷ் போடக் கொடுத்தே என்கிறுன்..... பத்து பவுன் நகையோடே ஆளைக் கையும் களவுமா நகைக் கடை வாசலில் பிடித்தேன்.... என்னடா, திருட்டு நாயே, விழிக்கிறே, சொல்லேன்" என்று கத்தினுன் துரைராஜ்.

திலகம் பரபரப்புடன் வந்தாள்.

"அக்கா கொடுத்தாளா...? இல்லே, இந்த ஜூனியர் எஜமானியம்மா எடுத்துக் கொடுத்து ஃபிப்டி... ஃபிப்டி.... என்று ஏதேனும் ஒப்பந்தம் செய்து கொண்டாளா?"

"துரைராஜ்...! அதிகமாக வார்த்தைகளைக் கொட்டிவிடாதே. அப்புறம் அள்ள முடியாது. இந்த இரட்டை வடம் சங்கிலியை நான்தான் நடராஜா ஜுவல்லரியில் பாலிஷ் போடக்கொடுத்துவிட்டு வரச்சொன்னேன்."

"அக்கா....."

"ஆமாம்டா. நான்தான் கொடுத்து அனுப்பினேன்."

"பொய். இவனைத் தப்பிக்க வைக்க நீ போலீசுக்கு முன்னுல் விஷயத்தைத் திசைதிருப்பறே. நான் நம்பத் தயாரில்லே...."

"நீ நம்பினுல் என்ன, நம்பாவிட்டால் எனக்கென்ன?" என்று கூறியவள் நடராஜா ஜுவல்லரியின் குறிப்புச் சீட்டு ஒன்றை எடுத்துக் காட்டினுள். அதில் ஓர் இரட்டை வடம் தங்கச் சங்கிலியைப் பாலிஷ் போட இவ்வளவு தொகையாகும் என்பதற்கான குறிப்பு இருந்தது.

போலீஸ் இன்ஸ்பெக்டர் ரமணனின் பக்கம் திரும்பி, ''மன்னிக்கணும். எங்க கடமையைச் செய்தோம். உங்களுக்கேற்பட்ட மானநஷ்டத்துக்கு நாங்கள் கொஞ்சம் கூடப் பொறுப்பாளிகள் அல்ல. உண்மை தெரிந்துவிட்டது. உங்களை விட்டுவிட்டோம்'' என்றார். பிறகு துரைராஜின் பக்கம் திரும்பி, ''மிஸ்டர், சொந்த விருப்பு வெறுப்புக்கள் இவர் மேல் உங்களுக்கு அநேகம் இருக்கலாம். ஆனால் அதை வெளிப்படுத்த நீங்கள் கையாள்கிற முறை ரொம்பவும் கண்டிக்கத்தக்கது. இனி சட்டத்துடன் விளையாட நினைக்காதீர்கள்'' என்று கூறிவிட்டு வேகமாகப் போய்விட்டார் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

துரைராஜ் தான் செய்த முறைகேடான செய்கைக்கு ஓர் அனுதாபம்கூடக் கூறாமல் வெளியேறினான்.

''ஏம்பா, ரமணா! நீயே இதைப் போலீஸில் சொல்லிவிட்டு வந்திருக்கலாமே.''

''சொன்னேன். அவர்கள் நம்பவில்லை. அதோடு இவரும் அங்கே ஒரேயடியா சாதித்தார். நான் மௌனமாகிவிட்டேன். உங்களுக்குச் சந்தேகம் இருந்தால் பாக்யத்தம்மாவிடம் கேளுங்கள் என்றேன். அதற்கு அவர்கள் சம்மதித்தார்கள்.

'' இவர் போலீஸில் கூறியதற்கோ, அவர்கள்முன் என் மேல் திருட்டுப் பட்டம் கட்டியதற்கோகூட நான் வருத்தப்படவில்லையம்மா..... நடுத் தெருவில் நடராஜா ஜுவல்லரி வாசலில் பல பேர் முன்னிலையில்'' என்று கூறிவிட்டுச் சட்டையைத் தூக்கி முதுகைக் காட்டினான். அங்கே அடிபட்ட தழும்பு..... ''என் மேல் காரணமின்றி ஒரு விரோதம் கொண்டு எப்போது சமயம் கிடைக்கும் என்று அவர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். நான் மனமறிந்து ஒரு தவறும் செய்யவில்லை'' என்று கூறிவிட்டுத் தலையைக் குனிந்துகொண்டே வெளியேறினான் ரமணன்.

திலகம் பிரேமாவின் பக்கமாகத் திரும்பி விழித்துக் கொண்டிருந்தாள்.

பாக்யம் ரொம்பவும் துயரத்துடன் திலகத்தை அழைத்து அருகில் அமர வைத்துக் கொண்டாள்.

''கவனித்தேன், திலகம்! கொஞ்ச நேரத்தில் உன்னையும் அவன் நெறி தவறிப் பேசிவிட்டான். அதைக் கவனித்துக் கொண்டுதான் இருந்தேன்.''

''அவரை இனி திருத்தமுடியாது, அக்கா!'' என்றாள் விசும்பலுடன்.

''நீகூட நம்பிக்கை இழந்து பேசுகிறாயே, திலகம்!''

'' இனி நம்பிக்கை வைக்க என்ன அக்கா இருக்கிறது? இவ்வளவு நாட்கள் அவர் செய்த உதாசீனத்தைக்கூட நான் பொறுத்துக் கொண்டுவிட்டேன். அது எனக்குப் பெரிய அவமானமாகவும்படவில்லை. ஒரு விளையாட்டாகப் போய்விட்டது. உங்கள் வீட்டு நகையை நான் எடுத்து ரமணனிடம் கொடுத்து விற்கச் சொன்னதாக ஒரு வார்த்தை கூறினாரே. அது ஒரு சாதாரண வார்த்தையில்லை.... அவர் மனத்தில் எவ்வளவு வன்மம் இருந்தால், அதிலும் போலீஸார் முன்னிலையில் இதைக் கூற அவர் துணிந்திருக்க வேண்டும்?'' என்று கூறிப்



கனடா நாட்டுக் காரிகை

கனடா நாட்டுத் தூதுவர் ஜேம்ஸ் ஜார்ஜின் புதல்வி டால்ஃபி ஜார்ஜின் பரதநாட்டிய அரங்கேற்றத்தை மியூசியம் தியேட்டர் அரங்கில் கண்டவர்கள் அவருடைய பயிற்சியின் முழுமையையும், இக்கலையைப் பயிலுவதில் அவர் எடுத்துக்கொண்ட அசாதாரண முயற்சியையும், அவற்றில் அடைந்த வெற்றியையும் மனமாரப் பாராட்டினார்கள். இலங்கையில் பயில ஆரம்பித்து அங்கேயே முழு நேர பரதநாட்டிய நிகழ்ச்சியை நடத்திக் காட்டியதுடன், தமது சொந்த நாட்டில் மேலை நாட்டுப் பாலே நடனத்தில் பயிற்சியும் பெற்றுப் பல நடனங்களில் பங்குகொண்டுள்ளவர். எனினும், பரத நாட்டியத்தில் பற்றுள்ள காரணத்தினால் ஸ்ரீமதி பாலசரஸ்வதியிடம் மாணவியாக அமர்ந்து இக்கலையின் நுட்பங்களையெல்லாம் அசாதாரண ஊக்கத்துடன் கற்று, அரங்கேற்றத்தின்போது தாம் இக்கலையில் அடைந்துள்ள முதிர்ச்சியை அழகாக, பூரணமாக, வெளிக் காட்டினார். கமாஸ் வர்ணத்திலும், வசந்தா ராக ஜதிஸ்வரத்திலும், காபி ராக தில்லானாவிலும் நிருத்தியங்கள் மிகவும் ரம்மியமாக இருந்தன. காலப்ரமாணம் வெகு சுத்தம். அபிநயங்கள் எல்லாம் பாலசரஸ்வதியின் பாணியில் மெருகேறி மின்னொளிப் பிரகாசித்தன. ஆலோலம் என்ற வர்ணி பரத உருப்படிக்கு ஆடப்பட்ட நடனங்கள் புதுமை. முதல் தரமாக இருந்தன. பதங்களை ஸ்ரீமதி பாலசரஸ்வதியும் அவருடைய புதல்வி லக்ஷ்மியும் பாடியதால் ஏற்பட்ட திருப்திக்கு எவ்விதத்திலும் குறைவில்லாமலிருந்தன. குமாரி டால்ஃபியின் அர்த்தபுஷ்டியான அபிநயங்கள். பதங்களின் நுட்பமான கருத்துக்களைப் புரிந்து கொண்டு அவற்றில் ஒன்றிப் போய் பாவங்களை அநாயாசமாக வெளிக் காட்டியது போற்றத்தக்கது. பரதநாட்டிய உடையில் டால்ஃபி ஜார்ஜ் அசல் தென்னிந்தியப் பெண்ணாகவே காட்சி அளித்தாள். மொத்தத்தில் மன நிறைவைத் தந்தது இவருடைய பரதநாட்டிய அரங்கேற்றம். ஸ்ரீமதி பாலசரஸ்வதிக்கும் தமது கனடா நாட்டுச் சிஷ்யையின் அரங்கேற்றம் நிறைவை அளித்திருக்க வேண்டும். □

பாக்யத்தின் மேல் முகத்தைப் புதைத்துக் கொண்டு உடல் குலுங்க அழுதாள்.

திலகத்தைப் பாக்யம் சமாதானப்படுத்த முயன்றாள்.

"இன்றைக்கு இருபதாவது நாள் உனக்கு விவாஹம்.... தேதி நிச்சயித்து விட்டேன்" என்றாள் பாக்யம், தன் முன் நிற்கும் துரைராஜிடம். ஆனால் அவனைப் பார்க்காமல், குழாயடியில் ரமணன் தன் துணிகளைத் துவைத்துக் கொண்டிருப்பதை அர்த்தமின்றிப் பார்த்துக் கொண்டே பேசினாள்.

"பெண் யார் ?"

" உன் உதாசீனங்களைப் பொறுத்துக் கொண்டு, அன்று திருடி என்று கூறினாயே அதையும் தாங்கிக்கொண்டு உன்னிடம் என்றாவது ஒருநாள் அன்பு கனியாதா என்று ஏங்கி வாழ்ந்து வருகிறாளே திலகம், அவள்தான்."

"எனக்கு விருப்பமில்லை."

"விருப்பமில்லாமல் போகக் காரணம்?"

"இதற்குக் காரணமெல்லாம் கேட்பதோ, அல்லது சொல்வதோ அவ்வளவு விவேகமான செயலே இல்லை."

"அவ்வளவு சுலபமாகச் சொல்லிவிட்டுத் தப்பிக்கிற விஷயமில்லை. அதோடு, அவ்வளவு எளிதாக நீ இதிலிருந்து மீறிப் போகலாம் என்று நினைத்துவிடாதே. உன்னை எப்படி வழிக்குக் கொண்டு வருவது என்பதும் எனக்குத் தெரியும். உன் பிற்காலம், நம் குடும்பத்தின் நலம் எல்லாவற்றையும் மனத்தில் கொண்டு ஒரு விவேகமான முடிவுக்கு வா."

"அக்கா!"

"நீ போகலாம். உன்னுடைய முடிவான பதில் எனக்கு இன்னும் இரண்டு நாட்களில் தெரிந்தாக வேண்டும்."

அவன் மெதுவாகப் போய்க் கொண்டிருந்தான்.

இரண்டு நாட்கள் வீட்டுக்கே வராமல் இருந்த துரைராஜ் மூன்றும் நாள் மாலை.... போலீஸ் காவலுடன் உள்ளே வந்தபோது பாக்யமும், திலகமும் பேரதிர்ச்சிக்கு ஆளானார்கள்.

விஜயமாலா கொலை சம்பந்தமாகத் துரை கைது செய்யப்பட்டிருக்கும் விஷயத்தைப் போலீஸார் தெரிவித்தபோது திலகம் வீரிட்டு அலறிவிட்டாள்.

துரைராஜ் கண் கலங்க நின்று கொண்டிருந்தான். பாக்யத்துக்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை.

மிகுந்த பிரயாசையுடன் துரையை ஜாமீனில் வெளியே கொண்டு வந்தார் வக்கீல் சந்தானம்.

அட்வகேட் சந்தானம் துரைராஜின் பேச்சில் நம்பிக்கையற்றுக் காணப்பட்டார்.

"உண்மையைச் சொல்ல வேண்டும். நீ பொய் சொன்னால், அந்தப் பொய்யின் மேல் எனது வாதத்தைப் பிரயோகித்து விஷப் பரீட்சை செய்ய முடியாது. நீ கூறுவது உண்மையாக இருந்தால் அந்த உண்மையை வைத்துக் கொண்டு நான் என் வாதத்தைப் பிரயோகித்து ஏதேனும் முயன்று, பார்க்கலாம்" என்று கூறினார். அவன் அப்பொழுதும் தான் சொன்னதையேதான் மீண்டும் சொன்னான்.

"நானும், விஜயாவும் மகாபலிபுரம் கடற்கரைப் பாறையருகே அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம். என்னுடைய கார் ரொம்பத் தூரத்தில் இருந்தது. நாங்கள் பேசிக்கொண்டிருந்த இடம் ரொம்பவும் ஒதுக்குப்புறமான இடம். வரும்போது கொண்டு வந்த டிரான்ஸிஸ்டரை, காரை விட்டு இறங்கும்போது காரிலேயே வைத்துவிட்டு வந்துவிட்டேன். அவளை மட்டும் தனியே இருக்கும்படி கூறி விட்டு, நான் மட்டும்தான் சென்றேன். நான் டிரான்ஸிஸ்டருடன் திரும்பும்போது விஜயாவை நான் உட்கார வைத்துவிட்டு வந்த இடத்தில் காணவில்லை. விஜயா...விஜயா... என்று இரண்டு முறை அழைத்தேன். பதில் இல்லை. மணலில் ஓர் அழுத்தமான தடம், காலை இழுத்துக் கொண்டு நடந்தமாதிரி. அவள் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்தே அது ஆரம்பித்திருந்ததால், அந்தத் தடம் அவளால் உண்டானதாகத்தான் இருக்கும் என்ற நம்பிக்கையுடன் அந்தத் தடம் சென்ற வழியே சென்றேன். அந்த நேரம் வரையில் என் நெஞ்சில் எவ்வித பயமும் தோன்றவில்லை. ஆனால்....."

துரை உடம்பைச் சிலிர்த்துக் கொண்டு இரண்டு கன்னங்களிலும் கையை வைத்துக் கொண்டு சில கணங்கள் மௌனமாக இருந்தான்.

"உம்" என்றார் வக்கீல்.

"நடுவில் அவள் அணிந்திருந்த ஸ்லிப்பரில் ஒன்று மட்டும் கிடந்தது.... என்னுள் ஒரு பயம் உண்டாகி விட்டது.... அதை அடுத்து அவள் தலையில் சூடியிருந்த மல்லிகைப் பூச்சரம்...மற்றொரு ஸ்லிப்பர்....."

"ஒரு பாறை அருகில் விஜயா.... அருகில் ஒரு ரத்தம் தோய்ந்த கத்தி.... அவசரப்பட்டு அதை எடுத்துக் கொண்டு உதவிக்கு ஆளைக் கூப்பிட ஓடி வந்தேன். கூட்டம் கூடி விட்டது. அந்த நேரத்திலும் ரத்தம் தோய்ந்த கத்தி என் கையில்தான் இருந்தது.

"போலீஸ் வந்தது.

"என்னைப் பிடித்துக் கொண்டு விட்டார்கள்."

"செல்லையாவின் ஸ்டேட்மெண்டில் உள்ள விஷயங்கள் எதையுமே இதில் காணோமே? இரண்டு நாட்கள் முன்பு உனக்கும் விஜயாவுக்கும் தொழில் விஷயமாக ஏதோ தகராறு நடந்ததாமே! அவளை விவாகம் செய்து கொள்வதாகக் கூறி வேண்டுமென்றே நாட்களைக் கடத்தி ஏமாற்ற முயன்றாய் என்கிறாளே !"

"தகராறுதான்... அதற்கும், இதற்கும் சம்பந்தமில்லை. பொருட்காட்சி ஒன்றில் நாங்கள் நடத்துவதாக இருந்த ஒரு நடன நிகழ்ச்சி சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளை யெல்லாம் திலகம், அக்காவிடம் கொடுத்து விட்டாள். அக்கா அதை நெருப்பில் போட்டு எரிக்கும்படி உத்தரவிட்டு விட்டாள். அதனால் உரிய நேரத்தில் கலை அரங்குக்கான எங்கள் டெண்டரைத் தர முடியவில்லை. அதோடு, வெளியூர் நடனக்காரிகளுக்குக் கொடுத்திருந்த முன்பண ரசீதுகளும் அதில் இருந்தன. அந்தக் குறிப்புகளும் போய்விட்டன. இதனால், எனக்கும் விஜயாவுக்கும் மனஸ்தாபம் உண்டானது உண்மைதான்."

''செல்லையா உனக்கு விரோதமாக மாறி விட்டானே! அவன்தான் விஜயாவை முதன் முதலில் உனக்கு அறிமுகப்படுத்தினவனு ?''

''இல்லை. அவன் ஏற்கனவே எங்கள் வீட்டில் வேலை செய்தவன்தான்.....''

''அந்த அறிமுகத்தைச் சொல்லவில்லை. விஜயா இம்மாதிரிப் பெண் என்பதாகக் கூறி அவளிடம் உன்னை வலுவில் அழைத்துச் சென்றிருக்கிறுனு செல்லையா?''

''ஆமாம். எங்கள் வீட்டில் பணி புரியும் போது அவளுடைய இயல்புகளை என்னுல் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனுல் செல்லையா என்னை ஒருமுறை ஹோட்டலில் சந்தித்து விஜயா என்னைச் சந்திக்க விரும்புவதாகக் கூறினுன். எங்கள் வீட்டிலிருந்து அக்கா அவளை வெளியேற்றிய பின் நான் அவளை அன்றுதான் முதன் முதலில் பார்த்தேன். ரொம்பவும் சகஜமாக, கொஞ்சம் ஃப்ரீயாகவே பழகினுள்.''

''வேறு விதமாக அவளுடன் நீங்கள் தொடர்பு கொண்டதுண்டா?''

''உண்டு.''

''அவளை விவாகம் செய்து கொள்வதாக நீங்கள் கூறியதுண்டா?'':

''இல்லை.... நான் அப்படிக் கூறியதும் இல்லை; அவள் இவ்விஷயமாக என்னிடம் கேட்டதுமில்லை. விவாகம் அவளுக்கு ஒரு பொருட்டல்ல என நான் யூகித்தேன். இதையெல்லாம் எதற்காகக் கேட்கிறீர்கள்?''

''அவள் எப்படிப்பட்ட பெண், அவள் உன்னுடன் கொண்ட தொடர்புகளின் தன்மைகள் எப்படிப்பட்டவை, அவள் நடத்தை எப்படிப்பட்டது என்பதை முடிவு செய்து கொள்ளத்தான். ஒருவேளை இவை நமது வழக்குக்குப் பயன்படுவதைவிட, போலீஸ் தரப்புக்குப் பயன்படுவதாயிருக்கலாம். அதை நாம் யூகித்து அதன்படி நமது வழக்கை ஜோடிக்கலாம். நீ சொல்வதிலிருந்து அவள் நடத்தை அப்படி யொன்றும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதாக இல்லை. ஒழுக்கமற்றவள் என்றுதான் தோன்றுகிறது இல்லையா? நீ என்ன நினைக்கிறுய்?''

துரைராஜ் மௌனமாகத் தலைகுனிந்து கொண்டு விட்டான்.

வழக்கின் போக்கு ரொம்பவும் கடினமாக இருந்தது. போலீஸ் தரப்பில் புதுப் புது விஷயங்களைப் புகுத்தித் துரைராஜை ஒரு கொலைகாரனுக்க முயன்றனர்.

துரைராஜின் வக்கீலுக்கு, துரைராஜ் கொலை செய்திருக்க மாட்டான் என்கிற அளவுக்கு நம்பிக்கை உண்டானுலும், அதை நிரூபிக்க அவர் கையாண்ட உத்திகள் வலுவுள்ளதாக அமையவில்லை. அவர் செல்லையாவைக் குறிவைத்தபோதெல்லாம் போலீஸ் தரப்பில் கூறப்பட்ட கத்தி, கைரேகை, துரைராஜ்

கால

மாறுபாடு!



அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் டல்லஸ் ஒரு சமயம் சூ என் லாயின் கையைக் குலுக்க மறுத்தார்.

இப்பொழுது அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன் சூ என் லாயின் கோட்டைக் கழற்றி உதவுகிறார்!

ஹிந்துஸ்தான் டைம்ஸ் - கே. ஆர்.

விஜயாவுடன் கொண்ட தொடர்பு—அவளது கர்ப்பம் ஆகியவையெல்லாம் அக்குறியைத் திசை திருப்பி விட்டன. வழக்கின் போக்கு ரொம்பவும் கடுமையாக இருந்தது. துரைராஜின் விடுதலை என்பது ரொம்பத் தூரத்தில் இருப்பதாகத் தோன்றியது எல்லோருக்குமே!

"அவருக்காக நான் எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் காத்திருப்பேன் அக்கா! அவர் என்னை ஒருவேளை வெறுத்துவிட்டால் கூட உங்களைத் தனியே விட்டு விட்டு நான் போக மாட்டேன்" என்றாள் திலகம்.

"அவனுக்காகக் காத்திருக்கிறேன் என்கிறாயே, அது உன் இஷ்டம். அதைப் பற்றி நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. அது உன் மனோதிடத்தையும், பரிசுத்தமான அன்பையும் காட்டுவதாக இருக்கிறது. எனக்கு. என்னை விட்டுப் போக மாட்டேன் என்றாயே, அது உன்னுடைய தியாக உணர்வையும், நன்றி உணர்வையும் காட்டுகிறது. இந்த வார்த்தைகள்தான் நொந்து போன என் நெஞ்சைத் தாக்கி நிறுத்துகிறது" என்று கூறித் திலகத்தின் கைகளைத் தன் கண்களில் புதைத்துக் கொண்டு கண்ணீர் விட்டாள் பாக்கியம்.

தீர்ப்பு யாரும் எதிர்பாராத வகையில் இருந்தது. "துரைராஜின்மேல் கொலைக் குற்றம் சரியாக நிரூபிக்கப்படவில்லை. இக் கொலையைத் துரைராஜ் செய்திருப்பான் என்று சொல்ல ஒரு சாட்சியாரும் உதவவில்லை. போலீஸ் தரப்பில் பன்னிரண்டு சாட்சிகளும் முன்னுக்குப் பின் முரணான வகையிலேயே சாட்சியமளித்திருக்கின்றனர்" என்று கூறி அவனை விடுதலை செய்து விட்டார் நீதிபதி.

"எங்கே கிளம்பி விட்டீர்கள்?"

தோட்டத்துக்குள் நுழைந்த திலகம், ரமணன் ஒரு சிறு கைப்பையுடன் வாசலில் நிற்பதைப் பார்த்துவிட்டுக் கேட்டாள்.

திலகத்தையே சிறிது நேரம் உற்றுப் பார்த்தான் ரமணன். அந்தப் பார்வை அவனிடம் புதிது திலகத்துக்கு. அந்தப் பார்வையில் பல அர்த்தங்கள் தோன்றின. முன்பிருந்த அப்பாவித்தனத்துக்குப் பதில் ஏதோ ஓர் உக்ரம் இருப்பது போல உணரவே, கேள்வியைக் கேட்டவள் அதற்கான பதிலை அவனிடமிருந்து எதிர்பார்க்காதவளாகத் திரும்பிக் கொண்டிருந்தாள்.

"திலகம்!"

ரொம்பவும் அழுத்தமாக அழைத்தான் ரமணன். அந்த அழைப்பில் இருந்த அழுத்தம்கூடப் புதியதுதான். திலகம் நின்று திரும்பிப் பார்த்தாள்.

அருகில் வரும்படி தலையை மட்டும் ஆட்டினான் ரமணன். அந்தத் தலையாட்டலில்கூட ஏதோ ஓர் அதிகத் தன்மை இருப்பதாகப் பட்டது அவளுக்கு.

"பயப்படாமல் வரலாம்."

'இதென்ன.... பேச்சு, பார்வை, சங்கேதம், அழைப்பு எல்லாமே இப்படி மாறுபடுவானேன் ?' குழப்பத்துடன் அருகில் சென்று முன் குறட்டில் ஏறி வராந்தாவில் நின்றாள்.

"இந்தா, இந்த வீட்டின் சாவியை வாங்கிக்கொள். நான் வீட்டைக் காலி செய்து விட்டேன். நான் இந்த வீட்டுக்கு எதற்கு வந்தேனோ அந்த வேலை முடிந்து விட்டது" என்றான்.

"என்ன வேலை?"

"என்ன வேலையா? விஜயாவை..."

"விஜயாவை... நீங்கள்....?"

ரொம்பவும் அலட்சியமாக நகைத்தான் ரமணன்.

"நான்தான். இதற்கு எத்தனை நாட்கள் திட்டம் போட்டேன் தெரியுமா?... இரண்டு ஆண்டுகள்.... அந்த வெறி நாயைக் கொல்ல எனக்கு இரண்டு ஆண்டுகள் தேவைப்பட்டன. அவளைக் கொன்றுவிட்டு நான் ஜெயிலுக்குப் போக விரும்பலை. தண்டனை அநுபவிக்கவும் விரும்பலை.... ஏன் தெரியுமா ? அப்படி நான் தண்டனை அனுபவித்தால் நான் தோல்வி அடைந்தவனாகி விடுவேன் என்பதால்தான்."

"அடப் பாவி!"

ரமணன் மௌனமாக உடல் குலுங்க நகைத்தான்.

" அவளால் என்னோட குடும்பமே இரண்டுபட்டு அழிந்துவிட்டது, திலகம். உயிருக்குயிரான என் தங்கையை நடத்தைகெட்டவள் என்று சொல்லித் தற்கொலை செஞ்சுக்க வெச்சுட்டா... ஏன் அப்படிச் சொன்னாள், தெரியுமா? விஜயா மற்றொரு ஆடவனுடன் சேர்ந்திருப்பதை என் தங்கை பார்த்துவிட்டாள். நான் அதைக் கேட்கப் போய் என் தங்கைமேல் அப்படிப்பட்ட பழியைச் சுமத்தி, கல்யாணத்துக்கு வரன் குதிர்ந்த நேரத்தில் அதைக் கெடுத்து, என் தங்கையைக் கொன்றவள் இவள். அதற்கு உண்டான தண்டனையை இவள் அநுபவிக்காமல் தப்பிட்டா! கட்டின புருஷன் ஏழையாக இருந்தான் என்பதற்காக அவனை உதாசீனம் செய்தாள். அவனுடைய ஏழைமையை ஏளனம் செய்தாள். அதைக்கூட அவன் பொறுத்துக் கொண்டு விட்டான். அவனுக்கு முன்னாலேயே அவள் நெறிதவறத் தொடங்கினாள்! அவனை அவள் ரொம்பச் சாதாரணமானவனாகப் பாவிக்கத் தொடங்கிச் சில அநுசிதமான நடவடிக்கையில் பொருள் சேர்க்கலாம் என்று துணிந்து விட்டாள். அவள் கணவன் அதைத் தடுத்தான். அவனை உதறிவிட்டு ஒரு நாள் அவ

ளிடமிருந்து ஓடிவிட்டாள். இதனால், அக் குடும்பம் எவ்வளவு வேதனைப்பட்டது தெரியுமா ? அவள் ஓடிப் போனபின் ரொம்ப நாட்கள் கழித்து, அவள் இருப்பிடம் தெரிந்து அவள் கணவன் அவளை அழைக்கப் போனான். அவள் காலில் விழாத குறையாக அவளிடம் மன்றாடினான். அவனை அவள் என்ன செய்தாள் தெரியுமா ? புதிதாக அவள் அன்பைப் பெற்றிருந்த ஒருவனைக் கொண்டு உதைத்து விரட்டச் சொன்னாள்.

''ஒரு சந்தர்ப்பத்தில் அவனை அவள் எவ்வளவு கேவலமாகப் பேசி விரட்டினாள் தெரியுமா? அவன் அவமானகரமான உருவம் கொண்டவனாம். ரொம்பவும் குந்தமாம். கூனனாம். அவனது . காதுகளில் ஒன்று மற்றொன்றைவிட நீளமாம். அவன் நடப்பதே விகாரமான நடையாம். எவ்வளவு உயர்வான சர்டிபிகேட் பார்த்தாயா?''

திலகம் தன் காதுகளைப் பொத்திக் கொண்டாள்.

'' இவ்வளவு அசிங்கமான பெண்ணா அவள் ? இதையெல்லாம் என்னால் நம்ப முடியவில்லையே.....''

''துரைராஜ் என்னை நடுத் தெருவில் நகைத் திருடன் என்று போலீஸிடம் மாட்டிவிட்டானே, அதைப் பொறுத்துக் கொண்டேனே, ஏன்? உங்கள் முன்னால் என்னை அடி அடி என்று அடித்துத் துவைத்தானே, அதையும் பொறுத்துக் கொண்டேனே, ஏன் ? எனக்கு உணர்ச்சி இல்லையா ? மான அவமானமில்லையா? எல்லாம் உண்டு. என் திட்டம் நிறைவேற வேண்டும் என்பதற்காக இந்தச் சாதாரணமான அவமானங்களை யெல்லாம் பொறுத்துக் கொண்டேன். ஏன் தெரியுமா? நான் இங்கே இருக்க வேண்டுமென்பதற்காக மட்டுமில்லை. என் லட்சியம் ஈடேற இந்த இடம் ரொம்பவும் உதவியாக இருந்தது. துரைராஜின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதன்மூலம் விஜயாவின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பது எனக்குச் சுலபமாக இருந்தது. எனக்கும் உனக்குமோ, எனக்கும் பாக்யத்தம்மாளுக்குமோ எவ்வித விரோதமுமில்லை. எனக்கும் விஜயாவுக்கும் நடுவில் அவனாக வந்து விழுந்து மாட்டிக் கொண்டால் நான் என்ன செய்ய முடியும்?

''உன் உயர்வான எண்ணம் சிதையும்வண்ணம் நான் எதுவும் செய்யவில்லை. என் குடும்பத்தின் அழிவிற்கும், அவள் கணவனின் நல்விதயம் பாழடைந்ததற்கும் காரணமான வளைப் பழி வாங்கியதன் மூலம், பாக்யத்தம்மாளின் குடும்பம் நிர்மூலமாவதையும் தடுத்திருக்கிறேன் என்பதை மறந்து விடாதே. நான் கொடுத்த அதிர்ச்சி மூலம் அந்த உதவாக்கரை துரையைத் தன் தவறுகளை உணர வைத்து உனது அன்பான இதயத் தூய்மையையும் உணரும்படி செய்திருக்கிறேன்.... இதற்கு இன்று இல்லாவிட்டாலும் ஒருநாள் என்னை வாழ்த்துவாய். இன்று என்னவோ நான் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொண்டுவிட்டதாக நீ நினைக்கலாம். எனக்கு இது ஒரு தாற்காலிகமான ஆசை. இந்த அற்பமான மன ஆசை என்று நிறைவேறுமோ, அன்று நானே என்னை முடித்துக்கொண்டுவிடுவேன்.''

திலகம் பிரமையின் பிடிப்பில் செயலற்றுச் சற்றுத் தள்ளியே நின்று கொண்டிருந்தாள். பணிவுடனும் அடக்கத்துடனும் இருந்து இருந்து இலேசாகக் கூன் விழுந்த தன் உடம்பையும், தன் கோணலான வலது கை ஒன்றையும் பார்த்துக் கொண்டு இலேசாக நகைத்தான். ஒன்றைக் காட்டிலும் பெரிதாயிருந்த மற்றொரு காதை ஒரு தடவை இழுத்து விட்டுக் கொண்டான். அவன் கண்களில் சோகத்தின் தேக்கம் இருந்தது. ஆனால், கண்ணீரின் தேக்கம் இல்லை. 'நான் அழமாட்டேன்' என்பதுபோல் அவன் கண்கள் கட்டுப்பாடாக இருந்த மாதிரி தோன்றியது.

''நான் பயந்தபடி எதுவும் நடக்கவில்லை. விடுதலையாகி வெளியில் வந்தது முதல் துரைராஜ் வீட்டை மற்றொரு சிறையாக எண்ணிக் கொண்டுவிட்டான் என்று நினைக்கிறேன். யார் கண்ணிலும் படுவதில்லை. தன் முன் வரவே அவன் வெட்கப்படுவதாக பாக்கியத்தம்மாள் சொன்னாள். ஒரு நல்ல திருப்பம். நான் போய் வருகிறேன். என்னைப்பற்றி நீ யாரிடம் வேண்டுமானாலும் சொல்லலாம். அது உன் இஷ்டம். அவனுக்காக ஆடோமோபைல் வொர்க் ஷாப் ஒன்று வைத்துக் கொடுக்க நீ முயன்று கொண்டிருப்பதும் எனக்குத் தெரியும். உன்னுடைய திட்டமிட்ட நடவடிக்கைகள் அவனை நல்ல மனிதனாக மட்டுமல்ல ; ஒரு பொறுப்புள்ள கணவனாகவும் மாற்றும். அது ஒரு நல்ல திருப்பந்தானே!'' என்று கூறிவிட்டு, தன் அருகில் வர அஞ்சித் தூரவே நிற்கும் அவள் மேல், பூட்டிய அவுட்ஹவுஸின் சாவியை வீசி எறிந்தான். அதை அவள் பிடித்துக் கொண்டாள். அவன் பையுடன் நடந்தான்.

அவன் நடையில் ஆண்மைக்குரிய கம்பீரம் இல்லை. விஜயா நினைத்தபடி கொஞ்சம் விகாரமான நடைதான் !



'' சே ! 'நித்திரை செய்வது எப்படி?' என்ற முத்திரை காட்டியது தப்பாப் போச்சே?''



பசியைப் பெருக்குவதோடு நின்றுவிடும் எந்த டானிக்கும் பாதிவேலையைத்தான் செய்யும்
*
இன்க்ரிமின் பெறுவீர்..
உண்ணும் மிகையான உணவை
ஓங்கிய வளர்ச்சியாக மாற்றும்
*
சேருவீர் இன்க்ரிமின் இனத்தோடு...
வளர்ச்சிக்கான பசியைப் பெறுவீர் வளமுடனே!
பசியைப் பெருக்குவதோடு மட்டுமின்றி, உண்ணும் மிகையான உணவை ஓங்கிய வளர்ச்சியாக மாற்றுகிறது இன்க்ரிமின் டானிக். காரணம், உங்கள் குழந்தை சாப்பிடும் புரத சத்துக்களை மேம்படப் பயன்படுத்திக்கொள்ளும் அதிமுக்கியமான அமினோ அமிலம் அதில் அடங்கியுள்ளது.
பெரிய குழந்தைகளுக்கு இரும்புச்சத்து அடங்கிய ▸ இன்க்ரிமின் ஸிரப் — 175 மி.லி & 57 மி.லி. இளங் குழந்தைகளுக்கு இன்க்ரிமின் டிராப்ஸ் — 10 மி.லி.
Incremin syrup
* இன்க்ரிமின்
டானிக்
* அமெரிக்கன் ஸயானமிட் கம்பெனியின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.
Lederle
எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கின்றன.
லின்டாஸ்-INC. 21-480 TM



வணக்கம் சௌக்கியமா?

இரு இல்லத்தரசிகளின் சந்திப்பு

இவ்வாரம் உரையாடலில் பங்கு கொள்வோர் :

ஸ்ரீமதி விசாலாட்சி ராமநாதன்
ஸ்ரீமதி சுபத்ரா தண்டாயுதபாணி பிள்ளை

(அபிராமபுரம் நான்காவது தெரு. 'நாட்டிய கலாலயம்' என்ற பெயர்ப் பலகையுடன் காணப்படும் நடனப்பள்ளி. நடன ஆசிரியர் கே. என். தண்டாயுதபாணி பிள்ளையின் மேற்பார்வையில் ஓர் இளம் பெண் தாளம் தட்ட, நாட்டிய உடைகளுடன் மாணவிகள் பம்பரமாகச் சுழன்று ஆடிக் கொண்டிருந்தார்கள்.

அச்சமயம் சங்கீத வித்துவான் திரு எம். டி. ராமநாதன் தமது மனைவியுடன் வந்து சேர்ந்தார்.

ஸ்ரீமதி சுபத்ரா ஸ்ரீமதி விசாலாட்சியை வேறு அறைக்கு அழைத்துப் போய் அன்புடன் உபசரித்து அமரச் செய்தார்.)

ஸ்ரீமதி சுபத்ரா தண்டாயுதபாணி பிள்ளை: இன்று உங்கள் கணவர் கலாக்ஷேத்திரத்துடன் தொடர்பு கொண்டிருப்பது போலவே என் கணவரும் கலாக்ஷேத்ராவில் ஏழு எட்டு வருஷங்கள் நாட்டிய ஆசிரியராக இருந்தவர்தான்.

ஸ்ரீமதி விசாலாட்சி ராமநாதன்: தெரியுமே எனக்கு. சற்று முன் காரில் வந்து கொண்டிருக்கும் போதுகூட என் கணவர் பழைய விஷயங்களை ஞாபகப்படுத்திக் கொண்டுதான் வந்தார். சொந்த ஊர் உங்களுக்குத் தஞ்சைக்குப் பக்கமா?

சுபத்ரா: திருவாவடுதுறை.

விசாலாட்சி: அட! நாதஸ்வர சக்கரவர்த்தியாக விளங்கிய ராஜரத்தினம் பிள்ளையின்...

சுபத்ரா: ....தங்கைதான் நான் ! என் கணவருக்குச் சொந்த ஊர் காரைக்கால். என் மாமனார் பிரபல நாதஸ்வர வித்வான் (காரை) நடேச பிள்ளை. அவரிடமே பன்னிரண்டு வயதுவரை இசை பயின்றார் என் கணவர். பிறகு என் சிறிய பாட்டனாரிடம் நட்டுவாங்கம் கற்றார்.

விசாலாட்சி: ஆகா! நல்ல பொருத்தம் போங்கள். நாதஸ்வர சக்கரவர்த்திங்கற பட்டம் பெற்றவரின் தங்கை, 'நாட்டிய சக்கரவர்த்தி' பட்டம் பெற்றவருக்கே வாழ்க்கைப்பட்டிருக்கிறீர்கள் !

உங்கள் கணவருக்கு இந்தப் பட்டத்தை எங்கே, யார் மூலம் தந்தார்கள்?

சுபத்ரா: திருச்சியில்தான், திருமுருக கிருபானந்த வாரியார் கொடுத்தார். மக்கள் திலகம் எம். ஜி. ஆர். தலைமை வகித்தார். சுமார் இரண்டு லட்சம் மக்கள் கூடியிருந்த கூட்டத்தில் தரப்பட்ட பட்டம்.

விசாலாட்சி: எப்படி உங்கள் மாமனாரிடம் உங்க வீட்டுக்காரர் இசை பயின்றாரோ, அதே போலத்தான் என் வீட்டுக்காரரும், தேவேச பாகவதரிடம் இசை பயின்றவர். பிறகு கலாக்ஷேத்ராவில், டைகர் வரதாச்சாரியாரின் மாணவரானார். எட்டு வயசிலேயே இவர் பக்கவாத்தியங்களுடன் பள்ளிபுரம்





திரு தண்டாயுதபாணி திரு ராமநாதன்

சாஸ்தா பூஜையில் முதல் கச்சேரி செய்தாராம்....

சுபத்ரா: நிஜமாகச் சொல்லுங்க... பெண் பார்க்க வந்தபோது பிள்ளை வீட்டார் என்னை பாடச் சொன்னார்கள்? மாப்பிள்ளை சங்கீத வித்வான் எனத் தெரிந்து பாடப் பயந்தீர்களா?

விசாலாட்சி: 'நாம்தான் மேடை ஏறிப் பாடப்போகிறோமே, நம்ம திருகலக்ஷ்மியின் பாட்டுக்குப் பரீட்சை வைக்கணுமான்னு நினைத்தாரோ என்னமோ தெரியாது! அவர் பெண் பார்க்க வந்தபோது நான் பாடவுமில்லே; பிள்ளை வீட்டார் பாடச் சொல்லவுமில்லே!

நாட்டியத்தைப் பொதுவாகப் பெண்கள்தான் விரும்பிக் கற்கிறார்கள். காலில் சலங்கை கட்டிக்கொண்டு மேடை ஏறிய ஆண்கள் யாராவது உண்டா?

சுபத்ரா: அடையாறு லக்ஷ்மணன் – ராமன், பசுபதி, சந்திரசேகரன் ஆகியோர் நாட்டியமும் நட்டுவாங்கமும் கற்று, இன்று பல மாணவிகளுக்குப் பயிற்சி தருகிறார்கள். ஆண்களில் ஒருவர் இஞ்சினியர் ராமமூர்த்தி வேலை பார்த்தபடி நாட்டியமும் கற்று, மேடை ஏறி அற்புதமாக ஆடினார்!

ஸ்ரீ ராமகிருஷ்ண கிருபா அமெச்சூர் குழுவினர் 'கல்கி'யின் சிவகாமியின் சபதத்தை நாடகமாக்கி நடித்தனர் - பல வருஷங்களுக்கு முன்னால். அதில் வந்த இஞ்ஜினீயர் ராமமூர்த்தி சிவகாமி வேடம் போட்டு, மேடையில் ஆடி

னதைக் கண்டு அசந்து போனார்கள் பலர். அவர் என் கணவரின் மாணவர்தான்! அது சரி, உங்கள் கணவர் சாதகம் பண்ணுவதற்கு என்று நேரம் ஒதுக்கிக் கொள்வதுண்டா?

விசாலாட்சி: எந்த நேரமும் அவருக்கு இசை பற்றிய ஞாபகம்தான். ஏதாவது வேறு காரியம் வந்து சேர்ந்தாலொழிய மெல்லிய குரலில் சுரம் பாடிக் கொண்டேதான் இருப்பார். கற்பனைகளில் சஞ்சரித்தபடிதான் இருப்பார்.... உங்கள் கணவர் பத்மஸ்ரீ பட்டமும் பெற்றிருக்கிறார் இல்லையா?

சுபத்ரா: ஆமாம், பத்மஸ்ரீ பட்டம் நாட்டியக் கலைஞர்களில் முதலில் இவருக்குத்தான் வந்தது. அப்போது ஜனாதிபதி கிரியிடம் பட்டம் வாங்கியபிறகு, பிரதமர் இந்திரா காந்தியுடன் பேசும் பாக்கியமும் எங்கள் குடும்பத்துக்குக் கிடைத்தது. இன்னும் எத்தனையோ பெரிய மனிதர்களிடம் பேசும் வாய்ப்பையும் இந்தக் கலை எங்களுக்கு அளித்திருக்கிறது. ராணி எலிஸபெத்தின் கணவர் ஃபிலிப் கோமான், மௌண்ட்பாட்டன் பிரபு, ஜனாதிபதிகளாக இருந்த டாக்டர் ராதாகிருஷ்ணன், ஜாகிர் ஹுசேன் ஆகியோரைக் கண்டு பேசியிருக்கிறார். இந்தப் பெருமையெல்லாம் பரதக் கலையினால் கிடைத்தது தானே என்பார். எல்லாம் சாட்சாத் நடராஜப் பெருமானின் கடாட்சம்தான்...

நாட்டியக் கலை பயிலும் மாணவ—மாணவிகளுக்காக இப்போது ஒரு புத்தகம் எழுதி வருகிறார்.

விசாலாட்சி: அப்படியா, ரொம்ப நல்ல சேதிதான். என் கணவர்கூடத் தமிழ், சம்ஸ்கிருதம், தெலுங்கு, மலையாள மொழிகளில் பாட்டு எழுதி வருகிறார். சாகித்தியத்துக்கு மட்டும் 'வரததாசன்' என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கிறார்.... நடனக் கச்சேரிகளை யொட்டி அடிக்கடி உங்கள் கணவர் வெளியூர் போய்விடுவாரே, நீங்களும் உடன் செல்வதுண்டா?

சுபத்ரா: அபூர்வமாகத்தான் போவேன். நல்லபடியாகத் திரும்பி வரவேண்டுமே என்று கவலைப்பட்டுக் கொண்டு உட்கார்ந்திருப்பது தான் அதிகம். ஒரு சமயம் பாருங்கள், மைசூர் பக்கம் வைஜயந்திமாலா குழுவினரோடு ஒரு கல்யாண நடன நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தார். திருமணமான மறுநாள் ஸ்டேஷன் வாகனில் என் கணவரும் மற்றக் கலைஞர்களும் இருந்தார்கள். வைஜயந்திமாலா தனிக் காரில் மைசூர் போய்விட்டார்.

கல்யாண மாப்பிள்ளையே உற்சாக மிகுதியால் ஸ்டேஷன் வாகனை ஓட்டி வந்தாராம். மலைப் பாதை வழியாகக் கார் வரும்போது மாலை நேரத்தில் கார் தடம் புரண்டு உருண்டு கீழே விழுந்து விட்டதாம்... அந்தக் காரில் வந்த பத்துப் பேர்களில் மூன்று பேர்களே உயிர் தப்பினார்கள். அந்த மூவரில் என் கணவரும் ஒருவர்!

மலைப்பிராந்தியத்தில் யாரோ ஓர் ஆள், தவித்த என் கணவருக்கும் மற்றவருக்கும் குடிக்கப் பால் கொடுத்து உதவினார். பத்திரிகைகளில் செய்தி வந்து எங்கள் குடும்பத்தை நடுநடுங்க வைத்துவிட்டது. அன்று முதல் இவர் வெளியூர் போனாலே எனக்குப் பயமும் கவலையும்தான்.

விசாலாட்சி: மனசைக் கலங்க அடித்த நிகழ்ச்சியைச் சொன்னீர்கள். சந்தோஷமளித்த விஷயம் ஏதாவது சொல்லுங்கள். கேட்டுவிட்டுப் புறப்படுகிறேன். நேரமாகிறது.

சுபத்ரா: சில வருஷங்களுக்கு முன்னால் நடந்தது. திருவாங்கூரில், அரண்மனையில் நடக்கும் விஜயதசமி விழாவில், எம். எல். வசந்தகுமாரி அவர்களின் மகள் குமாரி ஸ்ரீவித்யா நடனமாடிக்கொண்டிருந்த சமயம்.

மேடையில் உட்கார்ந்து என் கணவர் ஜதி சொல்ல ஆரம்பித்தபோது பிரபல வித்வான்கள் முன் வரிசையில் இருந்து ரசித்தார்களாம். செம்மங்குடி, ஆலத்தூர், செம்பை, பாலக்காடு மணி அய்யர் ஆகியோர்.

பாலக்காடு மணி ஐயர் தாளம் போட ஆரம்பித்ததைக் கண்டு, ஜதி ஸ்வரங்களில் என் கணவருக்கு விறுவிறுப்பு ஏற்பட்டுவிட்டது. பாலக்காடு மணி ஐயர் எழுந்து நின்றே தாளம் போட ஆரம்பித்து விட்டார். போட்டியாவது, போட்டி!... மேடையில் நாட்டியம் ஆடாமல் குமாரி ஸ்ரீவித்யா நின்றுவிட, மணி ஐயரும் சளைக்காமல் தாளம் போட, இவர் ஜதி சொல்லிக் கொண்டிருந்தார். சபையோர் திகைத்து விட்டார்களாம்...

திருவாங்கூர் ராணி அவர்கள் முடிவில் ''என்ன நாட்டியக் கலைஞர் தாளம் தப்பாமல் ஜதி சொன்னாரா?'' என்று கேட்டாராம், மணி ஐயரிடம். எல்லோரும் மகிழ்ந்து போனார்களாம்.

'நந்திதேவரே நேரில் வந்து தாளம்போட்ட மாதிரி இருந்தது எனக்கு. மறக்க முடியாத அனுபவம்' என்று இவர் அடிக்கடி சொல்வார்.

விசாலாட்சி: எல்லா மேன்மைகளும் இருந்தும், வீட்டில் தவழ்ந்து விளையாட ஒரு பாலன் இல்லை உங்களுக்கு. எனக்கு மட்டும் என்ன, அது ஒன்றுதான் குறை!

ஈசன் கண் திறந்து அந்தப் பாக்யத்தை நம்மிருவருக்கும் அளிக்க வேண்டும்!... ஏழு மணிக்கு இங்கே வந்தோம். மணி எட்டாகிறது. ஒரு மணி நேரமாக 'டான்ஸ் ஹால்' நடந்த இடத்திலேயே அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள்... நம்மை இங்கே உட்கார வைத்துவிட்டு!

(இந்தக் கட்டத்தில் சொல்லி வைத்தாற் போல் திரு எம்.டி.ராமநாதனும், திரு கே. என். தண்டாயுதபாணி பிள்ளையும் ஹாலுக்கு வருகை தந்தனர்.

திரு தண்டாயுதபாணி பிள்ளை, திரு ராமநாதனிடம் டைகர் வரதாச்சாரியார் தமக்கு எழுதித் தந்த சர்ட்டிபிகேட்டை - கண்ணாடி போட்டு மாட்டியிருந்ததை - எடுத்துக் காட்டினார்... திரு ராமநாதன் அதைப் படிக்கும் போது திரு தண்டாயுதபாணி தம் மனைவியைப் பார்த்துப் பேசினார்.)

தண்டாயுதபாணி: சுபத்ரா! ரொம்பப் பெரிய பாக்கியம் இவருக்கு! டைகர் சார் உடம்பு சுகமில்லாமல் படுக்கையில் இருந்த போது, தம் மாணவரான இவரிடம் ஹரி காம்போதியில் தியாகராஜ ஸ்வாமிகளின் 'எந்தரானி' பாடச் சொன்னார். பாட்டைக் கேட்டு முடித்த கொஞ்ச நேரத்தில் டைகர் வரதாச்சாரியார் சாந்தியடைந்தார்.

(அப்பாட்டையே அப்போது ராமநாதன் இரண்டடி பாடினார். மேலே பாட முடியவில்லை.)

உரையாடல் தொகுப்பு: **ஏ. சுவாமிநாதன்**



அரியணையில் அழகு தமிழ்

தமிழக அரசின் அலுவலகங்களில் பணியாற்றும் உத்தியோகஸ்தர்கள் பலர் தமிழை ஆட்சி மொழியாகக் கொள்வதில் பல இடர்ப்பாடுகளைக் காணுகிறார்கள். தமிழில் சொல்ல வருவதில்லையே என்று ஏங்குகின்றனர். இதை வெளிப்படப் பேசினால், பொதுமக்களில் பலர், 'இந்த உத்தியோகஸ்தர்களுக்குத் தமிழ் உணர்ச்சியோ, பற்றோ கிடையாது' என்று குறைகூறுகிறார்கள்.

நாம் சென்ற நூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேலாக அந்நிய ஆட்சியில் அடிமைப்பட்டுக் கிடந்துவிட்டதால் தமிழ் வளர்ச்சி ஓரளவு தடைப்பட்டுவிட்டது என்பது உண்மையே யானாலும் பல நுட்பமான கருத்துக்களை, மனோபாவங்களை வெளியிடத்தக்க மொழி தான் அது. பல ஆயிரம் வேர் சொற்கள் கொண்ட மொழி. ஆகவே, பல புதிய சொற்கள் தமிழ் மரபுக்கும் காதுக்கும் ஒத்த முறையில் உண்டாக்க வாய்ப்பளிக்கும்.

''எது தமிழ் ?'' என்ற கேள்விக்கு, ரசிகமணி டி. கே. சி. அவர்கள், ''தமிழன் நாக்கில் புகுந்துவிட்ட சொல், தமிழ்'' என்பார். ''எழுத்து வாசனையற்ற பாமர பட்டிக்காட்டான், சர்வசகஜமாக ரயில்வே ஸ்டேஷன், பஸ் என்று பேசத் தொடங்கிவிட்டானாகில் அவை தமிழ்ச் சொற்களே'' என்பார். இப்படி எத்தனையோ வேற்றுமொழிச் சொற்களைத் தமிழ் மக்கள் தங்களது ஆக்கிக் கொண்டு விட்டார்கள். இவற்றை அப்படியே விட்டு விட்டு மற்றச் சொற்களைத் தமிழாக்க முயல்வதே அறிவுடையதாகும். அதுதான் மொழி வளர்ச்சிக்கு உகந்த வழியாகும்.

சாதாரணமாகக் கிராமங்களில் கூட மக்கள், ''இன்றைக்கு எக்ஸ்பிரஸ் பஸ் வருவதற்கு நேரமாகும் போலிருக்கிறதே!'' என்று சொல்வார்கள். அதனை ''விரைவு பேருந்து'' என்று சிரமப்பட்டு மொழிபெயர்த்துக் காலத்தை விணடிக்க வேண்டியதில்லை.

ஆங்கில மொழி பல்லாயிரக்கணக்கான வேற்று மொழிச் சொற்களைத் தனதாக்கிக் கொண்டதன் விளைவாகவே இன்று சக்தி மிக்க மொழியாக இருக்கிறது! இன்றைய விஞ்ஞான உலகில் தினம் நூறு கண்டுபிடிப்புக்கள் நிகழும் போது அவற்றையெல்லாம் மொழி பெயர்த்துக் கொண்டிருக்க முடியுமா? உதாரணமாக ஆகாய விமானத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் டக்கோடா, காரவெல், ஜெட், ஜம்போ ஜெட், வைபர், நாட் என்றிப்படிப் பல வகை விமானங்கள் வந்து விட்டன! இவற்றையெல்லாம் ஒருவர் மொழிபெயர்த்துக் கொண்டிருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதைவிட வீண் கால விரயம் இருக்க முடியாது. அவ்விமானங்களின் பெயர்களை அப்படியே உபயோகப் படுத்துவதுதான் புத்திசாலித்தனம். ஏனெனில், மொழிபெயர்ப்பு முடிவதற்குள் அவ்விமானம் மறைந்து புது வகை விமானம் வந்துவிடும் !

இத்தகைய சூழ்நிலையில் தமிழார்வம் மிக்க திரு சோ. முத்துப்பிள்ளை அவர்கள், அரியணையில் அழகு தமிழ் என்று சுவை மிக்க ஒரு நூலை வழங்குகிறார். தமிழக அரசு அலுவலகங்களில் கையாளப்படும் பல ஆங்கில வார்த்தைகளுக்குத் தமிழ் மொழிபெயர்ப்புச் சொற்கள் எப்படி வந்தன என்பதை ருசிகரமாக விளக்குகிறார். இருப்பினும் ஆங்கிலச் சொல் குறிக்கும் அத்தனை பொருளும் தமிழ்ச் சொல் குறிக்கிறதா என்ற சந்தேகம் எழலாம். இப்படிப் பல இடர்ப்பாடுகளைக் கடந்து தான் நல்ல தமிழ்ச் சொல் கிடைக்கும்.

ஓரிடத்தில் ஆசிரியர் குறிப்பிடுகிறார் : ''**Maiden attempt** என்பதற்குக் 'கன்னி முயற்சி' என்று எழுதி முடித்தார்; கன்னியர் இம்மொழிபெயர்ப்பைக் கண்டு களிப்பெய்த மாட்டார்கள் என்பது திண்ணம். முதல் முயற்சி என்று சொன்னால் தான் கருத்துக்கு ஒத்ததாக இருக்கும்.''

ஆனால் ராமன் முதல் போர் நிகழ்த்தித் தாடகையை வதம் செய்ததைக் 'கன்னிப் போர்' என்றே குறிப்பிட்டிருக்கிறான் கம்பன் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ! ஆகவே ''கன்னி முயற்சி'' நல்ல தமிழாக்கமே.

பல ஆங்கில வார்த்தைகளுக்கு எளிய தமிழ்ச் சொற்கள் இருக்க அவற்றை விடுத்து, பொருத்தமற்ற சொற்களை உபயோகிக்குமாறு யோசனை கூறுகிறார் நூலாசிரியர். உதாரணமாக, **'Secret, top secret'** என்ற சொற்களுக்கு 'இரகசியம்' 'மிக முக்கிய இரகசியம்' என்பன இருக்க ஆசிரியர் முறையே, 'மறை பொருள்', 'பூட்டகம்' என்ற சொற்களை உபயோகப்படுத்தினால் என்ன என்கிறார். இன்று 'மறை' என்பதற்குச் சாதாரணத் தமிழன் பொருள் கொள்வது வேதத்தை. மறைபொருள்: வேதப்பொருள் என்றுதான் அர்த்தம் செய்து கொள்வான். ஆசிரியர் இவ்வளவு உயர்ந்த பொருள் தரக்கூடிய சொல்லை அரசாங்க அலுவலகத்தில் வரும் இரகசியம் என்ற வார்த்தைக்குப் பதிலாகச் சிபாரிசு செய்வானேன் என்பது புலப்படவில்லை.

இந்நூலாசிரியர், தமிழக அரசு அலுவலர்களுக்கு, சர்க்கார் காரியாலயங்களில் வழங்கும் ஆங்கிலச் சொற்களுக்குச் சரியான தமிழ்ச் சொற்களைப் பயிற்றுவிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த காலத்தில் தமக்கு ஏற்பட்ட அநுபவங்களை இந்நூலில் சுவைபட விளக்குகிறார்.

கிடைக்குமிடம்: திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை–1 விலை: ரூ1-50.



அகதிகளைப் பராமரிப்பதில் கர்னல் ஜாத்ரா என்ற இந்திய அதிகாரி காட்டிய பரிவும் ஆர்வமும் பிரச்னைகள் ஏற்படாமல் பார்த்துக் கொண்டன. சுமார் 30,000 பேர்கள் கொண்ட, அகதிகள் கஷ்ட நிவாரண ஸ்தாபனம் அல்லும் பகலும் பாடுபட்டது. ஆங்காங்கு அகதிகளைக் கொண்ட கமிட்டிகளுக்கு வேலை கொடுக்கப்பட்டது. அகதிக் குழந்தைகளின் படிப்பு, சுகாதாரம், மருத்துவம் உடை போன்றவைகளைக் கவனிக்கும் பொறுப்பை கமிட்டியின் கையில் ஒப்படைத்தார்கள். இதனும் அவர்கள் சோம்பேறிகளாமல் சுறுசுறுப்பாக இருக்க வாய்ப்புகள் கிடைத்தன. இதுதான் அகதி முகாம்களில் பெரும் பிரச்னை தோன்றாமல் இருந்ததற்குக் காரணம்.

ஜெய் பங்களா!

8. வெற்றி கிடைத்தது; ஆனால் வேதனை நீடிக்கும்

நானும் இன்னும் இரு பத்திரிகை நிருபர்களும் சவாரி செய்து கொண்டிருந்த ஜீப் அவ்வப்பொழுது நின்றது. இந்திய — வங்க தேச எல்லைக்கு அருகிலுள்ள பகுதிகளைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்தோம். இடிந்த மண் சுவர்கள், ஒடிந்த மாட்டு வண்டிகள், குவியல் குவியலாக உள்ள மனித எலும்புக் கூடுகள் ஆங்காங்கு மரக்கிளைகளின் மேல் உட்கார்ந்திருந்த கழுகுகள் இம்மாதிரியாக உள்ள இடங்களுக்குத்தான் இந்தியாவுக்கு வந்து ஒன்பது மாதங்கள் அகதிகள் முகாம்களில் தங்கள் காலத்தைக் கழித்தவர்கள் திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

மத்திய அரசு வங்க தேசம் திரும்பும் அகதிகளுக்குக் கையில் கொஞ்சம் பணமும் சில தினங்களுக்குத் தேவையான அரிசி முதலிய பொருள்களும் கொடுத்து அனுப்புகிறது. தங்கள் தலையில் தூக்கிக் கொண்டு வந்தவை தாம் அவர்களுடைய உடைமைகள். சில இடங்களில் வயோதிகர்களைக் காவடிகளில் தூக்கிச் சென்றார்கள்.

வெறும் கட்டாந்தரையாக உள்ள இடங்களில் அவர்கள் என்ன செய்வார்கள்? ஒரு பொக்கைவாய்க்கிழவர் சொன்னார்: ''பாபுஜி, உங்கள் நாட்டுக்கு இந்தக் கட்டை இருக்கும் வரை நன்றி காட்டவேண்டும். எங்கள் பெண்மணிகள் பட்ட துயரம் கொஞ்ச நஞ்சமா? மானத்தைக் காத்துக் கொள்வதற்காக ஓடோடி இந்தியாவுக்குள் புகுந்தோம். உங்கள் மக்கள் தான் எவ்வளவு ஆதரவு காட்டினார்கள்? ஆனால் அதிதிகள் நிரந்தர அதிதிகளாக இருக்க முடியாதே.''

பொதுவாக நம் நாடு, நம் வீடு என்று ஊர் திரும்பும் அகதிகளுக்கு உற்சாகம் இருக்கத்தான் இருக்கிறது. ''எப்படி எங்களுக்குத் தங்கவும் வாழவும் வசதிகள் செய்து கொடுத்ததோ இந்தியா, அதேமாதிரி புனர்வாழ்வுக்கு சர்வதேச அடிப்படையில் ஏற்பாடுகள் கட்டாயம் செய்யும்'' என்றார் ஒரு முகாமில் காரியதரிசியாக இருந்த ஸபாத் என்ற இளைஞர்.

இதை எழுதும் சமயம் 90 லட்சம் அகதிகள் தங்கள் நாட்டுக்குத் திரும்பிவிட்டார்கள். அவர்களைப் பராமரிப்பதில் நமக்குச் சுமார் ரூ. 300 கோடி செலவாகியுள்ளது. இந்தப் பணம் வெகு சிறப்பான முதலீடு. ஏனென்றால் ஆபத்துச் சமயத்தில் அண்ட நிழல் கொடுத்தவர்களுக்கு அகதிகளாக இருந்தவர்கள் கட்டாயம் தேச மனப்பான்மை காட்டுவார்கள்.

☛ அகதிகளின் புனர்வாழ்வு, தொழில்களைத் திரும்பவும் இயக்குவது, உயிரற்ற பொருளாதாரத்துக்கு உயிர் கொடுப்பது வங்கதேச அரசின் முக்கிய பணிகள். ஷேக் முஜிபுர் ரஹ்மான் ஆள்வதற்கென்றே பிறந்தவரைப் போல் வெகு லாகவமாகச் செயல்படுகிறார். அவர் மனப்பான்மை என்னவென்பது தெளிவு: 'இந்தியாவும் ருஷ்யாவும் மிகவும்

மேலே: நேதாஜி ஆராய்ச்சிக் கழக இயக்குனர் ஸிஸிர் கே. போஸ், 'அமார் ஸோனார் பங்களா' என்ற பாடல் அச்சான பட்டுத் துணியை முஜிபுர் ரஹ்மானுக்குப் பரிசாக வழங்குகிறார். இதில் விசேஷம் என்ன வென்றால், அச்சாகியுள்ள அப்பாடல் நேதாஜி தமது கைப்பட எழுதியதன் மறு பிரதியாகும்.
கீழே: பிரதி தினம் பிரதமர் முஜிபுர் ரஹ்மானின் இல்லத்துக்கு வெளியே ஒரு கூட்டம் கூடுகிறது.







கே. ஸ்ரீநிவாசன்

நெருக்கடியான சமயத்தில் தோள் கொடுத்தன. அவை நமக்கு மிகவும் உகந்த நண்பர்கள்; மற்றவர்களுடைய நட்பும் உதவியும் நமக்குத் தேவை.'

உலக நாடுகள் பலவற்றால் மளமள வென்று அங்கீகரிக்கப்பட்டுவரும் வங்கதேசக் குடியரசுக்கு அஸ்திவாரம் 'போன்றவை சணல், தேயிலை உற்பத்தி. எங்கே எங்கே என்று காத்துக்கொண்டிருந்த பிரிட்டன் வங்க தேசத்தில் காலை எடுத்துவைத்து அதன் நாட்டினர் பராமரித்து வந்த தேயிலைத் தோட்டங்களைப் பிடித்துக் கொண்டுள்ளது. வங்க தேசத்தில் இந்தியர்கள் நடத்திய தேயிலைத் தோட்டங்களும்'இருக்கின்றன. ஆனால் இதுவரை அங்கு இந்தியர்கள் திரும்பவில்லை. இதைப் பெரிய குறையாக எடுத்துக் காட்டுகிறது இந்திய வர்த்தக சமூகம்.

இன்டர் கான்டினென்டல் ஹோட்டலில் நான் தினம் தினம் சில புள்ளிகளைப் பார்ப்பது வழக்கம். யதோக்தமாக உடையுடுத்து, காலை ஆகாரம் செய்தவர்கள் வெளியே போவார்கள். யாரைப் பார்ப்பார்கள் என்பது அவர்களுக்குத்தான் தெரியும். மதிய உணவு சாப்பிடும் சமயத்துக்கு ஹோட்டலுக்கு வந்து விடுவார்கள்.

ஸ்ரீ சமர் முகர்ஜி என்ற இளைஞர் தினம் தினம் சாப்பிடும் சமயத்தில் என்னைச் சந்திப்பார். ஏதாவதொரு ஹாஸ்யத் துணுக்கு அவருக்குக் கிடைத்திருக்கும். ஒரு ரசமான துணுக்கு எனக்கு இன்னும் ஞாபகம் இருக்கிறது. கோஷ்டி கோஷ்டியாக பாகிஸ்தான் துருப்புகள் கிராமப் பகுதிகளுக்குச் சென்று உருட்டி மிரட்டி வந்த சமயம் ஒரு கோஷ்டி சிட்டகாங் பகுதியில் ஒரு வளமான கிராமத்தில் முகாம் செய்ததாம். அவர்கள் திரும்பும் சமயம் கிராமத் தலைவர் சில கோழிகளைப் பரிசு கொடுத்தாராம்.

"இந்தக் கோழிகள் எப்படி இவ்வளவு புஷ்டியாக உள்ளன?" - இது ராணுவத் தலைவரின் கேள்வி.

"மகராஜ்! நாங்கள் கோதுமை சாப்பிடுவதில்லை. ஆனால் கட்டாயமாகக் கோதுமையை எங்களுக்குக் கொடுக்கிறார்கள். நாங்கள் அதைக் கோழிக் குஞ்சுகளுக்குத் தீவனமாகக் கொடுத்து விடுகிறோம்."

"பிடி ராஸ்கலை. மனிதர்களுக்குக் கோதுமை கிடைக்கிறது கஷ்டமாக இருக்கிறது. நீ கோழிக் குஞ்சுகளுக்குக் கோதுமை கொடுக்கிறாயா?" என்று அந்தச் சில்லறை அதிகாரி சொன்னதும் கிராமத்தாருக்கு உதைகள் கிடைத்தன.

அடுத்த தடவை ஒரு ராணுவக் கோஷ்டி வந்தபொழுது கிராமத் தலைவர் உஷாராகி விட்டார். எப்படிக் கோழிகள் மொழு மொழு வென்று ஆகின என்பதற்கு அவர் கொடுத்த பதில்: "துரை அவர்களே! அரிசிதான் ஏதேஷ்டமாக விளைகிறதல்லவா? நாங்கள் உடைத்த நொய்யைக் கோழிகளுக்குப் போடுவோம்."



மேலே: போரில் வீர சொர்க்கம் எய்தி வீர சக்கரப் பதக்கங்களைப் பெற்ற இருவரின் குடும்பத்தினரோடு பாரதப் பிரதமர் அளவளாவுகிறார்.

வலதுபுறம்: டாக்காவில் ஜெனரல் மானெக்ஷாவுக்கு இளைஞர்கள் அளித்த குதூகல வரவேற்பு.

கீழே: இரு தரப்பிலும் உள்ள ராணுவக் கைதிகளுக்கு உறவினர் எழுதிய கடிதங்கள் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆதரவில் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன.

பளார், பளார்! அரிசிப் பற்றாக்குறை இருக்கும்போது கோழிகளுக்கு அரிசியா? கிராமத்தார்களுக்கு மீண்டும் அடி உதை.

அடுத்த தடவை கிராமத் தலைவர் மிகவும் உஷாராகி விட்டார். அதே கேள்வி கேட்கப்பட்டபொழுது அவர் நிதானமாகச் சொன்னாராம்: ''துரையே, உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு இருக்கிறதல்லவா? ஆகையால் தினம் ஒவ்வொரு கோழியையும் கூப்பிட்டு, இரண்டணாக் கொடுத்து விடுகிறோம். அவை தங்களுக்குத் தேவையானவற்றைக் கடைகளில் வாங்கித் தின்றுவிடுகின்றன.''

இந்த ஹாஸ்யத் துணுக்கைச் சொன்ன ஸ்ரீ முகர்ஜியைப் போல் பல தொழில் பிரதிநிதிகள் அங்கு முகாம் செய்திருந்தார்கள். அவர்கள் எல்லோரும் ஒருமுகமாகச் சொன்னது: '' இந்தியர்கள் இந்த நாட்டில் தேவை இல்லை.'' அவர்கள் அவசரப்படுகிறவர்கள் என்று எனக்குத் தோன்றியது. ஏனென்றால், வங்கதேச அரசினர் அலுவலகங்களில் ஆதாரமான பைல்கள்கூட அந்தர்த்தியானமாகிவிட்டன. மணப்பாறை மாட்டுச் சந்தையில் தரகர்கள் தங்கள் கைகளை மறைத்துக் கொண்டு பேரம் பேசுவார்களாம். அதைப் போல் பல இலாக்காக்களில் அதிகாரிகள் மற்றவர் வாயைப் பிடுங்கி நிலவரம் என்னவென்று தெரிந்து கொள்கிறார்கள். இன்று மந்திரிகளாக உள்ளவர்களுக்கு விஷயம் என்னவென்று பிடிபடக் கொஞ்ச காலம் பிடிக்கும்.

ஆரம்பத்தில் வங்கதேச அரசு ஜாக்கிரதையாகத்தான் இருக்கும். ''பாருங்கள். இந்தியா எதற்காக உங்களுக்காகப் பாடுபட்டது என்று தெரிகிறதா? சோழியன் குடுமி சும்மா ஆடுமா?'' என்று பாகிஸ்தான் பிரசாரம் செய்யும். வங்க தேசத்தில் உள்ள பிஹாரி முஸ்லிம்களே இதைச் சொல்வார்கள்.

வங்க தேசத்துக்குத் தேவையான உப்பு, சர்க்கரை, தீப்பெட்டிகள் முதலியவைகளை இந்தியாவின், அரசினர் வியாபார கார்ப்பொரேஷன் சப்ளை செய்யும். வங்க தேசத்தில் சணல் விளைச்சல் அமோகம். கச்சா சணல் இந்திய ஆலைகளுக்குத் தேவை. சணல், தேயிலை முதலியவைகளைக்கூட வங்கதேச அரசு இந்திய அரசின் ஸ்தாபனங்களுக்குக் கொடுக்கும். அதாவது அரசினர் அளவில் வியாபாரம். ஆனால் இது வெகு நாளைக்கு நிலைக்காது. வங்க அரசுக்கு இந்திய விவசாய மந்திரிசபை மேம்பட்ட உற்பத்தி உத்திகளைவழங்க விருக்கிறது. தண்ணீருக்குப் பஞ்சம் இல்லாத நாட்டில் நெல்சாகுபடியில் புரட்சியும் சணல் விளைச்சலில் அமோக வெற்றியும் கிடைக்கப்போகின்றன. அந்தக் கட்டத்தில் கட்டாயம் தனியார்களுக்கு வாய்ப்பு ஏற்படும்.

ஆனால் ஒரு விஷயத்தை மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். வங்க தேசத்தில் யுத்தத்துக்குப் பிறகுகூட 30,000 டன் தினசரிப் பத்திரிகைகளுக்குத் தேவையான காகிதம் இருந்தது. இதை நான் கண்ணால் பார்த்தேன். இருந்தும் அதுபற்றிப் பிரஸ்தாபம் எழுந்த பொழுது காகிதமே கிடையாது என்று வங்கதேச அரசு சொல்லிவிட்டதாகச் சொல்லப்பட்டது.

சணல், தினசரிகளுக்குத் தேவையான தாள்கள், தேயிலை முதலியவைகளை வங்க தேச அரசு டாலர், ஸ்டர்லிங் கொடுத்தால் தான் கொடுக்கும் என்று சொல்லப்பட்டது. ஆகையால் வங்க தேசத்துக்குகந்தது எது என்பதை வங்க பந்து அறிவார். தனக்கு மிஞ்சித் தானே தான தர்மம் ?

வங்கதேச இயக்கத்தில் தகுந்த சமயத்தில் தகுந்த முடிவெடுத்ததுதான் குறிப்பிடத்தக்க அம்சம். இந்த அம்சத்தில் பிரதமர் இந்திரா காந்திக்கு முழு மார்க்குகள் கொடுக்க வேண்டும். கொஞ்சம் பொறுத்தோ அல்லது முன்னதாகவோ செயல்பட்டிருந்தால் நமக்குக் கஷ்டங்கள் உண்டாகியிருக்கலாம்.

வங்க தேசம் சுதந்திர நாடானதால் நமக்கு உண்டான உடனடி அநுகூலம் கிழக்குப் பக்கத்தில் ராணுவம் கொஞ்சம் மூச்சுவிடலாம். எப்பொழுது என்ன நடக்குமோ என்று தயாராக இருந்த இயந்திரம் சற்று ஓய்வு எடுக்கலாம். ஆனால் இதை சுடுகாட்டிவிடும் சீனாவின் போர்க் கோலம்.


சீனா உண்மையில் புரட்சி இயக்கங்களுக்கு மித்திரனா அல்லது ரஷ்யாவா என்பது இப்



தஞ்சை ஜில்லாவில் பிறந்த ஸ்ரீ கே. ஸ்ரீநிவாஸன் கண்டமங்கலம் திரு எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களின் மகன். ஆழ்ந்த அரசியல் கருத்துக்களைத் தெளிந்த தமிழில் எழுதும் இவர் ஆங்காங்கே நகைச்சுவையுடன் சில கிராமியச் சொற்றொடர்களைப் பயன்படுத்திச் சில பிரச்னைகளை விளக்குவதானது கனமான விஷயங்களையும் ஒரு புன்னகையுடன் வாசகர்கள் படித்துக் கொண்டு போக உதவுகிறது. 'இதை என் அப்பாவிடம்தான் கற்றுக்கொண்டேன்' என்கிறார் ஸ்ரீநிவாஸன். கிறிஸ்துவக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்ற ஸ்ரீநிவாஸன், இந்தியன் எக்ஸ்பிரஸின் விசேஷப் பிரதிநிதியாக டில்லியில் இருந்து பணியாற்றி வருகிறார்.

அமெரிக்காவுக்கும், ஐரோப்பிய, தென் கிழக்கு ஆசிய நாடுகள் பலவற்றுக்கும் சென்று திரும்பிய, பரந்த அநுபவம் மிக்க பத்திரிகையாளர். நேபாளம் சிக்கிம் ஆகிய நாடுகள்பற்றி நூல்கள் எழுதியுள்ளார். தலைநகரிலிருந்து இவர் உள்நாட்டு வெளிநாட்டு அரசியலை அலசி எழுதும் கட்டுரைகளைக் கலைமகள் மாதந்தோறும் தாங்கி வருகிறது.

கர்நாடக சங்கீதத்தில் ரொம்பப் பிரியம். இவர் கிராமம் திருவையாறுக்கு அருகில் உள்ளது. சிறுவனாயிருந்தபோது ஒரு சமயம் தியாகராஜர் ஆராதனை விழாவுக்குப் போக வேண்டும் என்ற ஆசையில் காலணா காசு இல்லாமல் வீட்டை விட்டு ஓடிவிட்டாராம். ''அந்தக் காலத்தில் காசு முக்கியமில்லை; சாப்பாட்டுக்கும் பஞ்சமில்லை!'' என்கிறார் அந்தச் சம்பவத்தை நினைவுகூரும் திரு ஸ்ரீநிவாஸன்.



பொழுது தெளிவாகிவிட்டது. சீனா இன்று ரஷ்யாவைத் தன் ஒரே விரோதியாகப் பாவிக்கிறது. ரஷ்யாவுக்கு யாரெல்லாம் நண்பர்களோ அவர்கள் சீனாவுக்கு விரோதிகள் என்பது வாதம். இந்த அடிப்படையில்தான் அசல் புரட்சி நாடு அசல் முதலாளித்துவப் பிரதிநிதி நாடான அமெரிக்காவுக்கு நேசம் காட்டி ஜனாதிபதி நிக்ஸனுக்கு நட்புக் கரம் நீட்டி வரலாறு காணாத வகையில் வரவேற்பு அளித்து முதலாளிகளே வெட்கும்படி விருந்தோம்பியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸனின் ஒரே கவலை — இந்த வருடக் கடைசியில் நடக்கவிருக்கும் தேர்தலில் மீண்டும் வெற்றி பெறுவது. இந்த ஒரே நோக்கத்தை முன் வைத்துக்கொண்டுதான் அவர் ஜன்ம சத்துருவுடன் சல்லாபித்தார். சீனா மீன் வகைகளாகவும் பழ வகைகளாகவும் இறைச்சி வகைகளாகவும் நிக்ஸனுக்குப் படைத்துத் திருப்தி செய்திருக்கலாம். ஆனால் தன் குறியை விடவில்லை. முதல் குறி தைவானுக்கு அமெரிக்கா அளித்து வரும் அபயத்தை நீக்குவது. இந்த நோக்கம் நிறைவேறிவிட்டது. தைவானை நட்டாற்றில் இழுத்து விட்டு விட்டார் ஜனாதிபதி நிக்ஸன். அமெரிக்க படை பலத்தை நம்பி வாழ்ந்து பொருளாதாரத் துறையில் வளம் கண்ட ஜப்பான், தெற்கு கொரியா, தெற்கு வியட்நாம், தெற்கு லாவ்ஸ் எல்லாம், தங்கள் நிர்வாண நிலையை நன்கு உணர்ந்துள்ளன.

நம்மைப் பொறுத்த விஷயம் நிக்ஸன்-சௌ என்-லாய் அறிக்கையில் உள்ள காஷ்மீரத்தைப் பற்றிய வாசகம். சீனா, இந்தியப் படைகள் காஷ்மீரத்தை விட்டு உடனடியாக விலக வேண்டும் என்று உறுமுகிறது. அமெரிக்கா ஒத்துப் பாடுகிறது. காஷ்மீர் சௌவினுடைய தாத்தா நாடு அல்ல. நிக்ஸனின் மாமனார் ஊரும் அல்ல. ஆனால் இதைக் குறிப்பிட்டுள்ளதன் உள் அர்த்தம் தெளிவாகவில்லையா? வங்கதேசத்தில் இருநாடுகளும் ஒன்றும் செய்ய முடியாமல்போய்விட்டது. அதைக் காஷ்மீரத்தில் சரிக்கட்டிவிட வேண்டும்.

இரு நாடுகளுக்கும் ஸ்வீகார மருமான் ஜனாப் பூட்டோ என்ன செய்வதென்று புரியாமல் தடுமாறுகிறார். வங்க தேசத்தை இழந்த மருமானுக்குக் காஷ்மீரத்தைப் பிரித்துக் கொடுத்தால்? அழும் குழந்தைக்குக் கிலுகிலுப்பை போல ஆகாதா?

நாம் வேண்டினாலும் வேண்டாவிட்டாலும் ''குளிர் யுத்தம்'' நம் நாட்டுக்கு வந்துவிட்டது. உலகத்தில் உள்ள மூன்று வல்லரசுகள் விளையாடும் சொக்கட்டானில் இந்தியா ஒரு காயாகிவிட்டது. இதனால் நாம் உஷாராகவே இருந்தாக வேண்டும்.

பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்டு பாகிஸ்தானின் அரசு என்ன செய்ய வேண்டும்? வங்க தேசம் பறிபோவதற்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்து அதைப் புத்திக் கொள்முதலில் எழுதிக் கொண்டு அடுத்தபடியாக இந்தியாவுடன் சகஜ உறவை நாடவேண்டும். இந்திய உப கண்டத்தில் பாகிஸ்தான் — இந்தியா — வங்க தேச சமஷ்டி ஏற்படுவதுதான் முறை என்று அரசியலில் ஊறிய சிந்தனையாளர்கள் சொல்கிறார்கள்.



உண்மை. ஆனால் இது சாத்தியமா? இல்லை. கிராமப்புறங்களில் ஒருவர் மற்றவர் நிலத்தைப் பரிவர்த்தனை செய்து தகராறை முடிப்பது என்று நிர்மானித்தால் அதைக் கலைக்கப் பலர் தயாராவார்கள். அதே போல் இம்மாதிரி சுமுக உறவு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளும் சீனாவும் அமெரிக்காவும்.

அதுமட்டுமா? மேற்கு ஆசிய நாடுகளுக்குத் தாங்கள்தான் அசல் முஸ்லிம்கள் என்ற ஞாபகம். இந்தத் திமிர் காரணமாகத்தான் அவை இதுவரையில் பாகிஸ்தானைக் குறை கூறவில்லை. சமீபத்தில் கூடிய இஸ்லாம் உச்சமட்ட மகாநாடு ஒரு விநோத முடிவை எடுத்தது. அதாவது இஸ்லாம் உச்ச மட்ட மகாநாட்டின் சார்பில் பாகிஸ்தானுக்கும் வங்க தேசத்துக்கும் ஒரு சமாதானக் கோஷ்டி செல்ல வேண்டுமாம். பாவம், பாகிஸ்தான் அவஸ்தையில் மாட்டிக் கொண்டு தவிக்கிறது. அதை ஆபத்திலிருந்து தப்புவிக்க வேண்டும் என்ற தோரணையில் பேசுகின்றன அரபு நாடுகள். யாரோ உழைத்து இறைக்கும் எண்ணெயில் லாபத்தைப் பெற்று, கணக்கற்ற பெண்டாட்டிகளை ஆண்டு, கஷ்டம், துக்கம் என்னவென்று அறியாத மன்னர்களுக்கு வங்க தேசத்தில் நடந்தது என்ன என்றும் தெரியவில்லை போலும்! இதனால்தான் அவர்களின் கண்களில் இந்தியாவும் இதில் சம்பந்தப்பட்டது என்று தோன்றவில்லை.

ஆகவே மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பது தெள்ளத் தெளிவாகி யிருக்கிறது. ஒருபக்கம் வல்லரசுகளின் சதி மற்றொரு பக்கம் மதத்தையே அடிப்படையாக மதம் பிடித்த அரபு நாடுகளின் சதி. எகிப்து சென்ற சில ஆண்டுகளாகத் திவால் என்றாலும் அதற்கு அரபு நாடுகள் தங்கள் கஜானாவிலிருந்து இட்டு நிரப்புகின்றன என்பதை நாம் ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். அரபு நாடுகளுக்கு இஸ்ரேல் ஜன்ம விரோதி. சென்ற வருடம் முதல் இந்தியா இரண்டாவது விரோதி. இந்நிலையில் நாம் மட்டும் ஏன் வாய்ப்பு ஏற்படும்போதெல்லாம் இஸ்ரேலைக் கண்டித்து அரபு நாடுகளுக்கு வால் பிடிக்க வேண்டும்?

சீனாவின் தலைவர் மா சே துங் அதிகாரமும் பலமும் துப்பாக்கிக் குழாயிலிருந்து வளர்கின்றன என்று இருபது வருடங்களுக்கு முன் போதித்தார். சென்ற உலக யுத்தத்தின்போது அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட், ரஷ்யத் தலைவர் ஸ்டாலினுடன் உரையாடிக்கொண்டிருந்தபொழுது ''போப்பாண்டவரும் நேச நாடுகளின் பக்கம் இருக்கிறார்'' என்றாராம். ''நல்லது, போப்பாண்டவர் எவ்வளவு டிவிஷன்கள் (வியூகங்கள்), வைத்திருக்கிறார்?'' என்று கேட்டாராம் ஸ்டாலின். உண்மை என்னவென்றால் தார்மிக ஆதரவு போதாது; இன்று உள்ளதை

விட பலம் கொண்ட ராணுவம் தேவை. நாம் சமாதானப் பிரியர்கள்தான். ஆனால் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் சண்டைக் கோழிகளாயிற்றே! எப்பொழுதும் உஷார் நிலையில் பாதுகாப்புப்படைகள் இருப்பதால் பாதுகாப்புச் செலவு அதிகரிக்கும். இதைத் தவிர்க்க முடியாது.

முடிவில், வங்க தேசப் பிரச்னை தீர்ந்தும், நமக்குப் பிரச்னைகளுக்குக் கணக்கு இடை யாது. 1950–51ல் பிரதமர் நேரு நேபா ளத்தில் ராணுக்களின் அட்டகாசத்தை அடக்கி மன்னர் திரிபுவன் தம் ஆட்சி பீடத்தில் நிலைத்துக் கொள்ளச் செய்தார். மன்னர் கைம்மாறாகப் பாதுகாப்பு, போக்கு வரத்து, வெளி நாட்டு விவகாரங்களை நம் மிடம் ஒப்படைக்கத் தயாராக இருந் தார். நேரு ஜனநாயகப் பிரியர். மற்ற நாட்டின் விவகாரங்களை நாம் மேற்கொள் வது தவறு என்று கருதினார். இது இன்று நில வும் நிலையில் நல்லது என்றே தோன்றுகிறது. ஆனால் வங்க தேசத்தில் உருவாகி வரும் புது ஜனநாயகப் போக்கைப் பலப்படுத்தி அந்நாட்டின் நல்லெண்ணம் நம்மேல் என் றென்றும் இருக்கும்படி செய்வது மத்திய அரசின் கடமை. நம் நாட்டுத் தூதர் என் என்றால் இதோ எண்ணெய் என்று துடியாகப் பாடுபடுபவராக இருக்க வேண்டும். சாதா ரணமாக நமது அயல் நாட்டு மந்திரி சபையில் இம்மாதிரி செயல்படுகிறவர்கள் குறைவு. வங்க தேசத்தை விசேஷநாடாகமதித்து அதில் பிரதமரின் – யார் பிரதமராக இருந்தாலும் சரி – பிரத்தியேக கவனம் இருந்தால் வங்க தேச விடுதலைக்குப் பட்ட பாடு வீணாகாது.

ஷேக் முஜீபுர் ரஹ்மானும் அவருடைய சகாக்களும் நடுத்தர வயதினர். அவர்கள் பல ஆண்டுகள் நாட்டுக்குச் சேவை செய் வார்கள். வங்கங்கள் இன்று இரண்டு. இது அரசியல் உண்மை. ஆனால் கலாசார நோக்கி லிருந்து இரண்டும் ஒன்றாகி விட்டன. இந்த நிலை என்றென்றும் நீடிக்கட்டும்.

ஜெய் பங்களா! ஜெய் ஹிந்த்!



பதின்மூன்றுக்குப் பிறகு இப்போது வேண்டாம்!

எலி போன்ற முக உரு வைக் கொண்டது இச் சிறு பிராணி. அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் மாத் திரம் சுமார் இருபது வகை "ஆப்புஸங்கள்" உள்ளன.

நன்கு வளர்ந்த இப் பிராணி பூனையைவிடப் பெரிய தாக இருக்கும். வாலைக் கொண்டு மரக் கிளைகளைச் சுற்றிப் பிடித்துத் தலைகீழா கத் தொங்கி உணவு உண் ணக் கூடிய திறன் கொண் டது. இவ்வாறு தலைகீழாகத் தொங்கிக் கொண்டு தன் உணவை உண்பது இதற்கு விருப்பமான செயல்.

ஆப்புஸத்தின் தனிச்சிறப்பு என்னவெனில், பெண் பிராணி "கங்காரு" போன்று தன் வயிற்றின் அடிப் பகுதி யில் வரிசையாகப் பைபோன்ற அமைப்புகளைக் கொண்டுள் ளதுதான். இப் பை போன்ற அமைப்பினுள் பால் காம் புகள் காணப்படுகின்றன. தாயினிடத்திலிருந்து வெளி வந்த இளம் குஞ்சுகள் உடன் இப்பையினுள் நுழைந்து அடைக்கலம் பெற்றுப் பால் காம்புக ளில் தன் வாய்ப் பகுதியை ஒட்ட வைத்து இந்நிலை யில் தாய்ப்பாலை உண்டே சுமார் ஆறு வாரங்கள் வரை இருக்கும். குஞ்சுகள் பிறந்தவுடன் தேனீக்கள் உருவத்தை விட அளவில் சிறிய தாகக் காணப்பட்டாலும் தாயின் உடலிலிருந்து அவை வெளிவருவதற்கு முன்னமேயே முழு உருவத்தை அடைந்திருக்கும். பெண்ணின் வயிற்றின் அடிப் பகுதியில் பதின்மூன்று பை போன்ற அமைப்புக்கள் உள்ளன. ஒரு பெண் ஒரு சமயத்தில் பதின்மூன்று முதல் பதினேழு வரையில் இளம் குஞ்சுகளை இடுவதாக அறியப் படுகிறது. பெண் இட்ட குஞ்சுகள் பதின்மூன் றுக்கு மேற்பட்டு இருந்தால் முதன் முதலில் பதின்மூன்று பைகளினுள் சென்று தங்கும். பதின் மூன்று இளம் குஞ்சுகள் தவிர மற்ற குஞ்சுகள் பாது காப்புப் பெறத் தகுந்த இடம் இல்லாத காரணத்தால் இறந்து விடுகின்றன.

ஓரளவு வளர்ச்சி பெற்ற பின்பு தாயின் அடிவயிற்றில் உள்ள பைகளிலிருந்து எல் லாக் குஞ்சுகளும் வெளி வந்து விடுகின்றன. மேலும் பல வாரங்கள் தாயின் கண் காணிப்பிலேயே இருக்கின் றன. தாய் செல்லும் இட மெல்லாம் குஞ்சுகள் அதன் முதுகின் மேல் ஏறி உட் கார்ந்து கொண்டு உடலின் மேல் உள்ள முடிகளைப் பற் றிக் கொண்டு செல்லும். தன் நீளமான வாலின் உதவி யால் தன் தாயின் உடலைச் சுற்றிப் பற்றிக்கொள்வதும் உண்டு.

மிகுந்த பயந்த சுபாவம் கொண்ட இப்பிராணியை இதன் பகை விலங்கு தாக்க நேர்ந்தால் உடனே தரையில் படுத்துக் கண் களை மூடி, நாக்கை வெளியே தள்ளி ஆடாமல் அசையாமல் இறந்ததைப் போன்று காட்சி யளிக் கும். இவ்விதத்தில்தான் தன் பகை விலங்கி னின்று தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுகிறது.

ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஆப்புஸத்தின் தோலில் அடிப்பகுதியில் கொழுப்பு நிறைந்து காணப்படுவதால் அச்சமயத்தில் ஆப்புஸங்கள் இரவில் வேட்டை நாய்களின் உதவியுடன் வேட்டை யாடப்படுகின்றன. தெற்கு வர்ஜீனியாவில் இதன் மாமிசம் அரிதாகக் கிடைக்கக் கூடிய உணவு என்று மதிக்கப்படுகிறது.

பெண்கள் அணியும் கோட்டில் இப்பிராணியின் முடி உபயோகப்படுத்தப்படுவதால் இதன் முடி மிகவும் விலைமதிப்புள்ளது. - அந்தோனி பேபில்



திருமதி பூவம்மா போப்பய்யா





யாருக்கு நன்றி?

கோமதி ஸ்வாமிநாதன்

அது ஒரு சின்னஞ்சிறு கிராமாந்தர ரயில்வே ஸ்டேஷன். காலையில் ஏழரை மணிக்கு அங்கே வந்து நின்ற பாசஞ்சர் ரயில் பல நிமிடங்களாகியும் கிளம்பும் வழியாக இல்லை. பிரயாணிகள் கீழே இறங்கி விசாரித்தார்கள். இஞ்சினில் ஏதோ கோளாறு என்றும் பக்கத்து ஜங்ஷனிலிருந்து வேறு இஞ்சின் வந்து இழுத்துக் கொண்டு போக வேண்டும் என்றும் அதற்குக் குறைந்தபட்சம் நான்கு மணி நேர அவகாசம் பிடிக்கும் என்றும் ஸ்டேஷன் மாஸ்டர் சொல்லி விட்டார்.

கடைசிப் பெட்டியில் ஜன்னலோர ஆசனத்தில் தம் ஆறு மாத தாடியைத் தடவிக் கொண்டிருந்த மாரி முத்துவும் தம் கைப் பையை எடுத்துக் கொண்டு வண்டியை விட்டு இறங்கினார். அவர் நான்கு மணி நேரம் அங்கேயே உட்கார்ந்திருக்கத் தயாராக இல்லை. அவருக்கு அன்று பிற்பகலில் டவுனில் கொஞ்சம் வேலை இருந்தது.


ஒரு மைல் தூரம் நடந்து ஊருக்குள் போய் விட்டால் அங்கே பஸ் வசதி உண்டு என்று ஸ்டேஷன் சிப்பந்தி ஒருவன் சொன்னான். மாரிமுத்துவுக்குப் பசி வேறு. பேசாமல் ஊரை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.


கிராமம் என்று சொல்ல முடியாது. அதைவிடப் பெரியது. ஒரு கடைத் தெரு, கோயில், குளம், தேரடி, பஞ்சாயத்து ஆபீஸ் எல்லாமே இருந்தன. ஒரு சாதாரண வீடு போல் தோற்றம் அளித்த பலகாரக் கடையில் டிபன் சாப்பிட்டுவிட்டுப் பஸ் போக்குவரத்து பற்றி விசாரித்தார். அவர் போகும் திசையில் அப்போதுதான் ஒரு பஸ் போயிருந்தது. அடுத்த பஸ் பதினோரு மணிக்குத்தான்.


மாரிமுத்து கைக் கடிகாரத்தைப் பார்த்தார். எட்டரை மணிதான் ஆகியிருந்தது. கோயில் குளத்தில் குளித்து வேட்டியை உலர்த்திக் கொண்டு சுவாமி தரிசனத்தையும் முடித்துக் கொள்ளலாம் என்று நினைத்தார். மதுரை மாவட்டத்தில் அவர் பல இடங்களுக்குப் போய் இருக்கிறார். ஆனால் இந்த ஊருக்கு அவர் இது வரை வந்ததில்லை. எந்த ஊருக்குப் போனாலும் இருக்கும் அவகாசத்தில் அந்த ஊர்க் கோயிலுக்குப் போய்க் கும்பிடு போட்டு வருவது என்பது அவர் நெடுநாளைய வழக்கம். சமீப காலத்தில் அவர் மனத்தில் குவிந்திருந்த கவலைகளும் அவர் பக்தியுணர்ச்சியைப் பெருக்கியிருந்தன.

மாரிமுத்து தமது ஒரே மகள் கனகாவுக்கு நல்ல பையனாகத் தேர்ந்தெடுத்துத்தான் சிறப்பாகத் திருமணம் செய்து வைத்தார். அவர் கொஞ்சம் பசை உள்ளவர். சொந்த வீடு, நில புலன் எல்லாம் அவருக்கு இருந்தன.

கல்யாணத்தின் போது மாப்பிள்ளை தங்கவேலு நல்ல பையனாகத்தான் இருந்தான். அந்நியன் தான் என்றாலும் அவனைப் பற்றி நன்றாக விசாரித்துக் கொண்டு தான் பெண்ணைக் கொடுத்தார்.







கல்யாணக் கதைகள் — 11

தங்கவேலுக்குப் பட்டணத்தில் வேலை. மாரிமுத்துவே பட்டணத்துக்குப் போய் ஜாகை வசதிகள் செய்து கொடுத்துப் பெண்ணையும் விட்டுவிட்டு வந்தார். ஆனால் மாரிமுத்து சில மாதங்கள்கூட நிம்மதியாக இருக்கவில்லை. ஒரு நாள் கனகா எதிர்பாராதவிதமாகத் தகப்பனாரிடம் வந்து சேர்ந்தாள். அவள் உடலில் இப்போது ஒரு குந்துமணி தங்கம்கூட இல்லை. பத்தாயிரம் ரூபாய் பெறுமான நகைகளை அல்லவா போட்டிருந்தார். எல்லாம் சீட்டாட்டத்திலும் குதிரைப் பந்தயத்திலும் போய்விட்டன. ''அப்பா! அவருக்கு உடனடியாக ஐயாயிரம் ரூபாய் வேண்டுமாம். அதோடு வந்தால்தான் நான் வீட்டுக்கு வரலாமாம். இல்லாத போனால் இங்கேயேதான் இருக்க வேண்டுமாம்'' என்று கனகா அழுது புலம்பினாள். மாரிமுத்துவின் மனம் இளகியது. ஐயாயிரம் ரூபாய்க்கு டிராப்டைக் கொடுத்துப் பெண்ணையும் அனுப்பினார் சென்னைக்கு.

அடுத்த மாதத்திலேயே கனகா மீண்டும் வந்தாள். இனி அவள் சென்னைக்குத் திரும்ப வேண்டிய அவசியமே இல்லை!

'' அப்பா! அவர் நாலு நாட்களாக வீட்டுக்கு வரலே! நான் அவர் ஆபீஸிலே போய் விசாரிச்சேன். அவர் வேலையை ராஜிநாமாப் பண்ணி ஒரு மாசம் ஆகுதாம். அவர் எங்கே போனார்னு யாரும் சொல்ல மாட்டேன் என்கிறாங்க. தட்டுமுட்டுச் சாமானையெல்லாம் விற்று வாடகையைத் தீர்த்துவிட்டு நான் வந்துட்டேன். விசாரிச்சதிலே அவருக்கு ஏகப்பட்ட கடன்னு மாத்திரம் தெரியுது'' என்று கதறினாள்.

மாரிமுத்து மகளுக்கு ஆறுதல் சொன்னாலும் அவர் மனத்துக்குள் ஒருவித பயம் இருந்தது. மாப்பிள்ளை திரும்பும் வரையில் தாடி வளர்ப்பது என்று பிரார்த்தனை செய்து கொண்டார். தாடிதான் வளர்ந்து கொண்டிருந்ததே தவிர தங்கவேலுவின் தடயம் ஒன்றும் கிடைக்கவில்லை.



கோயில் குளத்தில் மாரிமுத்து ஸ்நானத்தை முடித்துக் கொண்டார். வேட்டியும் உலர்ந்தது. கோயிலுக்குள் நுழைந்தார்.

நடுவாந்திரமான கோயில். அந்தக் காலை வேளையில் பக்தர்கள் கூட்டம் அவ்வளவாக இல்லை. ஆனாலும் வெளிப் பிராகாரத்திலிருந்த ஒரு மண்டபத்தில் ஒரு கல்யாணக் கோஷ்டி அமர்ந்திருந்தது. கோயிலில் நடத்துவதாகப் பிரார்த்தனையாக இருக்கலாம் என்று மாரிமுத்து நினைத்துக் கொண்டார்.

கோயில் சுவர் ஓரமாகப் பிராகாரத்தைச் சுற்றி வந்த மாரிமுத்து, அந்தக் கல்யாணக் கோஷ்டியின் மீது பார்வையைச் செலுத்தினார். மாப்பிள்ளைப் பையனும் அந்தப் பதவிக்கான கோலத்துடன் ஒரு பக்கம் அமர்ந்திருந்தான். மாரிமுத்துவின் பார்வை அந்தப் பையன் மீது பதிந்திருந்தது. கண்களைக் கசக்கிக் கொண்டார். இப்போது கண்ணும் கலங்கியது. மனமும் கலங்கியது. மாப்பிள்ளைக் கோலத்தில் தாலி கட்டக் காத்திருப்பவன் தங்கவேலுவேதான் !

விசாரித்ததில் முகூர்த்தத்துக்கு இன்னும் ஒரு மணி நேரம் இருக்கிறது என்று தெரிந்தது. மாரிமுத்து நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டார்.

இந்தக் கல்யாணத்தை எப்படியும் நிறுத்தியாக வேண்டும். எப்படிச் செய்வது? அந்த மோசக்காரன் ஒரு மனைவி இருக்கும்போதே இன்னொரு பெண்ணை வஞ்சிக்கப் போகிறான்!

தாம் நேரில் போய்க் கூச்சல் போடலாம்! ஆனால் அவர்கள் நம்ப வேண்டுமே! யாரோ தாடிப் பிச்சைக்காரப் பைத்தியம் என்று கட்டிப் போட்டு விட்டால்?

போலீஸ் ஸ்டேஷனில் போய் உதவியை நாடலாம். அவர்களும் முதலில் இவர் கூறுவதை நம்ப வேண்டும். அப்படியே நம்பி வந்தாலும் கோயிலுக்குள் ஏதாவது கலாட்டா வரும். தங்கவேலுவின் விரோதம் நிரந்தரமாகிவிடும். அப்புறம் கனகாவால் அவனுடன் எப்படி வாழ முடியும்?

ஊர்ப் பெரியவர்களின் உதவியை நாடலாம்! ஆனால் அவர்களும் நம்ப வேண்டுமே?

சில நிமிடங்கள் வரையில் மாரிமுத்துவுக்கு ஒன்றுமே ஓடவில்லை. அப்புறம் பளிச்சென்று ஒரு யோசனை. கோயில் தர்மகர்த்தாவைப் பார்த்து நிலைமையை அவரிடம் விளக்கி எப்படியாவது இந்தக் கல்யாணத்தை நிறுத்த முதலில் வழி பார்த்தால்....?

அறிவிப்புப் பலகையில் கோயில் நிர்வாக அதிகாரியின் பெயர் வரதராஜன் என்று கண்டிருந்தது. வேகமாகக் கடைத்தெருவுக்கு வந்து வரதராஜன் இருப்பிடத்தை விசாரித்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாகப் போனார். அவர் அதிர்ஷ்டம் நிர்வாக அதிகாரி வீட்டில் இருந்தார்.

வரதராஜன் ஓர் இளைஞன். பொறுமையுடன் மாரிமுத்து சொன்னதையெல்லாம் கேட்டுக் கொண்டார். அவருக்கே ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. "ஐயா ! இது ரொம்ப அக்கிரமமான விஷயம்! இந்த மோசடியைத் தடுத்தாக வேண்டும். நான் உதவி செய்கிறேன். வாருங்கள், கோயிலுக்குப் போவோம். நீங்கள் என் அறைக்குப் பக்கத்தில் இருக்கும் மற்றோர் அறையில் அமர்ந்து நாங்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருங்கள். நாங்கள் கூப்பிடும்போது நீங்கள் வந்தால் போதும். துணைக்கு என் நண்பர் போலீஸ் சப் - இன்ஸ்பெக்டரை மஃப்டியில் அழைத்து வருகிறேன். கிளம்புங்கள்" என்றார் வரதராஜன்.

நாதகரக்காரர்கள் அமர்க்களமாய் வாசித்துக் கொண்டிருந்தார்கள். வரதராஜன் கோயில் அர்ச்சகர் மூலம் தங்கவேலுவை மாத்திரம், ஏதோ கோவிலுக்கான கட்டணம் கட்டும் சாக்கில் வரவழைத்தார். சப் - இன்ஸ்பெக்டர் போலீஸ் உடுப்புக்குப் பதில் வேட்டியும் சட்டையுமாக ஒரு மூலையில் பேப்பர் படித்துக் கொண்டிருந்தார்.

" வாங்க சார் ! உட்காருங்க !" என்று தங்கவேலுவை வரவேற்றார் வரதராஜன். தங்கவேலு அமர்ந்தவுடன், "ஒன்றுமில்லே! உங்களை நான் மெட்ராஸிலே சந்திச்சிருக்கிறேன்.....! தங்கசாலைப் பக்கத்திலே உங்க முதல் மனைவி பாவம்! நல்லா இருந்தாங்களே? என்ன ஆச்சு?" என்றார் அனுதாபக் குரலில்.

தங்கவேலு பதற்றத்துடன் எழுந்திருந்தான். "மன்னிக்கணும், சார் ! ஏதோ ஆள் மாறாட்டம்! நீங்க சொல்ற ஆள் நான் இல்லே" என்று கிளம்பினான்.

"மிஸ்டர் தங்கவேல் ! என்னங்க அப்படிச் சொல்லிட்டீங்க? உங்க மாமனார் மாரிமுத்துவைக்கூட எனக்குத் தெரியுமே!"

"நான்சென்ஸ் !.... இதெல்லாம் என்ன? கோயிலிலே கல்யாணம் பண்ணக் கூடாதுன்னு சொல்றீங்க! நாங்க வெளியிலே போய்ப் பண்ணிக்கிறோம். அநாவசியக் கேள்விகள் எல்லாம் எதற்கு?"

சப்-இன்ஸ்பெக்டர் இப்போது குறுக்கிட்டார். "என் மிஸ்டர், தங்கவேல்! இது இரண்டாவது கல்யாணமா? மூன்றாவது கல்யாணமா?" என்றார்.

"நீ யாரையா கேட்க? நான் ஏழு கல்யாணம் பண்ணிப்பேன்!" என்றான் தங்கவேலு.

"நான் யாரா? இந்த ஊர்ப் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்" என்றாரோ இல்லையோ, தங்கவேலு ஆடிப் போய்விட்டான்.

இப்போதுதான் வரதராஜன் மாரிமுத்துவைக் கூப்பிட்டார். மாரிமுத்துவைப் பார்த்ததும் பிசாசைப் பார்த்தது போலிருந்தது தங்கவேலுவுக்கு.

ஆனால் அவன் எதிர்பார்த்ததற்கு மாறாக மாரிமுத்து நயமாகப் பேசினார். இந்தக் கல்யாணம் நிற்க வேண்டும். ஆனால் அதன் காரணம் வெளியில் தெரியக் கூடாது. தெரிந்தால் தங்கவேலு குட்டு உடைபட்டு அவமானப்படும்படியாகும். அப்படி நேரக் கூடாது. இது மாரிமுத்துவின் யோசனை. 'இந்தக் கல்யாணம் நிற்கக் கூடாது. தங்கவேலுவுக்குப் பதிலாக வேறு மாப்பிள்ளை வேண்டும்.' — இது தர்மகர்த்தா யோசனை.

இன்னும் இருபது நிமிடங்கள் பாக்கி முகூர்த்த நேரத்துக்கு ! இன்ஸ்பெக்டர் தங்கவேலுவைப் பார்த்தார். "மிஸ்டர், தங்கவேல்! உங்களுக்குக் கல்யாண வயசிலே தம்பி யாராவது இருக்கிறானா? அவன் இங்கே வந்திருக்கிறானா?" என்றார்.

''இருக்கான், சார்! வந்தும் இருக்கான்! ஆனால் அவன்....''

''அவனுக்குத்தான் இப்போ கல்யாணம்! நீங்க மரியாதையா ஒதுங்கிக்கிடுங்க ! நான் ஏற்பாடு பண்ணறேன். இப்போ நீங்க மணப் பலகையிலே போய் உட்காரலாம். தாலி கட்டறதுக்கு முன்னாலே ஒருத்தருக்குத் திடீர்னு ஆவேசம் வரும் ! அவரு இந்தக் கல்யாணத்தைத் தடை செய்வாரு ! நீங்க எழுந்திருந்து 'என் தம்பி செய்துக்க லாமா'ன்னு கேட்பீங்க. சாமி வந்தவரு தலையை ஆட்டுவாரு! லபக்னு உங்க தம்பியைப் பிடிச்சுத் தாலி கட்டச் சொல்லுங்க ! அப்புறம் உங்களை நான் மாரிமுத்துசார் கிட்டே ஒப்படைச்சுடுவேன். நீங்க ஏதாவது தகராறு பண்ணினீங்களோ, தாலி கட்டற துக்கு முன்னாலே உங்களைக் கைது பண்ணி அவமானப்படுத்திப்பிடுவேன்!'' என்று வழி காட்டினார் இன்ஸ்பெக்டர்.

பிராகாரத்தின் பக்கம் போய்க் கொண்டிருந்த அந்த நாட்டுப்புற ஆசாமிக்கு இப்படி ஆவேசம் வந்து சாமி ஆடும் என்று கல்யாண மண்டபத்தில் இருந்தவர்கள் யாரும் எதிர் பார்க்கவில்லை. ''டேய் ! தொடாதே, தாலியை! உனக்கு இன்னும் வாழ்வு ஆறு நாட்கள்தான்! மகமாயீ! இந்தப் பொண்ணைக் காப்பாற்று !.... அல்பாயுசு கையிலே ஒப்படைக்காதே !'' என்று அமர்க்களமாய் ஆடிவிட்டார் அந்த ஆசாமி. வரதராஜனின் மாமா, பழைய காலத்து நாடக நடிகர் என்று யாருக்கும் தெரியாது.

தங்கவேலு பதறி எழுந்தான். ''மகமாயீ! ஐயனாரே! குட்டிக் கறுப்பா.... என் தம்பி தாலி கட்டலாமா?'' என்று சாமியாடி காலில் விழுந்தான்.

''இந்தத் தாலியை அவன் கட்டினால் நீயும் பிழைச்சுக்குவே! உன்னையும் ஆத்தா காப் பாத்துவா !'' என்று ஆசீர்வதித்தார் சாமி யாடி. தங்கவேலு குபீரென்று தம்பி கதிர் வேலுவைப் பிடித்து அவன் கையில் தாலி யைக் கொடுத்துத் தானே அவன் கரங்களை மணப் பெண் கழுத்தைச் சுற்றிக் கொண்டு வரச் செய்து கட்டச் செய்தும் விட்டான். மேளக்காரர் நடப்பது புரியாமல் கெட்டி மேளம் அடித்துவிட்டார்.

மாரிமுத்துவுக்கு எல்லாம் ஒரே பிரமிப் பாக இருந்தது. தைரியமாக முன் வந்து உதவிய தர்மகர்த்தாவுக்கு நன்றிக்கடனா? இல்லை, தத்ரூபமாக யாருக்கும் சந்தேகம் எழாமல் சாமியாடிய அந்த நடிகருக்கு நன்றிக்கடனா? யாரை வாழ்த்துவது ?

ஆஹா! முதலில் நாம் அந்த இஞ்சினுக் கல்லவா நன்றி செலுத்த வேண்டும்? அந்த ரயில் இஞ்சின் மாத்திரம் பழுதடைந்து நிற் காமல் இருந்திருந்தால் இந்த ஊருக்குள் வந் திருக்க முடியுமா ? இந்தக் கல்யாண ஏற் பாடுகளைப் பார்த்திருக்க முடியுமா ?

இனி தப்பு வழிக்குப் போவதில்லை என்று தங்கவேலு கோயிலை வலம் வந்து மாரிமுத்து வுக்குச் சத்தியம் செய்து கொடுத்தான், வரத ராஜன், இன்ஸ்பெக்டர் ஆகியோர் முன்னிலை யில். அதே நேரத்தில் மறு வாரமே தங்க வேலுவையும் கனகாவையும் இதே கோயி லுக்கு அழைத்து வந்து தரிசனம் செய்து வைக்கிறேன் என்று பிரார்த்தனை செய்து கொண்டார் மாரிமுத்து.

(சம்பவங்கள் உண்மை; பெயர்கள் மட்டுமே மாற்றப்பட்டுள்ளன.)



''என்ன வாட்ச்மேன் அண்ணே! முதலாளி கிட்டே நீங்க சம்பளம் அதிகம் வேணும்னு கேட்ட துக்கு அவர் தர முடியா துன்னு சொல்லிட்டா ராமே?''


''ஆமாண்ணே; அதை நினைச்சாத்தான் எனக்குத் தூக்கம் தூக்கமா வருது!''

பட்டாடி அடிபட்டார்!

இளவரசர் பட்டாடி தம் பூட்ஸ் களைத் துடைத்துச் சுத்தமாக வைத்துக் கொள்ள மறந்ததால் இளமையில் பிரம்பினால் அடி பட்டார்! இதனால் உடல் வருந்தி உழைப்பது அகௌரவம் இல்லை என்ற மனப்பான்மை அவருக்கு ஏற்பட்டது. ''உழைப்பு உடலுக்குச் சிரமத்தைத் தரலாம். ஆனால் மண்டைக் கனம் ஏறுவதை அது தவிர்க்கும்'' என்கிறார் பட்டாடி.

-பி. எஸ். எம்.





திருடனை வென்றார்!

ஒலிம்பிக் ஓட்ட வீரர் மில்கா சிங் வீட்டுக்கு ஒரு திருடன் வந் தான். விழித்துக்கொண்ட மில்கா சிங் அவனைத் துரத்த ஆரம்பித் தார்; ஆனால் பிடிக்கவில்லை, பந்தயங்களில் ஓடிய ஞாபகத்தில் திருடனைத் தாண்டி முன்னால் ஓடிச் சென்று விட்டார். திருடன் தப்பி விட்டான்!

இது இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி யில் ஆசிரியர் குஷ்வந்த் சிங் எழுதிய ஜோக்! —கே. ஆர்.



'லஞ்ச ஊழல் எங்கே இருக்கிறது நிரூபியுங்கள் பார்க்கலாம்' என்கிறார் நமது முதல்வர். மக்களில் ஒவ்வொருவருமே லஞ்ச ஊழலைப் பார்க்க நேரிடுகிறது. ஆனால் அதை அவர்கள் எப்படி நிரூபிக்க முடியும்? ஒரு பத்திரிகாசிரியர் ஒரு நாடகத்தில் எழுதியிருந்தது போல் ஒவ்வொரு காரியத்துக்கும் ஒரு ரேட், ஒவ்வொருவருக்கும் ஒரு ரேட் வைத்திருக்கிறார்கள். மக்களின் வரிப் பணத்தை மாதா மாதம் சம்பளமாகப் பெற்றுக்கொண்டு அதற்கீடாகச் செய்யும் வேலைக்குத்தான் மேற்கொண்டு ரேட்டும் வைத்திருக்கிறார்கள். தானாக நடக்கக்கூடிய, நடக்க வேண்டிய காரியங்களுக்குத்தான் அவர்கள் லஞ்சம் வாங்குகிறார்கள். சம்பந்தப்பட்டவர்களிடமே நேரில் இது நியாயமா என்றால் ''காரியமாக வேண்டுமே?'' என்கிறார் ஒருவர்; மற்றொருவர், ''பெரிய மகாத்மா காந்தி! நியாயம் பிளக்க வந்து விட்டாய்'' என்று ஏளனம் செய்கிறார். இவ்வளவும் மேலே உள்ளவர்களுக்குத் தெரியாமலா நடக்கிறது? கண்டும் காணாதது போல் நடந்து கொள்கிறார்கள். புகார் செய்பவர்களிடமே, 'எப்படி வாங்கினார், எங்கே வாங்கினார், சாட்சி இருக்கிறதா?' என்ற கேள்விகளைத் தொடுப்பார்கள் போலிருக்கிறது. அவைகளை யெல்லாம் நிரூபிக்க மக்கள் ஒவ்வொருவரும் சி.ஐ.டி.யா? எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தபோதிலும் லஞ்சத்தை ஒழிக்கத் தீவிர நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமே ஒழிய, மேல் மட்டம் முதல் அடிமட்டம் வரை லஞ்ச ஊழல் புழுவாய் நெளிவதை நன்கு அறிந்து கொண்டும், ''எங்கே இருக்கிறது லஞ்ச ஊழல்? 57லிருந்து விசாரணையை வைத்துக் கொள்வோமா? 47லிருந்து வைத்துக் கொள்ளுவோமா? உங்கள் ஆட்சியிலே மட்டும் லஞ்ச ஊழல் இல்லையா?'' என்று லஞ்சம் வாங்குபவர்களுக்குத் தெம்பு ஊட்டுவது போன்று பேசுவது நாலரைக் கோடி மக்களின் (லஞ்சம் வாங்குவோர் உட்பட) முதல்வர் என்ற ஸ்தானம் வகிப்பவருக்கு அழகா?

பரமக்குடி,
29–2–72 வே. தருமராஜன்

தமிழ்நாடு அரசு சட்டசபையில் உபரி பட்ஜெட் தாக்கல் செய்ததற்காகக் கழகத்தவர்கள் விழாக் கொண்டாட விருக்கிறார்கள். உபரி பட்ஜெட் எப்படி வந்தது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த வருடம் மதுத் துறை மூலமாக அரசாங்கத்துக்குப் பல கோடி ரூபாய் வரவு. இந்தப் புது வருவாய் இல்லையாயின் நமக்கு உபரி பட்ஜெட் இல்லை. உபரியாய்க் கிடைத்த சுமார் இரண்டரைக் கோடி ரூபாய்க்காக எண்ணற்ற ஏழை எளிய குடும்பங்களில் உள்ள பெண்கள் கண்ணீரும் கம்பலையுமாக விம்மி நிற்கிறார்களே? நாம் எப்போது ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பது?

புளியங்குடி,
8–3–72 இ. நாராயணப் பெருமாள்

தமிழக விவசாயிகளின் ஊக்கத்தினால் இந்த வருஷம் தமிழகம் நெல் உற்பத்தியில் சிறப்பிடம் பெற்றுள்ளது. மகிழ்ச்சிக்குரிய விஷயம். அரசாங்க அதிகாரிகள் சரியான ஒத்துழைப்பை விவசாயிகளுக்குக் கொடுத்தால் இன்னும் அதிக அளவு உற்பத்தி செய்யலாம். அவர்களின் அலட்சியப் போக்குக்கு ஒரு சான்று தருகிறேன். மாயூரம் தாலுகாவில் உள்ள சேத்திரபாலபுரம், அரையபுரம், மல்லியம் நிலச் சொந்தக்காரர்கள் ஒரு டஜன் பம்பு செட்டுகள் நிறுவி 47 மாதங்களாகியும் மின்சார இணைப்புக் கொடுக்கப்படவில்லை. மின்சார இணைப்புக் கொடுக்குமாறு பலமுறை வற்புறுத்தியும் அவர்கள் கவனிக்கவில்லை. நிலச் சொந்தக்காரர்களின் கடுமையான முயற்சியால் சென்ற வருஷம் கம்பங்கள் மட்டும் ஊன்றப்பட்டன. தேவையான அளவு டிரான்ஸ்பார்மர்கள் இல்லாதது தான் காலதாமதத்துக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. வரும் கோடையிலாவது மின்சார இணைப்புக் கொடுத்தால் மின் கட்டணம் மூலம் அரசுக்கு வருவாய் கிடைப்பதோடு மூன்று போகம் விளைவிக்க எங்களுக்கும் சௌகரியமாக இருக்கும் என்பதைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

அரையபுரம்,
7–3–72 பி. விசுவநாதன்

ஓர் இந்திய உள்ளம் எழுதும் கடிதம் இது. ''அறிவெழுச்சி'' என்ற துண்டுப் பிரசுரம் படிக்க நேர்ந்தது. 1–3–72 இதழில் அண்ணல் காந்தியடிகளைப் பற்றி இழிவாகவும் பண்பாடு இல்லாத நிலையிலும் 'பணக்காரர்களுக்கு வால்பிடித்த காந்தி' என்ற அர்த்தத்துடனும் எழுதப்பட்டுள்ளது. நேரிடையாகப் பிரிவினை கோருகிறது. ஒரு கட்டிடம் கட்டுவது கஷ்டம். கட்டிய பின் இடிப்பது சுலபம். பல கஷ்டங்களுக்கு இடையில் அமைத்த ஒருமைப்பாட்டைச் சிதைக்க முயற்சி நடக்கிறது. இது கம்யூனிஸ்டுகளின் வேலை எனவும் தோன்றுகிறது. மாநில சுயாட்சி என்று தி.மு.க.வினர் குரல் கொடுப்பதை கம்யூனிஸ்டுகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு ஒரு படி மேலே போய்க் கூச்சலிட்டு இந்திய ஜனநாயகத்துக்கே குழி பறிக்கப் பார்க்கிறார்கள். அரசு விழிப்புடன் இருந்து கடமையாற்றட்டும்!

ஒன்பத்துவேலி
7–3–72 கி. கிருஷ்ணமூர்த்தி

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam


ANNOUNCING!
The sale of
BLENDED AND FANCY FABRICS
made by mixing cotton and
GRASIM STAPLE FIBRE
from to-day at
AKASH-DEEP, SANDHURST BRIDGE, CHOWPATTY
• Attractive Fancy Dress material for ladies
• Immaculate Bush Shirtings for gents
• Decorative Tapestry and Curtain materials
• Priced cheaper than cotton fabrics
GWALIOR RAYON SILK MFG. (WVG.) CO. LTD., BIRLAGRAM, NAGDA (M.P.)

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon
இலங்கையில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)